# பாச்சா



கலைமாமணி

**விக்கிரமன்**

ON
RA

## நூல் விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : பாச்சா |
| நூலாசிரியர் | : **விக்கிரமன்** |
| மொழி | : தமிழ் |
| பொருள் | : சமூக நாவல் |
| முதற் பதிப்பு | : ஆகஸ்ட் 2012 |
| உரிமை | : ஆசிரியருக்கே |
| தாள் | : 13.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : 18.5 செ.மீ × 12.5 செ.மீ |
| எழுத்து | : 12 புள்ளி |
| பக்கங்கள் | : 112 |
| விலை | : ₹ 50/- |
| நூல் வெளியீடு | : *யாழினி பதிப்பகம்*<br>பு.எண் 18, அம்பர்சன் தெரு<br>முதல் தளம், குறளகம் எதிரில்,<br>பிராட்வே, சென்னை-600 108.<br>தொ.பேசி. 25369892, 25363186 |
| அச்சிட்டோர் | : **தி நெல்லை பிரிண்டர்ஸ்,**<br>தண்டையார்பேட்டை, சென்னை |
| கணினி அச்சு | : **ஆனந்தி கணினியகம்,**<br>சென்னை-2, 9884 333 630 |


## பாச்சா - என் அறிமுக உரை

பெயர் புதியதாக, விசித்திரமாக இருப்பதாகச் சிலர் நினைக்கக் கூடும். நாராயணனை 'நாணு' என்றும் கிருஷ்ணசாமியைக் 'கிச்சா' என்றும் பெயரைச் செல்லமாகவும், குறுக்கியும் அழைப்பது போல் பார்த்தசாரதியைப் 'பாச்சு', 'பாச்சா' என்றும் அழைப்பது சிலர் குடும்பத்தில் வழக்கம்.

நம் கதைத் தலைவர் 'பாச்சா' விசித்திரமான குணமுடையவர். அவருடைய நடவடிக்கைகளை இறுதிவரைப் படிப்பவர்களுக்குப் பெயர்க்காரணம் புரியும். இப்படியும் ஒரு விந்தை மனிதரா என்று நினைப்பார்கள்.

பார்ப்பவர்களுக்கு ஊருக்கு உபகாரி போல் நடந்து கொண்டிருக்கிறார். தான் செய்வது சரியில்லை என்று நினைப்பதில்லை. வாழ்க்கையை எப்படியோ 'ஓட்டி' வந்திருக்கிறார். 'ஆட்டைத் தூக்கி மாட்டில் போடுவதும் மாட்டைத் தூக்கி ஆட்டில் மாற்றுவதும்' என்பார்களே அதைப் போன்ற குணமுடைய விசித்திரப் பிரகிருதி பாச்சா!

அவருடைய முழு நடவடிக்கைகளைக் கதைச் சம்பவங்களைப் போல் பிறரைக் கடைசி வரையில் ஏமாற்றி வந்தது ஒரு புறமிருக்க, வாழ்க்கையில் 'அந்தஸ்து' 'சரிசமம்' என்று கருதித்தன் வீட்டிற்கு எதிர்வீட்டுக்காரரையே தரக் குறைவாகப் பாச்சா நினைக்கும்போது நமக்குப் பாச்சா மீது வெறுப்பு ஏற்படுகிறது. அவர் மனைவிக்குச் சொல்லவும் முடியவில்லை; வெறுக்கவும் முடியவில்லை.

'காதல்' இல்லாத ஒரு கதை, வாய்ப்பந்தல் போடுவதும் வாய்ச்சொல் வீரராக நடப்பதும் அவர் பிறரை நம்புமாறு செய்வதும் ஒரு 'கலை' தான். இறுதியில் 'பாச்சா' புதினத்தின் உச்சக் கட்டம் வர வேண்டுமே; நமக்குத் திக்திக்கென்று, இதயம் எதிர்பார்ப்பால் பரபரக்க வேண்டுமே – அதைப்போன்ற நிகழ்ச்சி அவருக்கே நேர்ந்த பிறகு தன் நடவடிக்கையே தன்னை திகைக்க வைக்கிறது. தான் ஏமாற்றப்பட்டோம் என்று வேதனைப்படுகிறார்.

பாச்சா கற்பனைப் பாத்திரமல்லர்; அவரைப்போன்ற குணமுடைய பல்கதை மாந்தர்களைப் பார்த்திருக்கிறோம். நான் பல ஆண்டுகளாக 'பாச்சா' போன்றவர்களை வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன்.

நானே ஏமாந்தச் சம்பவங்கள் உண்டு. 'பைனான்ஸ்' விவகாரத்தில் பாச்சாவை நம்பிக் கழுத்தறுபட்டச் சில சம்பவங்களை மட்டும் கதையில் கற்பனையாகச் சேர்ந்திருக்கிறேன்.

என் இந்த கதைப் போக்குத் தங்களுக்குப் பிடித்திருக்கும் என நம்புகிறேன். வரலாற்றுப் புதினங்களுக்கு இடையே இதுபோன்ற குணச்சித்திரப் பாத்திரக் கதைகளையும் எழுதியுள்ளேன்.

இந்தப் புதினத்தை வெளியிடமுன் வந்த **'யாழினி'** பதிப்பகத்தாருக்கு என் நன்றி.

சென்னை–33

**விக்கிரமன்.**

# பாச்சா

## 1

மரகதம் எங்கெல்லாமோ தேடிப் பார்த்தாள். எட்டுப் பைசாதான் கிடைத்தது. இன்னும் 7 பைசா இருந்தால் தன் மகளிடம் அவள் கொடுத்து விடுவாள். அன்றையக் காலைச் செய்தித்தாளைத் தன் மகள் தங்கம் படித்துப் பார்த்து 'வான்டெட்' காலத்தில் வந்திருக்கும் வேலை ஒன்றுக்கு விண்ணப்பம் போடுவதற்காக அந்தக் காசு தேவை. அவள் தாயின் அருகே கவலைக்குறியோடு நின்று கொண்டிருந்தாள். தபாலில் கட்டு எடுப்பதற்கு இன்னும் அரை மணி நேரம் தான் இருந்தது. அதற்குள் மூன்றாவது தெருவிலுள்ள தபால் ஆபீசுக்குச் சென்று ஸ்டாம்பு வாங்கி ஒட்டிப் போட வேண்டும்.

"நீயும்தான் தினம் பேப்பர் வாங்காத நாளில்லை. அதில் வரும் 'வான்டெட்' காலத்தைப் பார்த்து விண்ணப்பம் போடாத நாள் இல்லை. உன் அதிர்ஷ்டமும் என் அதிர்ஷ்டமும் ஒன்றாகத்தான் இருக்கிறது" என்று மரகதம் சலித்துக் கொண்டாள்.

"கவலைப்படாதே அம்மா, திடீரென்று ஒரு நல்ல இடத்தில் வேலைக்கு வா என்று எனக்கு உத்தரவு வரத்தான் போகிறது. அப்பொழுது நீ பட்ட கஷ்டங் களுக்கு வடிவு வரத்தான் போகிறது" என்று உற்சாகத்துடன் தங்கம் கூறினாள். ஆனால், மரகதத்திற்கு என்னவோ கவலைக்குறி இன்னும்

குறையவில்லை. தன் மகள் அவசரம் அவளுக்குத்
தெரியும். அவளைச் சற்று இரு என்று சொல்லிவிட்டு
அடுத்த போர்ஷனில் குடியிருக்கும் மாமியிடப்
சில்லரைக் கடன் கேட்பதற்காகச் சென்றாள்.

கூடியவரையில் மரகதம் யாரிடமும் கடன்
கேட்காமல் கௌரவமாகத்தான் காலத்தைத் தள்ளி
வந்திருக்கிறாள். எப்பொழுதாவது காசு தட்டிப் போகும்
என்றால் அப்பொழுது பல்லைக் கடித்துக் கொண்டு
காலம் தள்ளுவாள். ரொம்பவும் முடியாமல் போகும்
நிலையில்தான் அவள் அடுத்த போர்ஷனில்
குடியிருப்பவர்களை ஏதாவது கேட்கச் செல்வாள்.
அதுவும் தன் மகள் தங்கத்திற்காகத்தான் இருக்கும்.

மரகதம் வரும்பொழுதே கடன் கேட்பதற்கத் தான்
வருகிறாள் என்பதை அந்தக் குடித்தனக்காரி தெரிந்து
கொண்டுவிட்டாள். மரகதம் வாயை திறப்பதற்கு
முன்பாகவே, “காலையிலே வெளியே போன பையன்
இன்னும் காணோம், பத்து ரூபாய் கொடுத்து
அனுப்பினேன். கடையில் சாமான் வாங்கிக்கொண்டு
அவசரமாக சில்லறையைக் கொண்டுவாடா என்று.
இன்னும் வரவில்லை, கையிலோ காலணா இல்லை”
என்று முன் ஜாக்கிரதையாக, ‘இல்லை’ப்பாட்டை
பாடிவிட்டாள். மரகதத்திற்கு முகம் சிறுத்து விட்டது.

“மாமி, நான் பெரிதாக ஏதோ, கடன் கேட்க
வந்துவிட்டேன் என்று நினைக்காதீர்கள். ஒரு எட்டு
பைசா இருந்தால் கொடுங்கள். நான் நாளைய தினம்
தந்து விடுகிறேன்” என்றாள்.

குடித்தனக்காரி அம்மாளுக்கு மட்டும் வியப்பாக
இருந்தது. “எட்டு பைசாவா?” என்று ஆவலுடன்
கேட்டாள்.

15 பைசா ஸ்டாம்பு வாங்க வேண்டும், ஏழு
பைசா இருக்கிறது. உங்களிடம் சொல்வதற்கு எனக்கு



என்ன வெட்கம்? தினம் தபாலுக்கும் ஆங்கில நியூஸ்
பேப்பர் வாங்குவதற்காகவுமே காசு எடுத்து வைத்துக்
கொள்ள வேண்டியிருக்கிறது என்கிறாள்.

மிக ஆவலோடு மரகதத்தின் வாயைக் கிளறி
இன்னும் செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும்
என்ற ஆவலில் “தினம் எதற்காக உங்கள் பெண்
பேப்பர் விலைகொடுத்து வாங்கிப் படிக்கிறாள். அப்படி
என்ன பேப்பர் படிக்காவிட்டால் தலை வெடித்தா
போய்விடும்? என் வீட்டிலே யாராவது அப்படி வாங்கிப்
படிக்கிறார்களா பார்த்தீர்களா? என் வீட்டுக்காரருக்கு
இதெல்லாம் பிடிக்காது. பேப்பர் படிக்க வேண்டு
மென்றால் ரீடிங் ரூம் இருக்கவே இருக்கிறது” என்று
ஒரு சிறு உபதேசமே செய்தாள்.

மரகதத்திற்கு என்ன சொல்வது என்று தெரிய
வில்லை. மரகதத்தின் கணவர் ஒரு பத்திரிகை ஆபீசில்
வேலையாய் இருந்தவர். தங்கத்துக்கு ஏழு வயது
நடக்கும் போது அவர் இருமல் நோயால் இறந்து
விட்டார். ஒரு செய்திப் பத்திரிகையை விலை கொடுத்து
வாங்குவதைப் பற்றி இப்படி மற்றொருவர் குறை
சொல்வது அவருக்குப் பிடிக்காது. தினசரி காய்கறி
வாங்குவதும், காப்பி குடிப்பதும் எவ்வளவு முக்கியமோ
அவ்வளவு முக்கியம் பத்திரிகை படிப்பதும்
விலைகொடுத்து வாங்கிப் படிப்பதும் என்று வற்புறுத்திச்
சொல்வார். அதையெல்லாம் இப்போது யார்
கேட்கிறார்கள்? இப்பொழுது 8 பைசாக் கடன் கேட்க
வந்ததற்காகக் குடித்தனக்காரி குறை சொல்லும்
பொழுது எதிர்த்துப் பேசுவதற்கு மரகதத்திற்குத்
தோன்றவில்லை. இருந்தாலும் தன்னுடைய
நிலைமையை விளக்க வேண்டி, “எங்களுடைய
இன்றைய நிலையில் நாங்கள் பத்திரிகையை காசு
கொடுத்து வாங்கக் கூடாதுதான். பக்கத்திலுள்ள ரீடிங்

ரூமிற்குப் போய்ப் படித்துவிட்டு வா என்று நான் எவ்வளவோ தடவை சொல்லியிருக்கிறேன். ஆனால் தனியே ஒரு பெண் ரீடிங் ரூமுக்குப் போய்ப் படிப்பதற்கு வெட்கமாய் இருக்கிறது என்று தங்கம் சொல்கிறாள். அதுவும் உண்மைதான். ஒரு பேப்பரை ஒரு மணி நேரமாக ஓர் எழுத்துக் கூட விடாமல் மற்றவர் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அவள் எவ்வளவு நேரம்தான் அங்கே தனியாக நின்று கொண்டிருப்பாள். இன்னும் வேறு யாராவது பெண்கள் அங்கே படிக்க வந்தால் இப்படிக் காசு கொடுத்து பேப்பர் வாங்கும் கஷ்டம் எங்களுக்கு இருக்காது என்று மரகதம் சொல்லும்பொழுது குடித்தனக்காரி குறுக்கிட்டு, "அது என்ன? பேப்பர் வாங்காவிட்டால் தூக்கம் வராதா? தினம் பேப்பருக்கு கொடுக்கும் காசை சேர்த்து வைத்தால் நீங்கள் ஒரு நாளாவது நல்ல காய்கறி வாங்கிச் சாப்பிடலாமே" என்றாள் அவள்.

"அது இல்லை மாமி. வேலை எங்கே காலி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகத் தங்கம் பேப்பர் வாங்குகிறாள். அத்துடன் பேப்பரின் நியூசையும் பேப்பரில் வரும் தலையங்கத்தையும் வைத்துக் கொண்டு சுருக்கெழுத்து எழுதிப் பழகிக் கொள்கிறாள்" என்று மரகதம் கூறியதும் அலட்சியச் சிரிப்பு ஒன்றைக் குடித்தனக்காரி சிரித்து, "நான் சொல்கிறேன் என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். எனக்குத் தெரிந்த வரையில் பெண்ணைப் படிக்க வைத்தால்தான் வேலைக்கு அனுப்ப வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படுகிறது. படிக்க வைக்கச் செலவு, வேலைக்கு அனுப்புவதற்காகச் செலவு. பிறகு வேலைக்குச் சென்றால் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளையைத் தேடுவதற்காக வரதட்சணைச் செலவு. இப்படிப் பெண்ணுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து



கவலைப்படுவதை விட நல்ல வரனாகப் பார்த்துக் கல்யாணத்தைச் செய்து விடுவதுதான் நல்லது எனறு நான் நினைக்கிறேன்" என்றாள்.

மூச்சு விடாமல் அவள் பேசுவதைக் கேட்டு மரகதம் வாயடைத்து நின்றாள். தக்க பதில் அவளால் சொல்ல முடியும். ஆனால், அந்தச் சமயத்தில் அவள் சொல்ல விரும்பவில்லை. பெண் படிப்பதும் வேலக்குப் போவதும் செலவுதான். அதற்காகக் கல்வியே கூடாது என்று தடுப்பது நியாயமா என்று கேட்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. மேலும் அவளுக்கு மற்றொரு ஆண் குழந்தை இருந்திருந்தால் நிச்சயமாகப் பெண்களைப் படிக்க வைக்கக் கூடாது என்று நினைத்திருக்கமாட்டாள்.

தங்கத்தின் குரல் கேட்டது. "அம்மா பாச்சா மாமா வந்திருக்கிறார், கூப்பிடுகிறார்."

"சரி மாமி, நான் போய்விட்டு வருகிறேன்" என்று திரும்பிக் கூடப் பார்க்காமல் மரகதம் புறப்பட்டு விட்டாள்.

பாச்சா வந்திருக்கிறார் என்றால் அவரிடமிருந்து காசு கடன் கேட்டு வாங்க முடியும் என்ற எண்ணத்தால் அவள் செல்லவில்லை. பாச்சா மாமா ஜாதகம் எங்காவது பார்த்துக் கொண்டு வந்திருப்பார். மிகவும் சௌகரியமான வரன் ஒன்றைப் பார்த்துச் சொல்வதாக அவர் ஏற்கனவே கூறிச் சென்றிருந்தார்.

பாச்சா அவள் கணவர் கேசவனின் நெருங்கிய சிநேகிதர். அந்தக் குடும்பத்தின் நலனை அவர் அந்தக் காலத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருப்பவர். மரகதத்தின் கணவர் கேசவன் இறந்தவுடன் அவர் உண்மையிலேயே மிகவும் வருத்தப்பட்டார். அந்தக் குடும்பத்திற்குத் தன்னால் இயன்ற உதவி ஏதாவது

செய்ய வேண்டுமென்று அவர் துடித்துச்
கொண்டிருந்தார். ஆனால், அதற்கு ஏற்ற வாய்ப்புத்தான்
கிடைக்கவில்லை. பணம் காசு உதவியை விட வாயால்
சொல்லும் உபசாரங்கள் மூலமே அவர் அடிக்கடி
அந்தக் குடும்பத்திறகு உற்சாகமூட்டி வந்தார்.
எவ்வளவோ தடவை பலவித உதவி செய்வதாக வாக்கு
கொடுத்துத் திரும்பியும் பாராமல் இருந்திருக்கிறார்.
பெண்ணை நன்றாகப் படிக்க வையுங்கள் என்று ஒரு
தடவை சொல்வார். பெண் படித்து விட்டால் நல்ல
வேலை பார்த்து நான் வைக்கிறேன் என்று கூறுவார்.
வேலைக்கு அவள் போய்விட்டால் பிறகு கஷ்டங்கள்
தீர்ந்துவிடும் என்று இடையிடையே உற்சாகமாகச்
சொல்வார். ஒரு சமயம் சொல்வார்; இப்படிச்
கஷ்டப்பட்டுச் சம்பளம் கொடுத்துப் படிக்க வைக்க
வேண்டுமா என்ன? ஏதோ வீட்டிலேயே தையலோ
பாட்டோ சொல்லிக் கொடுத்து சௌகரியமான இடப்
பார்த்துக் கல்யாணம் செய்து விடலாமே" என்று
அவருக்கும் தான் என்ன சொல்கிறோம் என்பது சில
சமயத்தில் தெரியாது. என்றாலும் குடும்பத்தில்
நெருங்கிய நண்பரான பாச்சா ஏதோ உற்சாகமாகச்
சொல்லிக்கொண்டு போவது மரகதத்திற்கு ஆறுதலாக
இருந்தது. நெருங்கிய உறவினர் யாரும் அவளுக்கு உதவி
செய்யவராத நிலையில் இப்படித் தைரியமூட்டுபவர்
ஒருவர் வருவது மரகதத்திற்கு எந்தவிதமான
ஆட்சேபணையையும் ஏற்படுத்தவில்லை.

இப்பொழுது சில காலமாக பாச்சா தங்கம்
வேலைக்குப் போவதைப் பற்றி உற்சாகமாக ஏதும்
சொல்லவில்லை. சில நாட்கள் 'எங்கேயாவது வேலை
வாங்கித் தரணும் வேலை வாங்கித் தரணும்' என்று
சொல்லி வந்தாரே தவிரப் பிறகு அதைச் சொல்வதையும்
விட்டுவிட்டார். இப்பொழுது வரன் தேடித் தங்கத்தைக்



கல்யாணம் செய்து கொடுத்து விடுவதில் அவர் முனைந்திருந்தார்.

"மரகதம் நல்ல வரனாக ஒன்று பார்த்துக் கொண்டு வந்துவிட்டேன். பெயர்தான் இரண்டாம் தாரம். ஆனால் பிள்ளைக்கு அதிக வயதாகவில்லை. 40 வயதுதான். நல்ல வருமானம். தங்கத்திற்கு என்ன ஆகிறது 18 இல்லையா. ஒன்றும் வித்தியாசம் இல்லை. முதல் தாரம் கல்யாணமாகி இரண்டு வருஷம்தான் குடித்தனம் நடத்தியிருக்கிறாள். இறந்துவிட்டாள். ஒரு குழந்தை இருக்கிறது. கையிலே வரதட்சைணயாக ஒன்றும் வேண்டாமென்று அவன் சொல்கிறான். இன்னும் நான் நெருங்கி அவனை வற்புறுத்தினால் கல்யாணச் செலவைக் கூட அவன் ஏற்றுக் கொண்டு விடுவான். அவனுக்கு வேண்டியதெல்லாம் படித்த பெண். நல்ல குணவதி, அழகானவள். இங்கே நம் தங்கம் இருக்கும் பொழுது அந்தச் சந்தர்ப்பத்தை விடுவானேன் என்று நான் ஓடோடி வந்தேன்" என்றார்.

தங்கத்திற்கு 'பகீர்' என்றது. காலையிலே அவள் பத்திரிகையில் பார்த்த கம்பெனி விளம்பரம் கண் முன்னாலேயே நிழல் ஆடியது. நல்ல கம்பெனி அது. தாயும், பாச்சா மாமாவும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது தங்கம் அங்கிருந்து மெள்ள நழுவிவிட்டாள். அவளுடைய சிநேகிதி வீடு அடுத்த தெருவில்தான் இருந்தது. அவளிடம் கேட்டால் 15 பைசா கொடுக்காமலா போய்விடுவாள்? வேகமாக தங்கம் நடந்தாள். எதிரே அவள் தேடிப்போன தோழி சந்திராவே வந்து விட்டாள். "எங்கே தங்கம் அவசரமாகப் போகிறாய்?" என்று கேட்டாள் சந்திரா.

"கும்பிடப் போன தெய்வம் வந்தது என்பார்களே அதுபோல் நீயே வந்து விட்டாய். சொன்னால் நம்ப மாட்டாய். உன்னைத் தேடித்தான் வேகமாக வந்து

கொண்டிருந்தேன். ஒரு ஹெல்ப் பண்ணுவாயா?" என்று கேட்டாள்.

சந்திரா சிரித்தவாறு "ஏன் தங்கம்! நீ எப்பொழுதுமே 'ஹெல்ப்' கேட்கமாட்டாயே, இப்பொழுது கேட்டதற்கும் நான் மாட்டேன் என்பேனா?" என்றாள். "ஒன்றுமில்லை. ஒரு பதினைந்து பைசா வேண்டும். ஒரு அப்பிளிகேஷன் எழுதிவிட்டேன். அதைத் தபாலில் அனுப்பி வைக்கத்தான் கேட்டேன்."

"நானும் அந்தக் கம்பெனி விலாசத்தைச் சொல்லி உன்னை அப்ளிகேஷன் போடச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில்தான் வந்து கொண்டிருக்கிறேன். அந்தக் கம்பெனியில் ஏராளமான பேர்களை வேலைக்கு அமர்த்தப் போகிறார்களாம். நல்ல சம்பளம். கௌரவமான காரியாலயம்" என்றாள் சந்திரா.

தங்கத்திற்கு உடல் புல்லரித்தது. "நான் காலையிலேயே பார்த்துவிட்டேன் அந்த விளம்பரத்தை. இதோ தயாராக அப்ளிகேஷன் எழுதி வைத்திருக்கிறேன்" என்றாள் தங்கம். சந்திராவும் தங்கமும் தபால் ஆபீசுக்குச் சென்று கட்டு எடுப்பதற்குள் தபாலை ஒட்டிப் போட்டுவிட்டு 'அப்பாடா' என்று கூறிக் கொண்டே தபாலாபீசிலிருந்து வெளியே வந்தார்கள்.

சந்திராவுக்கு வேலைக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. அவள் குடும்பத்தில் பலர் சம்பாதிக்கிறார்கள். தந்தை ஸ்டேஷன் மாஸ்டராக வெளியூரில் இருக்கிறார். பெரிய அண்ணா ஒரு கம்பெனியில் நல்ல வேலையில் இருக்கிறார். தம்பி எஞ்சினீயரிங் கம்பெனி ஒன்றில் வேலை கற்றுக் கொள்கிறான். சந்திரா சம்பாதிக்க வேண்டிய அவசியமேயில்லை. இருந்தாலும் சந்திராவினால் வீட்டில் சும்மா உட்கார்ந்து இருக்க முடியவில்லை.



"ஏன் சந்திரா, நீ கூடவா வேலைக்குப் போகப் போகிறாய். நீ போய்ச் சம்பாதித்து உங்கள் வீட்டில் என்ன ஆக வேண்டும்?" என்றாள் தங்கம்.

சந்திரா சிரித்தாள், "அப்படியில்லை தங்கம். சம்பாதிப்பது என்பது குடும்பம் நடத்துவதற்காக மட்டும் தானா? சம்பாதிக்கும் பணத்தைச் சேர்த்து வைத்தால் குடும்பத்திற்குப் பிற்காலத்தில் உதவாதா? அத்துடன் நல்ல வரனாகப் பார்த்து நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றால கையிலே ஏகப்பட்ட பணம் வரதட்சணையாகக் கொடுக்க வேண்டுமே. அதற்காக என்னுடைய வருமானம் என் குடும்பத்திற்கு உதவினால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்றாள். சந்திரா இவ்வளவு தூரம் பேசுவாள் என்று தங்கம் எதிர்பார்க்கவில்லை. தங்கம் பெருமூச்சு விட்டுக்கொண்டே, "வேலைக்குப் போனால் கூட பிறகு கல்யாணம் செய்து கொண்டுதான் ஆக வேண்டுமா? நீ அப்படித்தான் முடிவு செய்திருக்கிறாயா சந்திரா?" என்று தங்கம் கேட்டாள்.

சந்திரா சிரித்து விட்டாள். "கல்யாணம் செய்து கொள்ளாமல் ஒரு பெண்ணால வாழ முடியுமா உலகத்தில்? என்னதான் மேடையில் பேசலாம். அல்லது ஜம்பமாக இலட்சியம் பேசலாம். கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொன்னவர்கள் அவ்வளவு பேரையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், என்றாவது ஒருநாள் வாழ்க்கைத் துணையைத் தேடித்தான் போக வேண்டிய நிலை வரும். அந்தத் துணையைத் தக்க காலத்தில் - தக்க வயதில் தேடிக் கொள்வது நல்லதில்லையா?" என்றாள் சந்திரா.

சந்திரா இப்படிப் பெரிய மனுஷியைப் போல பொன்மொழியை உதிர விட்டவுடன் தங்கத்திற்குச் சிரிப்பு வந்தது. "காலேஜை விட்டவுடன் நீ நன்றாகப்

பேசக் கற்றுக்கொண்டு விட்டாய் போல் இருக்கிறது. உன் நிலை அப்படி. என் நிலையைப் பார், என்னை வேலைக்குப் போகவேண்டாம். கல்யாணம் செய்து கொள் என்று கூறி என் குடும்ப நண்பர் ஒருவர் வந்து தொந்தரவு செய்கிறார். வரன் பார்த்து விட்டாராம். மாப்பிள்ளைக்கு என்ன வயது தெரியுமா?" என்று தங்கம் கூறிச் சற்று நிறுத்தினாள். சந்திரா ஆவலுடன் தங்கத்தை நோக்கினாள். "மாப்பிள்ளைக்கு 25 வயதுதானிருக்கும். இளம் வாலிபனாக இருப்பான். ஐ.ஏ.எஸ். போவதற்குத் தயார் செய்து கொண்டிருப்பான். அப்படித்தானே தங்கம்?" என்று கேட்டாள் சந்திரா.

தங்கத்திற்குக் கண்களில் நீர் துளிர்த்தது. "சந்திரா நான் என்னத்தைச் சொல்வேன்? மாப்பிள்ளைக்கு நாற்பது வயதாம். வரதட்சணை கிடையாதாம். கல்யாணச் செலவை அவரே ஏற்றுக்கொண்டு விடுவாராம்." தங்கம் இப்படி அழாத குறையாகச் சொன்னவுடன் சந்திரா அவளை ஏறிட்டு நோக்கி, "அது யாரடி புதிய தரகர், உன்னைக் கொண்டுபோய் இரண்டாம் தாரமாகத் தள்ளப் பார்க்கிறார். இப்பொழுது உனக்கு என்ன வயதாகிவிட்டது. கல்யாணம் செய்துதான் ஆக வேண்டுமென்று என்ன கட்டாயம் இப்போது? அந்த ஜாதகத் தரகர் - கல்யாணத் தரகரிடம் சிக்கிக்கொள்வதற்கு உன் அம்மாவுக்குப் புத்தி எப்டித்தான் மாறியதோ" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டாள்.

"கல்யாணத் தரகர் இல்லையடி அவர், எங்கள் குடும்ப நண்பர். பார்த்தசாரதி என்று பெயர். எங்கள் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர். எங்கள் அப்பா வேலையிலிருந்த பத்திரிகை ஆபீசில் விளம்பரம் சேகரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார் அந்தக் காலத்தில். அப்பா இறந்த பிறகு அவர் உண்மையாகவே எங்கள் குடும்பத்திற்கு ஆதரவாக இருந்து வந்திருக்கிறார். அவர் சொல்வதை என் தாயாரால் எதிர்க்க முடியவில்லை" என்றாள் தங்கம்.

சநதிரா தங்கத்தின் முகத்தை உற்றுநோக்கி, "யாரைச் சொல்கிறாய். பாச்சாவையா. எனக்குத் தெரியுமடி பார்த்தசாரதியை. அவர் உங்கள் குடும்ப நண்பர் மட்டும்தானா! உங்கள் குடும்பத்திற்கும் அவர் வேண்டியவர். கலியுக நாரதர்! ஐயோ! அவர் சரியான 'டகல்பாச்சா!' வாச்சே! அவர் பேச்சையா நம்புகின்றீர்கள்?" என்று கூறியபோது தங்கத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது.

சைக்கிளில் அப்பொழுது பாச்சாவே எதிரே வேகமாக வந்து கொண்டிருந்தார். தங்கத்தையும் சந்திராவையும் கண்டவுடன் அவர் சைக்கிளிலிருந்து இறங்கி, "என்ன தங்கம், நாங்கள் பேசிக்கொண்டே இருக்கும்பொழுது திடீரென்று நழுவிவிட்டாயே. உன் போட்டோ அவசரமாக வேண்டுமே, உன் போட்டோவை அம்மாவிடம் கேட்டேன். ஒன்றுகூட இல்லை என்று சொல்லிவிட்டாள். வா இப்படியே போய் 'பாஸ்போர்ட் சைசில் போட்டோ ஒன்று எடுக்கலாம்" என்று அழைத்தார். சந்திரா கண் ஜாடை மூலம் வேண்டாம் என்று தெரிவித்தாள். தங்கத்திற்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

## 2

போட்டோ ஸ்டுடியோவுக்குத் தங்கத்தை அழைத்துக் கொண்டு பாச்சா புறப்பட்டார். பாச்சாதான் வெற்றி பெற்றார். எப்படியோ சாமர்த்தியமாக சந்திராவைக் கத்தரித்து அனுப்பிவிட்டார்.

“சந்திராவைத் தெரியுமா உனக்கு தங்கம்” என்று கேட்டார் பாச்சா.

“என்னுடைய நெருங்கிய சிநேகிதி அவள்” என்று மட்டும் சொல்லித் தங்கம் நிறுத்திக் கொண்டாள். “ஆமாம்; நாம் எங்கே போகிறோம்?” என்றாள் தங்கம்.

“ஏன், போட்டோ எடுத்துக் கொள்வதற்குத்தான். அவசரமாக உன்னுடை போட்டோ வேண்டுமென்று மாப்பிள்ளை கேட்கிறாரே, இந்த ஸ்டுடியோ எனக்குத் தெரிந்த ஸ்டுடியோதான்” என்று கூறிக்கொண்டே மூன்லைட் ஸ்டுடியோவை அடைந்தார். அங்கே வாசலில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு பையனைப் பார்த்து, “ரங்கா இருக்கிறாராடா பையா?” என்று மிகவும் அலட்சியமான அதிகாரமான தோரணையில் கேட்டார். வாய் வெற்றிலைப் பாக்கை உமிழ்ந்து விட்டு மீண்டும் தன்னுடைய ஜிப்பாப் பையிலிருந்து வெற்றிலைப் பாக்குப் பொட்டலத்தை எடுத்து அதிலிருந்து கொஞ்சம் சீவலை போட்டுக் கொண்டு மிகவும் சுவாதீனமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். போட்டோக்கடை பைய னுக்குப் பாச்சாவைத் தெரியும். அவன் நாற்காலியில் இருந்து எழுந்திராமலே “அவர் இல்லைங்களே” என்று சொல்லிவிட்டு ஒரு சினிமாப் பத்திரிகையைப் பார்ப்பதில் கவனத்தைச் செலுத்தலானான்.

ஒருமுறை ஸ்டுடியோவில் மாட்டப்பட்டிருந்த படங்களை சுழலும் விழியில் பார்த்தாள் தங்கம். பெண்களின் பலவிதமான போட்டோக்கள் பெரிது படுத்தப்பட்டுப் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தன. பிரபல சினிமா நடிகை, நடிகர் போட்டோவும் ஒன்றிரண்டு இருந்தது. போட்டோ ஸ்டுடியோவுக்குப் பக்கத்தில் இருந்த பழக்கடையிலிருந்து ஒரு ஆள் வேகமாக வந்து பையன் கையிலிருந்த சினிமாப் புத்தகத்தை வேகமாகப் பறித்துக் கொண்டான்.



“என்ன வாத்தியாரே அதற்குள்ளே பொஸ்தகத்தை வாாங்கிட்டியே. இன்னும் நான் ஒரு வரிகூட படிக்கவில்லையே” என்றான் போட்டோக் கடைக்காரப் பையன்.

“கடைக்காரன் கேட்கிறானப்பா. நீ எந்தக் காலத்தில் படிக்கப்போறே!” என்ற பழக்கடைக்காரன் தங்கத்தை ஒரு தரம் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே கூறினான். இன்னும் 5 நிமிஷத்திலே தந்து விடுகிறேன். நடிகை கமலாதேவியின் போட்டோ ஆல்பம் அதிலே வந்திருக்கிறது. புது ஸ்டார் ஆச்சே நீச்சல் உடையில் படம் என்றான் பையன். பாச்சாவும் பேச்சிலே கலந்து கொண்டார்.

“இப்பொழுதெல்லாம் நெனச்சவங்கல்லாம் ஸ்டார்ன்னு கிளம்பிட்டாங்க. அந்தக் காலத்திலே நதலம்மாள் மேக்கப் இல்லாமல் வந்து நின்னாலே எல்லோரும் அசந்து விழுந்து விடுவாங்க. இப்பொழுதோ ஸ்டார்கள் வீட்டிலே போய்ப் பார்த்தா...” என்று முடிப்பதற்குள் பழக்கடைக்காரன், “என்ன பாச்சா சார்! ஷூட்டிங்குக்கு அழைத்துக் கொண்டு போகிறேன் என்று சொன்னீர்களே என்ன ஆச்சு?” என்று கேட்டான்.

அவனுக்கும் பாச்சாவை நன்றாகத் தெரியும். ஒரு ஆள் வாழைப்பழம் வாங்கிச் சென்ற பாக்கியை அவர் பல வருஷங்களாக கொடுக்காததை அவன் மறந்து விடவில்லை.

வாயில் வெற்றிலையை மறுபடியும் போட்டுக் கொண்டு “கந்தன் ஸ்டுடியோ முதலாளி ஊரில் இல்லை. மலேசியா போயிருக்கிறார். மலேசியா போவதற்குப் பாஸ்போர்ட்டுக்கு என்ன திண்டாடினார் தெரியுமா? நான்தான் மினிஸ்டர் கிட்டே போய் ஐந்து நிமிஷத்திலே வாங்கிக் கொடுத்தேன். இப்பொழுது

என்னடானா அங்கிருந்து எனக்குத் தந்தி அடித்திருக்கிறார். பத்தாயிரம் ரூபாய்க்கு டிராப்ட் வாங்கி உடனே அனுப்பி வை பாச்சா என்று. பிலிம்கள் எல்லாம் விலை சல்லிசா அங்கே கிடைக்கிறதாம். வாங்கி வரலாம் என்று எழுதியிருக்கிறார். நான் வைரம் செட்டியாரிடம் பணத்துக்கு ஏற்பாடெல்லாம் செய்துவிட்டு இப்பொழுதுதான் வருகிறேன். ஸ்டுடியோ முதலாளி மலேயாவிலிருந்து வந்தவுடன் ஒரு ஷூட்டிங் என்னப்பா, 10 ஷூட்டிங்குகளுக்கு இட்டுண்டு போறேன்" என்று காவிப் பல் தெரியப் பேசினார். பிறகு தங்கத்தின் பக்கம் திரும்பி, "இப்படி உட்காரு தங்கம், நம்ம கடைதான்" என்று கூறிவிட்டு "ஏம்மா தங்கம் நீ ஷூட்டிங் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

தங்கம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு அந்த மூன்று பேரையும் பார்க்க விரும்பாதவளாய் பதில் சொல்லாமல் இருந்தான்.

பிறகு "நான் போய்விட்டு வருகிறேன் மாமா எனக்கு அவசர வேலை இருக்கிறது" என்று, மெல்ல அவர் காதில் படுமாறு கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட எத்தனித்தான்.

"இரு தங்கம் இதோ வந்து விடுவார் போட்டோ கடைக்காரர்" என்று சொல்லிவிட்டு, பையனைப் பார்த்து, "ஏம்பா உன் முதலாளி எப்பொழுதுமே கடையில் இருக்கமாட்டேன் என்கிறாரே. கேட்டால் வியாபாரம் இல்லை என்று சொல்கிறார். வியாபாரத்திற்கு கஸ்டமரை அழைத்து வந்தால் ஆள் இல்லாமல் போய்விடுகிறார்" என்று கூறவும் பையன் சோம்பல் முறித்துவிட்டு, "வியாபாரம் நிறைய இருக்கிறது. சார். பிலிம்தான் கிடைக்க மாட்டேன் என்கிறது. நாங்களே இப்பொழுது படம் எடுக்க வருகிறவர்களை வேண்டாம் என்றுதான் சொல்லுறோம்" என்றான் அலட்சியமாக.



பாச்சா தங்கத்தின் பக்கம் திரும்பி, "ரங்கன் வரட்டும் நான் சொல்லிவிட்டுப் போகிறேன். நீ நாளை காலையில் இந்தப் பக்கம் போகும்பொழுது இங்கே நுழைந்து ஒரு 'ஸ்னாப்' கொடுத்துவிட்டுப் போ. இவாள்லாம் நல்ல மனுஷாள். கூச்சப்படாமே 'ஸ்னாப்' கொடுத்துட்டுப் போ" என்றார். தங்கம் போய் விட்டாள்.

பாச்சா குரலைச் சற்றுத் தாழ்த்திக்கொண்டு, "என்னடா தம்பி அப்படி மூஞ்சியில் அடித்தமாதிரி சொல்லிட்டியே. நீ இந்தக் கடைக்கு வந்து வருஷங் கூட ஆகலே. உங்க முதலாளியை எனக்குச் சின்ன வயதிலிருந்தே தெரியும். இதோ இருக்கிறது இந்த ஸ்டார் போட்டோ யாரால் கிடைத்தது தெரியுமா? இது சினிமா நடிகர் சுப்பண்ணா. அவர் படத்தை இவ்வளவு பெரிசா போட்டு வைத்திருக்கிறானே அது எப்படி தெரியுமா. அந்த சுப்பண்ணாவை இங்கே போட்டோ எடுத்துக்கொள்ள அழைத்து வந்தது யார் தெரியுமா? நான் தான். நீ என்னடான்னா என் மதிப்பு தெரியாமே அலட்சியமாக பேசிட்டே. போன வருஷம் நேரு வந்திருந்தபோது அவரைப் போட்டோ எடுப்பதற்கு நான்தான் காங்கிரஸ் கமிட்டியிலே சொல்லி ஏற்பாடு செய்தேன். இன்றைக்கு உன் முதலாளிக்கு நிலைமை மறந்து போய்விட்டது. சரி... சரி... எதிர்க் கடைக்குப் போய் சூடாா ஒரு கப் பாக்கி ஸ்ட்ராங்கா போட்டு வாங்கிண்டுவா" என்று தன் ஜிப்பா பையில் கையை விட்டு சில்லரை இருக்கிறதா என்று துழாவிப் பார்த்தார். பையன் பாச்சாவின் வாய் சவடாலைக் கண்டு சற்று அசந்துதான் விட்டான். அவரிடம் ஏதாவது தவறாக பேசிவிட்டோமோ என்று நினைத்தான். அதற்கேற்றாற்போல் பழக்கடைக்காரர், "என்னடா ஐயாவோட பெருமை தெரியாம பேசிட்டே.

அவர் நினைத்தார
னால் முயல் கொம்புகூட கொண்டு வந்து விடுவார்
என்று சொல்லி கண் சிமிட்டினான். காப்பிக்கு
சில்லரை எடுப்பதற்காகப் பையில் விட்ட கை
வெளியே வராமல் இருந்து விடவே, பையன் உடனே
காப்பி வாங்கி வரப் பாட்டிலை எடுத்துக்கொண்டு
எதிர் ஹோட்டலுக்கு ஓடினான். அவன் தலைமறை
ந்ததும் பாச்சா மீண்டும் வெற்றிலையில் சுண்ணாம்பைத்
தடவிக் கொண்டே, "இந்தக் காலத்துப் பசங்களுக்கு
யார் யாரை எப்படியெப்படி மதிப்பது என்பதே
தெரியலே. பழகவும் தெரியலே. இவன் முதலாளி
இருக்கிறானே ரங்கன் அவன் ஒரு சமயம் குளிர் ஜுரப்
கண்டு படுத்துட்டான். டாக்டர் பார்த்துட்டு
பென்சிலின் மருந்துகிடைத்தால் ஜுரம் குறையும் என்று
சொல்லிவிட்டார். உனக்குத் தெரியுமா கஸ்தூரிபாய்
காந்திக்கு அந்த மருந்தில்லாமல் எவ்வளவு
திண்டாடினார்கள் என்று? ரங்கனுக்கு அந்த ஊசி
போடவேண்டுமென்று சொல்லிவிட்டார் டாக்டர்.
அப்போ மணி பத்து இருக்கும். இடி இடிக்கிறது.
மழை 'சோ'ன்னு கொட்றது. எனக்கு அதெல்லாம்
ஒன்றும் தெரியலே. ரங்கன் தான் என் கண் முன்னாடி
ஊசலாடுகிறான். நம்ம டாக்டர் ஷாம் பிரசாத் பெரிய
சர்ஜன் தெரியுமா?" என்று ஒரு போடு போட்டுவிட்டு
வாய் எச்சிலைத் துப்பினார்.

பழக்கடைக்காரருக்குப் பெரிய சர்ஜனையும்
தெரியாது, சிறிய சர்ஜனையும் தெரியாது. அவன்
ஒப்புக்காக சும்மா தலை அசைத்துவிட்டான்.

"பெரிய சர்ஜன் ஷாம்பிரசாத் வீட்டுக்கு நான்
போனேன். அந்த சர்ஜன் 8 மணிக்குமேல் யாரையும்
பார்க்கமாட்டார். அவருடைய மனைவி ரொம்ப
தங்கமானவர். மகாலட்சுமி மாதிரி இருப்பாங்க. ஆனா



டாக்டர் பெரிய குடிகாரன். கொட்டுகிற மழையிலே
அந்தப் புண்ணியவதி கதவைத் திறந்தாள். ஒரு பெரிய
கும்பிடு போட்டேன், 'அம்மா உங்களுக்குக் கோடி
புண்ணியம். ஓர் உயிர் காப்பாற்றப்பட வேண்டும்'
என்று சொன்னேன். 'ஒரு பெண்ணின் மாங்கல்யத்தைக்
காப்பாற்ற வேண்டும்' என்று சொன்னேன். எந்தப்
பெண்ணுக்குத்தான் மற்றொரு பெண்ணின் மாங்கல்
யத்தைக் காப்பாற்ற மனமில்லாமல் போய்விடும். ஊசி
மருந்து கேட்டேன். அவர்கள் எடுத்துண்டு வந்து
கொடுத்தார்கள். நான் உற்சாகமாகக் கண்களில் நீர்
பெருகும்படியாகப் பேசிப் பையிலிருந்து ஒரு நூறு
ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினேன். அந்த அம்மா
பெனிசிலின் மருந்ததை எடுத்துக்கொண்டு வந்து
கொடுத்து, 'இப்பொழுதே போய் ஊசி போடச்
சொல்லு' என்றாங்க. ரூபாயை வாங்கிக் கொள்ள
வில்லை. அந்தப் புண்ணியவதி இப்பொழுது
பம்பாயிலோ கல்கத்தாவிலோ இருக்கிறாங்க. ஒரு
தடவை நான் கல்கத்தாவோ பம்பாயோ, போனபோது
அந்த அம்மா கார்லே போறதைப் பார்த்தேன். பிழைத்த
ரங்கன் இப்பொழுது ஸ்டுடியோ என்னால் வைத்தி
ருக்கிறான். அவன் கடைப் பையன் என்னடான்னா
சோம்பல் முறித்துக்கொண்டு மேதாவி மாதிரி பிசினஸ்
வேண்டா'ங்கிறான்" என்றார்.

பையன் காப்பியைக் கொண்டுவந்து கொடுத்
தான். சுடச் சுடக் காப்பியை தூக்கி வாயில் மடக்
மடக் என்று விட்டுக்கொண்டு, "யாருடா போட்டது
காபி?" என்று பாச்சா பையனைப் பார்த்துக் கேட்டார்.

"எப்போதும் போடுகிறவங்கதானுங்க?" என்றான்
பையன்.

"சின்ன கிருஷ்ணன் போடலியா. இல்லை அந்த
அரட்டை அப்புசாமி போட்டானா? வாயில் வைக்க

வழங்கலியே. சர்க்கரை போடாமல் வாங்கி வந்து விட்டாயா?" என்றார்.

பையனுக்குச் சிரிப்புப் பொங்கி வந்து கொண்டிருந்தது. அங்கே சிரித்தால் நிலைமை மோசமாகிவிடும் என்று ஸ்டுடியோவுக்குள் போய் அடக்கமுடியாத சிரிப்பை, கொஞ்சம் அவிழ்த்து விட்டான். அவன் தான் காப்பியில் சர்க்கரை போட வேண்டாமென்று ஹோட்டல்காரரிடம் சொன்னவன். சிரிப்பை அடக்கிக் கொண்ட பையனும், "அவன் காப்பியில் என் எதிரே தானே சர்க்கரை போட்டான். உங்களுக்கு டபிள் சர்க்கரை வேணுங்களா? எனக்குத் தெரியாதே. என் முதலாளிக்கு அரை சக்கரையிருந்தால் போதும்" என்றான்.

பாச்சா போன பிறகு பழக்கடைக்காரனிடம் பையன் இதைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தாள். "இதுமாதிரி ஆளுங்களுக்கு இப்படித்தான் பண்ணணுங்க. தினம் ஒருதரம் இங்கே வருகிறார். காப்பி வாங்கி வா என்று ஜம்பமாகச் சொல்வார். காசுக்காக பையிலே போன கை வெளியே வராது. என் முதலாளி ஒரு அப்பாவி. காப்பி என்று சொன்னதும் 'சுவீட் சேவரி' வரவழைத்துவிடுவார் என்றான். பிறகு மெல்லிய குரலில் அவர் சொல்வது உண்மையாக இருக்குமா? என் முதலாளி உயிரை அவர்தான் காப்பாத்தினாராம். என் முதலாளியும் அவர் வந்தார் என்றால் ஒரே மயக்கம்" என்று சொல்லிக் கொண்டே மெல்லிய குரலில், "ஓரிடத்திலிருந்து பணத்திற்கு அரேஞ்ச் பண்ணித் தரச்சொல்லி என் முதலாளி பாச்சாவைக் கேட்டிருந்தார். என் முதலாளி கேட்டு ஆறு மாதம் ஆகிறது. அவருக்கு எதுக்காகப் பணக் கஷ்டம் வந்தது என்றே தெரியவில்லை. போயும் போயும் இந்த 'டகல்பாச்சா'விடம் கேட்டாரே. அவர் என்னென்ன கேட்டார் தெரியுமா.



உன் காமரா விலை என்ன? நீ எவ்வளவு பிலிம் செட்டு வைத்து இருக்கிறாய்? உன் பொஞ்சாதி கழுத்திலே எவ்வளவு பவுனில் சங்கிலி. உன் வீடு எவ்வளவு ரூபாய் பெறும். உன் பாங்கிலே எவ்வளவு பணம் இருக்கிறது என்று இத்தனையும் கேட்டுக் கொண்டார். பணம் கடன் தர அரேஞ்ச் செய்கிறேன். அவனை அழைத்துக் கொண்டு வருகிறேன்; இவனை அழைத்துக்கொண்டு வருகிறேன் என்றார். டாக்ஸிக்குச் செலவாகும். டாக்ஸிக்குப் பணம் ஒரு பத்து ரூபாய் கொடு என்று கேட்டார். முதலாளியும் அவர் அழைத்து வருவதற்காகப் பணம் கொடுத்துவிட்டு இரவு 10 மணி வரையில் காத்திருந்தார். பாட்சா பத்தரை மணிக்கு தன்னுடைய 'ரோல்ஸ் ராய்ஸ் சைக்கிளில்' வந்து ஒரு கதை சொன்னார் பார்! பணம் கொடுக்கிறேன் என்று சொன்னவர் பணம் தயாராய் வைத்திருந்தாராம். டாக்ஸி கொண்டு வா என்று சொல்லி அவர் தன் கடைப் பையனை அனுப்பினார். பையன் போய் ஒரு மணிநேரம் கழித்து டாக்ஸியே கிடைக்கல்லை என்று சொன்னான். அப்பொழுது பணம் கொடுக்கும் பைனான்ஸியர் என்னைப் பார்த்து, 'என்ன பாாத்தசாரதி, சகுனம் சரியில்லையே. என் கார் டிரைவரும் இன்றைக்கு வரவில்லை. வ.மு. கடைக்கு டாக்ஸி வேண்டுமென்று கூப்பிட்டா வராத டிரைவரும் கிடையாது. இன்றைக்கு வேண்டாம் இப்பொழுது சகுனம் சரியில்லை" என்று சொல்லிவிட்டார். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். நாளைக்குப் பணம் அவர் கட்டியாகணும் என்று. அப்படிச் சொல்லியும் அவர் ஒத்துக் கொள்ளவேயில்லை. சரி அவன் கிடக்கிறான் அப்படின்னுட்டு சேட் ஒருவரை கேட்கப் போனேன். பத்து மணி வரையில் காத்திருந்தேன். சேட் வரவில்லை. அதை உன்கிட்டே சொல்லிவிட்டுப்

போகலாம் என்றுதான் நான் வந்தேன். நீ கவலைப் படாதே. நாளைக்கு எப்படியும் அந்த சேட்டை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்றார். என் முதலாளியோ பாவம், வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவர். அவர் காத்துக் கொண்டிருந்தார். மறுநாள் மறுநாள் என்று ஆறு மாதம் காத்திருந்தார். முதலாளிக்கு ஏற்பட்ட கஷ்டமும் தீர்ந்து போய் விட்டது. டாக்ஸிக்கு பத்து ரூபாய், பத்து ரூபாய் என்று இப்படியே பாச்சா ஸார் எவ்வளவோ வாங்கிக் கொண்டார் தெரியுமா. அப்படியும் என் முதலாளி பாச்சாவைத் தான் நம்புகிறார்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது போட்டோக் கடை ரங்கன் வருவது தெரிந்தது. பழக்கடைக்காரர் மெல்ல தன் கடைக்குள் நழுவிவிட்டார். பையன் எழுந்து நின்றான்.

'யாராவது வந்தார்களாடா?' என்று ரங்கன் கேட்டார். 'ஆமாங்க பாச்சா ஐயா வந்துட்டுப் போனார். யாரோ ஒரு அம்மாவைப் போட்டோ எடுக்கணும் என்று கூட கூட்டிட்டு வந்தார். நீங்க இல்லேன்னதும் போய் விட்டார்.

ரங்கன் பரபரப்புடன் "காரிலே வந்தார்களா?" என்று கேட்டார்.

பையன் வாய் தவறி "ஆமாங்க அவருடைய ரோல்ஸ் ராய்ஸில்தான்" என்று சொன்னவுடன், ரங்கனுக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"அவரைச் சொல்லலேடா. சினிமா ஸ்டார் ஒருத்தரைப் போட்டோ எடுக்கணும் என்று ஒரு வாரமா சொல்லிக் கொண்டிருக்கிறார். அவரைத்தான் அழைத்து வந்து விட்டாரோ என்று கேட்டேன்" என்றார்.

பையனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.



பாச்சாவின் திருவிளையாடல்கள் இப்படிப் பல இடங்களிலும் தினசரி நடைபெறுவது வழக்கமாகி விட்டது. வாயில் வெற்றிலையை மெல்லுவதும் அதற்கு ஏற்றாற்போல் வாயையும் கூடவே சேர்த்து மெல்லு வதும் பாச்சாவின் உடலில் ஓடும் ரத்தமாகிவிட்டது. பாச்சா சோர்வுடன் நேரே தன் வீட்டிற்குச் சென்றார்.

## 3

கசப்புக் காப்பியைச் சாப்பிட்டது பாச்சாவின் வயிற்றைக் குமட்டிக் கொண்டிருந்தது. அத்துடன் அன்று ஏதோ தனக்கு சரிவர எங்குமே மரியாதை கிடைக்கவில்லை என்பது போன்ற பிரமை ஏற்பட்டது. அவன் மனைவி கனகவல்லி வீட்டில் இல்லை. அவன் தாயார் மட்டுமே நிலைப்படி அருகே கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். தன் மகன் வழக்கத்திற்கு விரோதமாக இவ்வளவு சீக்கிரமாக வீடு வந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'அம்மா கனகம் எங்கே' என்று கேட்டுக் கொண்டே அங்கவஸ்திரத்தைக் கழற்றிக் கதவின்மேல் போட்டுவிட்டு சொம்பில் ஜலத்தை எடுத்து வாயைக் கொப்பளித்துக் கொண்டே, "ருக்மணியும் கனகமும் எங்கே? இரண்டு பேரும் எங்கே போயிருக்கிறார்கள்" என்று மீண்டும் கேட்டான்.

"கனகமும், ருக்மணியும் இப்பொழுதுதான் பெருமாளைச் சேவிக்கப் போய் இருக்கிறார்கள். அனுமாரை நான்தான் ஒரு மண்டலம் சுற்றிவிட்டு வா என்று சொன்னேன். மனிதன் செய்யாத காரியத்தை இனிமேல் தெய்வம் தானே செய்ய வேண்டும்" என்று தாய் குறைபட்டுக் கொண்டாள். அவள் குறைபடுவது தன்னுடைய பேத்தி ருக்மணியின் கல்யாணத்தைப்

பற்றித்தான். பாச்சாவுக்கு ஒரு பெண். ருக்மணி என்று பெயர். வயதிற்குரிய வளர்ச்சி, தாயாரைப் போலவே முகத்தில் ஒளிவீசும் களை. சிரித்த முகம். தந்தையைக் கொள்ளாமல் தாயையே கொண்டிருந்த அன்புள்ளம் அடக்கம். பிறருக்கு உதவவேண்டுமென்ற எண்ணம் எட்டாவது வரையில் படித்த பிறகு அவளைப் பள்ளிக் கூடத்திலிருந்து நிறுத்திவிட்டார்கள். உடனே கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று பாட்டி துடியாகத் துடித்ததன் பேரில், கனகமும் அவள் மாமியும் சேர்ந்து படிப்பை வேண்டா மென்று சொல்லிவிட்டார்கள். எட்டாவதுடன் படிப்பை முடித்துக்கொண்டு காலாகாலத்தில் கல்யாணம் செய்து புருஷன் வீட்டிற்குச் செல்வதுதான் முறை என்று சொன்னதால் உண்மையிலேயே பாச்சா உடனே தன் பெண்ணுக்கு விவாகம் செய்துவிடப் போகிறான் என்ற எண்ணத்தில் ருக்மணியைப் படிக்க வைக்காமல் நிறுத்தினார்கள். அவளுடன் படித்த பெண்கள் எல்லாம் பி.எஸ்.சி., எம்.ஏ., எம்.எஸ்.ஸி. வக்கீல் போன்ற பரீட்சைகளில் பலவாறாக பாஸ் செய்ததுபோக ருக்மணியோ அடுப்பங்கரைக் கலைகளில் தேர்ச்சி பெற்றவள் ஆனாள். வீட்டிலே சதா சர்வ காலமும் தாயும் பெண்ணும் எதிரும் புதிருமாக உட்கார்ந்துகொண்டு ஊர்க் கதைகளைப் பற்றி வம்புபேசும் காரியத்தைத் தான் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்ததும் ஒரு சிறு காலனி போல்தான். எட்டு வீடுகள் எதிரும் புதிருமாக கட்டப்பட்டிருந்தன. அவர்கள் வீட்டிற்கு எதிரே ஒரு சமையல்காரர் குடும்பம். அவர்களுக்கு ஏழெட்டுக் குழந்தைகள் கல்யாண காலங்களுக்குச் சமையல் செய்வதில் கைதேர்ந்த சாரங்கபாணி வஞ்சனை இல்லாமல் குழந்தைகளைப் பெற்றிருந்தார். மூத்த பையன் இந்த வருஷம் பி.காம். பரீட்சை



எழுதியிருந்தான். கடைசிக் குழந்தை - கடைசி என்று நாம் சொல்கிறோம். அவர்கள் சொல்கிறார்களோ இல்லையோ தெரியாது. தூளியில் படுத்துக் கொண்டிருந்தது. ருக்மணிக்கு அந்தக் குழந்தையைக் கண்டால் கொள்ளை ஆசை. 'கண்ணன்' என்று பெயரிட்டு அதைத் தன் வீட்டிலே எடுத்து வந்து கொஞ்சுவதிலே இன்பம் காண்பாள்.

"கண்ணனை நாங்களே வைத்துக்கொண்டு விடுகிறோம் மாமி" என்று அவள் சொல்லும்பொழுது "நான் கொடுத்துவிடத் தயார்தான். ஆனால் நாளைக்கு உனக்குக் கல்யாணமாகி உனக்கு ஒரு குழந்தை பிறந்த பிறகும் இந்தக் கண்ணனை நிச்சயம் வைத்துக் கொள்வாய் என்று எனக்கு நீ உறுதி கொடுப்பாயா" என்று அவள் கேட்கும்பொழுது ருக்மணியின் முகம் நாணத்தால் சிவக்கும். அவள் பாட்டியின் உள்ளத்தில் வேதனை பிறக்கும். தாயார் கனகத்திடமிருந்து பெருமூச்சு பிறக்கும். "பகவான்தான் கண் திறந்து பார்க்க வேண்டும். எப்பொழுது அவளுக்குக் கல்யாணம் ஆகப் போகிறதோ" என்பாள்.

பார்த்தசாரதிக்கு அந்தக் கவலையில்லை என்று சொல்ல முடியாது. அவர் எவ்வளவோ பெண்களின் கல்யாணத்திற்கு ஜாதகங்களை வாங்கிக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார். பல கல்யாணங்களுக்குக் கல்யாண ஏற்பாடு செய்துவிட்டுப் பணத்திற்காக திண்டாடுபவர்களுக்குப் பண ஒத்தாசைக்கு யோசனைகள் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார். ஆனால், தன் வீட்டில் குத்துவிளக்குப் போல் பெண் நின்று கொண்டிருப்பது அவர் கண்ணில்படவில்லை.

தன்னுடைய மகன் சீக்கிரமாக வீட்டுக்கு வந்து மகனையும் மருமகளையும் விசாரித்ததுடன் அவன் தாயார் தன் பேத்தியின் கல்யாணத்தைப் பற்றிப் பேச்சு

எடுத்தாள். 'என்னடா பாச்சா, இப்படியே நீ போவதுப் வருவதுமாக இருந்து கொண்டிருந்தால் ருக்மணிக்கு எப்பொழுதுதான் கல்யாணத்தை முடிக்கப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்? அப்படியே கல்யாணத்துக்கு நான் எங்கிருந்தாவது வரன் தேடி வந்தால் கூட பணத்திற்கு நீ என்ன ஏற்பாடு செய்திருக் கிறாய். என்னமோப்பா, உன் போக்கே எனக்குப் பிடிபடவில்லை" என்று அலுத்துக் கொண்டாள்.

பார்த்தசாரதிக்கு மெல்ல தலைவலி வந்து கொண்டே இருந்தது. அன்று பூராவும் அவனுக்கு வெளியுலகில் ஏற்பட்ட ஏமாற்றமும் தோல்வியும் போதாது என்று வீட்டிலே தாயார் வேறு கல்யாணப் பேச்சை எடுத்துவிட்டாள். சில சமயங்களில் அவன் தாயை ஒரே பேச்சால் தூக்கி எறிந்துவிடுவான். அலட்சியப்படுத்திப் பேசுவான். அல்லது தாயார் உள்ளம் குதூகலிக்கப் பெரிதாக ஆகாசப் பந்தல் ஒன்றைப் போட்டு அதிலே தேன் மழை பொழியச் செய்து, அந்தத் தேனை அள்ளி எடுத்துச் சேர்த்து வைத்தாற்போல் பேசுவான். சில சமயம் தன் மகன் சாமர்த்தியத்தைக் கண்டு தாயே பெருமைப்பட்டுக் கொள்வாள்.

"என் பாச்சா நினைத்தால் இந்த ஆகாயத்தை வில்லாக வளைத்து விட மாட்டானா!" என்று பெருமையாய் பேசுவாள். இன்று தாயார் கல்யாணத்தைப் பற்றிக் கேட்டவுடன் அவனுக்குச் சந்தோஷமே வரவில்லை. கோபமும் வரவில்லை. பசி வேறு வயிற்றைக் கிண்டியது. "ஏதாவது டிபன் பண்ணியிருக்கிறாயா?" என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டான். தாய் முகத்தைத் திருப்பாமலேயே "டிபனா? சாயங்காலம் டிபன் கண்டு எவ்வளவோ வருஷங்களாகிவிட்டன. நீ இந்த வேளைக்கு எந்தக்



காலத்தில் வந்திருக்கிறாய்? பசித்தால் மோர்சாதம் வேண்டுமானால் போடுகிறேன். ஒரு பிடி சாப்பிடு" என்றாள். அந்த நிலையில் ஒரு கவளம் மோர்சாதம் சாப்பிட்டால் உடல் குளிர்ச்சி அடையும்போல் அவனுக்குத் தோன்றியது. "சரி போடு" என்று அவன் தட்டை வைத்துக்கொண்டு சின்னக் குழந்தையைப் போல் உட்கார்ந்து விட்டான். மகனுடைய இந்தப் போக்கு தாய்க்கு அன்று விசித்திரமாகப் பட்டது. சாப்பிட்டுக் கொண்டே தன் மகனை நோக்கி மிகவும் சந்தோஷமாகத் தாய் சொன்னாள். "என்னடா இப்படியே காலம் ஓடிக் கொண்டிருந்தால் என்னாவது? ருக்மணியின் சம வயதுடைய பெண்கள் மூன்று குழந்தைகளைப் பெற்றுவிட்டார்கள். அவர்கள் பெறுவது இருக்கட்டும். நான் உன்னைப் பெறும் பொழுது எனக்கு வயது என்ன தெரியுமா 16 தான். இந்தக் காலத்தில் அதெல்லாம் நடக்காது என்றாலும், 20 வயதாகிவிட்ட பெண்ணுக்கு இன்னும் நீ வரன் பார்க்காமலே இருக்கிறாயே!" என்றாள். பாச்சா உம் கொட்டிக்கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பிட்டு முடிந்தவுடன் எழுந்திருக்கும்போது 'இதோ பார் அம்மா. இன்னும் ஒரு வாரத்தில் நம் ருக்மணிக்கு வரன் நிச்சயம் பண்ணிண்டு வரேன். சரிதானே. வரன் அப்படி நிச்சயம் பண்ணாவிட்டால் என் பெயர் பாச்சா இல்லை" என்றான். அவனுடைய தாயின் உள்ளம் ஜில்லென்று குளிர்ந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படியெல்லாம் பெயரை மாற்றிக் கொள்வதாக சத்தம் போடாதேடா. பெருமாள் பெயர் தான். ஏதோ ஊராருக்கு உழைப்பதைச் சற்றுக் குறைத்துக் கொண்டு உன் பெண் கல்யாணத்தைக் கவனித்தாயானால் போதும்" என்றாள். பாச்சா ஈரக் கையை துடைத்துக் கொண்டு, "நான் என்னம்மா செய்வேன். இதே பூங்குளம்

பண்ணையாருக்கு 10 ஆயிரம் ரூபாய் பணம் வேண்டுமாம். தந்தி அடித்திருக்கிறார். நான் பணத்தை அரேஞ்ச் செய்து, அங்கே கிராமத்தில் கொண்டு போய் கொடுத்துவிட்டு வரவேண்டும். நான் பணத்திற்காக அலைவேனா ருக்மணியின் ஜாதகத்தை தூக்கிக் கொண்டு அலைவேனா?" என்றான்.

பாச்சாவின் தாய்க்கு வாயெல்லாம் பல்லாகியது. "என்னடா பூங்குளம் பண்ணையாருக்குப் பணம் கஷ்டம் வந்து விட்டதா என்ன? பத்து ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று உனக்கா தந்தி அடித்து விட்டார்? பூங்குளம் பண்ணையார் மனது வைத்துவிட்டால் நல்ல வரனாகத் தேடித் தருவார். முதலில் அவருக்கு வேண்டிய காரியத்தைச் செய். பிறகு, ருக்மணிக்கு வேண்டியதை அவர் செய்து தருவார்" என்று மகனைப் பாராட்டிக் கொண்டே வாயிலுக்கு வந்து எதிர்த்த வீட்டு சாரங்கபாணியைக் கூப்பிட்டு, "சமையற்கார மாமா உமக்கு சேதி தெரியுமா? பூங்குளம் பண்ணையாருக்கே பணக் கஷ்டம் வந்துட்டுதாம். பாச்சாவுக்கு தந்தி அடித்துப் பணம் வேண்டுமென்று எழுதியிருக்கிறாராம். போன வருஷம் அவர் பெண் கல்யாணத்திற்குத் தானே நீர் போய் சமையல் செய்துவிட்டு வந்தீர்?" என்று மைக்கில் அலறுவது போல் அலறினாள்.

பாச்சாவும் தாய் அருகில் வந்து நின்று கொண்டான். சாரங்கபாணிக்கு ஒரு வாரமாக எங்கும் வேலையில்லாததால் அவர் அமைதியாக வாயிற்படிக் கருகில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலையை மென்று கொண்டிருந்தார். மடியிலே குழந்தைக் கண்ணன் தந்தையின் பூநூலை இழுத்து விளையாடிக் கொண்டிருந்தான். பார்த்தசாரதியை அந்தச் சமயம் சற்றுத் தூக்கி வைத்துப் பேச வேண்டுமென்று அவருக்கு ஏனோ தோன்றிவிட்டது. எழுந்து வாய் எச்சிலைத்



துப்பிவிட்டு வந்து "என்னம்மா உங்கள் பிள்ளையின் பெருமை உங்களுக்குத் தெரியாது. இந்த ஜில்லா கலெக்டருக்கே பணம் தேவையென்றால் பார்த்த சாரதிக்குத்தான் சொல்லி அனுப்புவார். பூங்குளம் பண்ணையார் என்ன, புதுப்பட்டி ஜமீன்தாருக்குப் பார்த்தசாரதி பணம் ஏற்பாடு பண்ணிக் கொடுக்கக் கூடிய சக்தி இருக்கிறது" என்று உரத்த குரலில் நமட்டுச் சிரிப்பையும் சேர்த்துச் சொன்னார்.

பார்த்தசாரதிக்கு கால் பூமியின் மேல் பாய வில்லை. 'இதோ பாரும் நான் நாளைக்கே பூங்குளம் போகப் போகிறேன். பணத்தை எண்ணி அவரிடம் போட்டுவிட்டு அங்கேயே வரன் பையன் யாராவது இருப்பான். ஏற்பாடு செய்து கொண்டு வருகிறேன் பாரும். ருக்மணியை இந்தத் தை மாதத்தில் கல்யாணம் செய்து வைக்கவில்லை என்றால் என் பெயர் பாச்சா இல்லை" என்று இரண்டாவது தடவையாகச் சபதம் எடுத்தார்.

"ஓய் என்னை மறந்து விடாதேயும். நான்தான் ருக்மணியின் கல்யாணத்திற்குச் சமையல். 'ஃபஸ்ட் ஜோராக' எல்லாம் நான் ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்று சாரங்கபாணி சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, பாச்சா பட்டென்று உள்ளுக்குள்ளே சென்று தன் தாயார் காதில் விழுவது சாரங்கன் காதிலும் விழவேண்டும் என்று, "போயும் போயும் இவன் சாப்பாட்டையா எல்லோருக்கும் போட வேண்டும். செகரட்டரி, மினிஸ்டர்கள் எல்லாம் வருவா. பெரிய பெரிய மனுஷா எல்லாம் வருவா. அவர்களெல்லாம் இவன் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு என்னைப் பார்த்துக் காரி உமிழ்வதற்காக சாரங்கபாணியின் சமையலைப் போட வேண்டுமா? நான் வேறு பெரிய இடத்தில் அரேஞ்ச் செய்து விடுவேன்" என்றான்

பாச்சா. அன்றிரவெல்லாம் ருக்மணியின் கல்யாணம் எப்படி நடக்க வேண்டுமென்பதற்கு திட்டம் போடும் படியாக தன் மனைவிக்கு யோசனை சொல்லிக் கொண்டிருந்தான்.

## 4

தங்கம் வீட்டிற்குள் நுழையும் பொழுது அம்மாவிடம் கோபித்துக் கொண்டே கையிலிருந்த பேப்பரை மேஜை மீது போட்டாள். "போட்டோ எடுத்துக் கொள்ளுமாறு பாச்சா மாமாவிடம் நீ சொன்னாயா?" என்று அம்மாவை விழுங்கி விடுபவள் போல் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

மரகதத்திற்கு ஒருகணம் ஒன்றும் புரியவில்லை. பாச்சா மாமாவைக் காட்டிக் கொடுக்க எப்பொழுதுமே அவள் விரும்ப மாட்டாள். ஊர் உலகத்தில் இருப்பவர்கள் அவர் குணத்தைப் பற்றி ஒரு மாதிரியாக சொன்னாலும், மரகதம் மட்டும் எந்தவிதமான குறையையும் அவர் மீது கூறியது கிடையாது. தங்கம் இப்பொழுது போட்டோ விஷயமாகக் கேட்டவுடன் பாச்சா என்ன செய்திருப்பார் என்பதை ஒருவாறு ஊகித்து அறிந்து கொண்டாள். கல்யாணத்திற்கு மாப்பிள்ளையிடம் காட்டுவதற்காக தன்னிடம் போட்டோ கேட்ட பாச்சா, வழியில் தங்கத்தைச் சந்தித்திருக்கிறார். உடனே இவளைப் போட்டோ ஸ்டுடியோவுக்கு வருமாறு அழைத்திருக்கிறார். அவ்வளவுதான். பாச்சா பெண் சபலம் கொண்டவர் அல்லர். மற்றவர்களைப் போல் பெண்களைப் பார்த்துப் பல்லிளிக்கவும் மாட்டார். அதனால் தங்கத்தைப் போட்டோ ஸ்டுடியோவுக்கு அழைத்தது குறித்து மற்றவர்களாய் இருந்திருந்தால் தவறாக நினைத்துக்



கொண்டிருப்பார்கள். ஆனால் மரகதம் அப்படி நினைக்கவில்லை.

"என்னம்மா கேட்டார் மாமா?" என்று அவள் கோபத்தைக் குறைப்பதற்காக குழைவாகக் கேட்டாள் மரகதம்.

"ஆமாம் கேட்டார்; கோட்டையூருக்கு நான் என் சிநேகிதி சந்திராவுடன் வந்து கொண்டிருந்தேன். ஸ்டுடியோவுக்கு வா என்று என்னை அழைக்கிறார். இந்த மாமாவுக்கு துளிக்கூட 'கல்ச்சரே' தெரியவில்லை. ஸ்டுடியோ வாசலில் என்னை நிற்க வைத்துவிட்டு அவர் ஏதேதோ கதை பேசிக் கொண்டிருக்கிறார். சந்திரா நன்றாகச் சொன்னாள் அவரைப் பற்றி. சந்திரா வீட்டாருக்குக் கூட மாமா ரொம்பவும் நண்பரா அம்மா" என்றாள் தங்கம்.

மரகதம் மெல்லச் சிரித்துக்கொண்டே, "ஆமாம். மாமா எல்லா வீட்டாருக்கும் நல்ல நண்பர்தான். அவரைத் தெரியாதவர்களே கிடையாது. ஆனால், நீயோ அவருக்குக் கெட்ட பெயர் சொல்லிக் கொண்டிருக்கிறாய்." தாயார் சொல்லும் பொழுது தங்கம் குறுக்கிட்டாள். "அந்தப் போட்டோ ஸ்டுடியோ பையன் அவரைக் கேலியும் கிண்டலுமாகப் பேசுகிறான். இது தெரியாமல் அவர் பிரமாதமாகக் கதை அளக்கிறார். நீ ஒருத்திதான் மாமாவுக்கு மதிப்புக் கொடுக்கிறாய். நான் இப்பொழுது சொல்கிறேன் அம்மா, எனக்குக் கல்யாணம் கல்யாணம் என்று வரன் பார்க்காதே. இவ்வளவு வசதியுள்ள சந்திரா வேலைக்குப் போகிறாள். 'பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று அவள் வீட்டில் சொல்கிறார்களாம். நீ என்ன வென்றால் என்னை ஒரு கிழவன் கையில் எப்படியாவது கொடுத்து ஊருக்கு அனுப்பிவிடலாம் என்கிறாய். உனக்கு ஏன் அம்மா என் மீது கோபம்?" என்றாள்.

மரகதம், தங்கத்தின் முகத்தை வேதனையுடன் பார்த்து, "உன் மீது எனக்கு என்னம்மா கோபம்? உன்னை வாழ வைப்பதற்காகத்தான் இந்த உலகத்திலேயே உழன்று கொண்டு இருக்கிறேன். உன் அப்பா இருந்தால் இப்படி நீ வேலைக்குப் போகத் துடிப்பதற்கு அவர் ஒருநாளும் ஒப்புக்கொள்ள மாட்டார். உனக்கு வேண்டுமானால் அவருடைய டைரியின் குறிப்பில் ஒரு பக்கத்தைக் காட்டுகிறேன். அதில் அவர் என்ன எழுதியிருக்கிறார் என்று நீ பார்த்தாயானால் ஒப்புக் கொள்வாய். அத்துடன் அவர் பத்திரிகையில் வேலையாய் இருந்தபொழுது எழுதிய கட்டுரைகளில் எல்லாமே பெண்கள் கல்வியைப் பற்றித் திட்ட வட்டமாகத் தன் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதனால் அவரைப் பிற்போக்காளர் என்றுகூட அவர் நண்பர்கள் கேலி செய்வது உண்டு. பெண்கள் அடுப்பங்கரைப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார் என்று தாக்கி நேரடியாகப் பேசுவதும் உண்டு. ஆனால் அதற்கெல்லாம் அவர் பயப்படமாட்டார். 'பிரத்யட்ச நிலையை வைத்துத்தான் எதையும் செய்ய வேண்டும்; இலட்சியம் என்று சொல்லிக்கொண்டு நடைபெறாத காரியத்தை நடத்தினால் வேதனைதான் எங்கும் வளரும். நான் அதை ஒப்புக்கொள்ள மாடடேன்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவார். அவருடைய கொள்கைகள் எனக்கும் பிடித்துத்தான் இருந்தன. அதனால் அவரை நாகரிக காலத்தை வெறுத்தவர் என்று சொல்ல மாட்டேன். வெளியே எங்குச் சென்றாலும் என்னை அழைத்துச் செல்வார். சில சமயம் அவர் வீதியில் நடந்து போகும்போது கூறுவார்: பாரதியார் இப்படித் தான் அவர் மனைவியை வீதியிலே கைகோத்து அழைத்துக் கொண்டு செல்வாராம் என்று. என்னையும்



கைகோத்து வீதியிலே அழைத்துக்கொண்டு செல்வார். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்னும். அவரை முற்போக்கு வாதி என்பதா பிற்போக்கு வாதி என்று சொல்வதா? அதனால் எந்தெந்தக் காலத்தில் எதை யெதைச் செய்ய வேண்டுமோ அதையதைச் செய்துவிட வேண்டும். அதனால்தான் உனக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று நினைக்கிறேனே தவிர உன்னை எங்கேயாவது 'தள்ளிவிட' வேண்டுமென்று எனக்கு ஆசை கிடையாது. உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்த பிறகு மாப்பிள்ளை வீட்டார் விரும்பினால் உங்களுடனேயே தங்கிவிட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இல்லையென்றால் நான் ஒவ்வொரு அங்குலமாக உளம் நொந்து, மெய் வாடி என் முடிவை எதிர்நோக்கிக் கழிப்பேன்."

தாயார் இப்படி உருக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தங்கத்தின் கண்களில் நீர் தளும்பியது. "அம்மா உண்மையைச் சொல்லுங்கள். பருவ காலத்தில் செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறீர்களா அல்லது பணம் இல்லாததால் என்னை இரண்டாம் தாரமாகவாவது பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க நினைக்கிறீர்களா? நிச்சயமாகச் சொல்லுங்கள். உங்களிடம் பணம் கிடையாது. என்னைப் படிக்க வைத்ததில் பணமெல்லாம் செலவழிந்து விட்டது. நீங்கள் உங்கள் தூரத்து உறவினர்களிடமிருந்து மாதா மாதம் மணியார்டரை எதிர்பார்ப்பதும் எனக்குத் தெரியும். உங்கள் கஷ்டம் எனக்குத் தெரியாது என்று நினைக்காதீர்கள். நானும் இந்தக் கஷ்டத்தை நீக்க வேண்டும். உங்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்த வேண்டும். உங்கள் வாழ்நாளில் நீங்கள் எப்படியாவது நிம்மதியாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் வேலைக்குப் போக

ஆசைப்படுகிறேன். அப்படியிருக்கும் போது நீங்கள் ஏன் பாச்சா மாமாவிடம் எப்படியாவது கல்யாணத்தை ஏற்பாடு செய்து விடுங்கள் என்று சொல்கிறீர்கள். நான் நிச்சயமாக இன்னும் மூன்று வருஷங்களுக்குக் கல்யாணம் செய்து கொள்ளவே மாட்டேன். இது உறுதி அம்மா, என்றாள். மரகதம் பெண்ணின் முகத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். தன் பெண் இவ்வளவு தூரம் வாதாடுவாள் என்று அவளுக்குத் தெரியாது. உலக விவகாரங்களையெல்லாம் அவள் தெரிந்து கொண்டிருக்கிறாள். இனி அவளைக் கட்டிப்பிடித்து வைப்பதும் சிரமம் என்பதை அவள் தெரிந்து கொண்டாள். ஆனால் அதுவே பெரிய ஆபத்தாயிற்றே; ஜுவாலை வீசும் நெருப்பைத் தக்கபடி பயன்படுத்தா விட்டால் அழிவை அல்லவா உண்டு பண்ணும் என்ற கவலை அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும் ஒரே நாளில் தன் மகளின் மனத்தை மாற்ற முடியாது என்று தெரிந்து கொண்ட மரகதம், “சரி தங்கம் இப்பொழுது நீ அதைப் பற்றிப் பேசாதே. எது எது எப்பொழுது நடக்க வேண்டுமோ, அது அது அப்பொழுதுதான் நடக்கும். நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும். ஏன் இப்பொழுது அதற்காக வீணாகக் கவலைப்படுகிறாய்” என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினாள்.

தங்கம் தாயாரிடம் ஓர் உறுதிமொழியைக் கேட்டுக்கொள்ள விரும்புவது போல், “நான் ஒன்று கேட்கிறேன் அம்மா. பாச்சா மாமா என்னைப் போட்டோ எடுத்துக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தவோ அல்லது வழியில் எங்காவது பார்த்துக் கல்யாணத்தைப் பற்றிப் பேசுவதாகவோ இருந்தால் தான் நிச்சயமாக அவருக்கு முகம் கொடுத்துப் பேச மாட்டேன்” என்று சொல்லிவிட்டு, வெளியே யாரோ வரும் அரவம் கேட்கவே வந்தாள்.



காக்கி உடை அணிந்த ஆபீஸ் அட்டெண்டர் ஒருவர் சைக்கிளிலிருந்து இறங்கி, “இதுதானே, ‘மிஸ் தங்கம் வீடு’ என்று கேட்டுக் கொண்டிருந்தான். ‘ஆமாம் நான்தான் தங்கம்.’ என்ன வேண்டும்? நீங்கள் யார்?” என்று தங்கம் கேட்டாள். நீ என்று சர்வ சாதாரணமாக ஏகவசனக் குரல் கேட்டுத்தான் அவனுக்குப் பழக்கம். நீங்கள் என்று தன்னை மரியாதையுடன் கூப்பிடும் தங்கத்தை ஏறிட்டுப் பார்த்து, “நான் குட்லக் கம்பெனியில் வேலை பார்க்கும் அட்டெண்டர். என் பெயர் குமார்தாஸ். நீங்கள் தான் மிஸ் தங்கமா? தங்களுக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறேன். இந்த நோட்டுப் புத்தகத்தில் கையெழுத்திட்டுவிட்டு வாங்கிக் கொள்ளுங்கள்” என்றான்.

“எனக்குக் கடிதமா? எங்கிருந்து வருகிறீர்கள்” என்று தங்கம் கேட்டாள். “நான் குட்லக் கம்பெனியிலிருந்து வருகிறேன். நீங்கள் அந்தக் கம்பெனிக்கு விண்ணப்பம் பேட்டிருந்தீர்கள் அல்லவா. உங்களை இன்டர்வியூவுக்கு வருமாறு சொல்லி இந்தக் கடிதம் தெரிவிக்கும். கடிதத்தில் உள்ள விஷயத்தை நான் முன் கூட்டியே சொல்வது தவறு. இருந்தாலும் இது மாதிரி நான் ஏழு எட்டு இடங்களுக்குக் கொண்டு கொடுத்து வருவதால் இந்தக் கடிதத்தில் இருக்கும் விஷயத்தைச் சொல்லிவிட முடிந்தது. அவசரமாக இன்டர்வியூ ஏற்பாடு செய்ய இருப்பதால் தபாலில் அனுப்பினால் நேரமாகும் என்று என்னை நேரிலேயே கொடுக்கச் சொல்லியிருந்தார்கள்” என்றான் - தங்கம் கவரைப் பிரித்துப் படித்தாள். அதற்குள் மரகதமும் வந்து விட்டாள். “அம்மா சென்ற மாதம் நான் அப்ளிகேஷன் போட்டிருந்தேனே. அந்தக் கம்பெனியிலிருந்து நேர்காணலுக்கு வரச் சொல்லிக் கடிதம் வந்திருக்கிறது. அந்தக் கம்பெனி பெரிய கம்பெனி அம்மா. எனக்கு

வேலை கிடைத்தால் நமக்கு எவ்வளவோ சௌகரியமாக இருக்கும்” என்று சொல்லிக் கொண்டே, தாயாரிடம் மெல்லிய குரலில், “எட்டணா இருந்தால் கொடேன். இந்தக் கடிதம் கொண்டு வந்தவருக்குக் கொடுத்து விடுவோம்” என்றாள். குமாரதாஸின் காதில் அவள் கூறியது விழுந்திருக்கும். அவன் உடனே சைக்கிளில் ஏறிக்கொண்டு, “அதெல்லாம் வேண்டாம்மா. ரெம்ப நன்றி. நாளைய தினம் நேரத்திற்கு வந்து சேருங்கள்” என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றான். இப்பொழுது தங்கத்திற்குப் பலபிரச்சனைகள் ஏற்பட்டன. இன்டர்வியூவுக்குப் போவதற்குத் தன்னிடம் சேலை ரவிக்கை முதலியவை இருக்கின்றனவா என்று அறிவதற்காகப் பெட்டியைத் திறந்தாள். ஒன்றிரண்டு பாச்சைகள் மீசையை நீட்டிக்கொண்டு வெளியே ஓடின. “இருக்கிற ஒன்றிரண்டைக்கூட பாச்சையே அரித்துவிடும் போல் இருக்கிறதே” என்று சொல்லிக் கொண்டே ஒவ்வொன்றாகத் தட்டி எடுத்து வைத்தாள். சாதாரணமாக இன்டர்வியூவுக்குச் செல்லும் வகையில் புடவை ஏதும் இல்லாததை தங்கம் அறிந்து கொண்டாள். மரகதம் அருகே இருந்தாள். மகளுடைய தயக்கத்தைக் கண்டாள்.

“என்ன தவிக்கிறாய். இந்தப் பட்டுப் புடவையைத் தான் கட்டிக்கொண்டு போயேன்” என்றாள் தாய். தங்கம் சிரித்தாள்.

“நன்றாய் இருக்கிறது அம்மா. பட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு இன்டர்வியூவுக்குப் போனால் நம்முடைய நிலைமையை அவர்கள் என்ன நினைப்பார்கள்? பெரிய பணக்கார வீட்டுப் பெண் போல் இருக்கிறது. இவளுக்குப் பணம் அதிகம் தேவையில்லை என்று நினைக்க மாட்டார்களா?”



“வேலைக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப் போகிறார்களா அல்லது அவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப் போகிறார்களா? கிழிந்த புடவையைக் கட்டிக் கொண்டு போனால் சம்பளம் அதிகம் கொடுக்கப் போகிறார்கள், என்ன?” என்றாள் மரகதம்.

தங்கம் முகத்தைச் சுளித்துக்கொண்டு, “பட்டுப் புடவையை கட்டிக்கொண்டு போவதற்கு எனக்குப் பிடிக்கவில்லை. நல்ல வாயிலாகவோ நைலக்ஸாகவோ டெரிலினாகவோ இரண்டு புடவைகள் இருந்தால் தேவலாம். ஏம்மா கணபதி ஸ்டோருக்கு இந்த மாதம் பணம் கொடுத்துவிட்டாய் அல்லவா? இன்றைக்குப் போய்க் கேட்டால் இரண்டு புடவை கடன் கொடுக்க மாட்டாரா” என்று கேட்டாள் தங்கம். மகளுடைய உள்ளத்தை மரகதத்தால் புரிந்த கொள்ள முடிந்தது. அவள் ஆசையைத் தட்ட முடியவில்லை.

அன்று மாலை கோவிலுக்குப் போய்விட்டு வரும்பொழுது கணபதி ஸ்டோருக்குள் நுழைந்தாள். அந்தக் கடையில் அவள் பல ஆண்டுகளாகத் துணிகள் வாங்குவதால் மரகதத்தின் மீது அந்தக் கடைக்காரருக்கு மிகுந்த மதிப்புண்டு. தன் மகளுடன் வந்திருக்கும் மரகதத்தைக் கண்டவுடன், முக மலர்ச்சியுடன் அவர் வரவேற்றார். முதலிலே மரகதம் தன் மகளுக்கு இன்டர்வியூ கடிதம் வந்திருப்பதைப் பெருமையாகச் சொல்லிக்கொண்டு, அதற்காகத்தான் இரண்டு புடவைகள் எடுப்பதற்காகவே வந்தேன் என்று கூறினாள். அவரும் சந்தோஷத்துடன் தானே முன் நின்று தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். புடவையை வாங்கிக் கொண்டு வெளியே வரும்பொழுது பாச்சா சைக்கிளில் வந்து இறங்கினார்.

"என்ன மரகதம், கல்யாணத்திற்கு இப்பொழுதே புடவையெல்லாம் எடுக்க ஆரம்பித்துவிட்டாயா என்ன? ருக்மணிக்குக்கூட கல்யாணம் நிச்சயமாகும்போல் இருக்கிறது" என்று கூறிக்கொண்டே வாசலில் நின்றுகொண்டே, கணபதி ஸ்டோர் முதலாளியின் காதில்படும்படியாக "செட்டியாரே என் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகப் போகிறது. எல்லா ஜவுளிகளையும் உங்கள் கடையில்தான் எடுக்கப் போகிறேன்" என்று கூவினார்.

மரகதத்திற்கு ஆத்திரமாகக் கூட இருந்தது. நடுத் தெருவில் நின்றுகொண்டு இப்படி கத்துகிறாரே என்று அவன் மெல்ல நகர எத்தனித்தாள். ஆனால், பாச்சா விடுவதாகத் தோன்றவில்லை, "மரகதம்மா என்ன அவசரமாகப் புறப்படுகிறீர்கள் போல் தோன்றுகிறதே புடவையைக் காட்டக் கூடாதா? எப்படி செலக்ஷன்? என்ன விலை? என்னிடம் காட்டக் கூடாதா" என்று சொல்லிக்கொண்டே தங்கத்தின் கையிலிருந்த புடவையை வாங்க எத்தனித்தான். ஆனால் தங்கம் அதைக் கொடுக்க விரும்பவில்லை.

மரகதம் அசட்டுச் சிரிப்புடன், "அதெல்லாம் ஒன்றுமில்லை. நாளையதினம் இன்டர்வியூவுக்குத் தங்கம் போக வேண்டியிருந்தது. கட்டிக்கொள்ள நல்ல புடவை இல்லை. அதனால் வாங்க வந்தேன்" என்று சொன்னாள். பாச்சா வாயிலிருந்த எச்சிலைத் துப்பிவிட்டு "அப்படியா? எந்தக் கம்பெனியிலிருந்து" என்று கேட்டான். கடைக்குள்ளிந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். பஸ்ஸுக்குக் காத்திருந்த ஓரிரண்டு பேர் திரும்பிப் பார்த்தார்கள். தெருவில் போவோர் வருவோர் அவர்களைப் பார்த்துக்கொண்டே போனார்கள். மரகதம் தங்கத்தின் பக்கம் திரும்பி, "என்னம்மா எந்தக் கம்பெனி என்று சொல்லு மாமாவுக்கு" என்றாள்.



"ரோட்டில் நின்றுகொண்டு ஏன் பேசணும் அம்மா. வீட்டிற்குப் போய் பேசலாமே" என்று தங்கம் மெதுவாகக் கூறினாள்.

அதற்கு, "அதுதான் சரியான முறை. தங்கம் இந்தக் காலத்து முறைகளையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறாள். பண்பாடு கல்ச்சர் என்று சொல்கிறார்களே அதை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாள் உன் பெண்" என்று தங்கத்திற்கு ஒரு புகழுரை கொடுத்துவிட்டு, "உனக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போகிற மாப்பிள்ளைக்கும் இப்படிக் கல்ச்சர் தெரிந்த பண்பாடு தெரிந்த ஒரு பெண்ணைத் தான் பிடிக்கும்" என்று சொல்லிவிட்டு, "நான் வீட்டுக்கு வருகிறேன், நீங்கள் போங்கள்" என்றார் பாச்சா.

அவர்கள் பஸ்ஸில் ஏறி வீட்டை அடைவதற்குள் பாச்சா வீட்டு வாயிலில் நின்று கொண்டிருந்தார். தங்கம் குட்லக் கம்பெனியிலிருந்து இண்டர்வியூ வந்திருக்கிறது என்று சொன்னவுடன் பாச்சா உரத்த குரலில், "ஹோ குட்லக் கம்பெனியிலிருந்தா வந்திருக்கிறது? அதன் மானேஜர் எனக்கு ரொம்பத் தெரிந்தவர். நான் ராத்திரியே பார்த்துச் சொல்லி விடுகிறேன். தங்கத்திற்கு வேலை கிடைத்துவிடும். வேலை கிடைத்தால் என்ன, கல்யாணம் செய்து கொண்ட பிறகு வேலைக்குப் போவதற்கு நான் மாப்பிள்ளையிடம் அனுமதி வாங்கித் தருகிறேன்" என்று கூறிவிட்டு, "மரகதம் நான் நாளைக் காலை வண்டியில் சொந்தக் கிராமம் வரையில் போகிறேன். ஊரிலிருந்து வரும்பொழுது உனக்கு என்ன வேண்டும். மிளகாய் வேண்டுமா? முந்திரிப் பருப்பு வேண்டுமா. தேங்காய் வேண்டுமா?" என்று கேட்டார்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று மரகதம் சொல்லி விட்டாள்.

"சரி அது போனால் போகிறது. ஒரு பத்து ரூபா இருந்தால் கொடு. நான் ஊருக்குப் போய் வந்து தருகிறேன்" என்று பாச்சா கேட்டார். மரகதத்திற் வேதனையாகப் போய்விட்டது. அவளிடம் 10 கா கூட கிடையாது. என்ன சொல்வது என்று தெரியாம கையைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

"மரகதம் உன்னிடம் பணம் இருக்காது என் எனக்குத் தெரியும். பக்கத்தில் யாரிடமாவது கைமாத்த வாங்கித்தா. நான் ஒரு வாரத்தில் ஊரிலிருந் வந்தவுடன் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். ரூபாய்க் 1 அணா வட்டி கேட்டாலும் பரவாயில்லை" என்றா

மரகதம் என்ன சொல்வாள் பாவம். தனக்கு என் கூடக் கடன் கேட்பதற்கு அவள் படி தாண்டினவ அல்லள். இப்பொழுது பாச்சாவுக்காக அவள் 10 ரூபா கேட்பதற்கு யாரிடம் போய்ப் பல்லை இளிப்பா மிகவும் கவலையாய்ப் போய்விட்டது. தாயி சங்கடத்தைத் தங்கம் உணர்ந்து கொண்டாள். தனக் வேலைக்குச் சிபாரிசு செய்வதற்கு இன்று இரவு பாச்ச மானேஜரைப் போய்ப் பார்ப்பதாய் இருந்தால் அவ நிச்சயம் 10 ரூபாய் கடன் வாங்கித் தந்து விடலா என்ற எண்ணத்துடன் தங்கம், "என்ன மாமா நாளை காலையில் ஊருக்குப் போகப் போகிறே என்கிறீர்களே!" என்றாள்.

"ஆமாம்மா, ருக்மணியின் கல்யாண விஷயமாக போகப் போகிறேன். அத்துடன் ஜமீன்தாருக்குப் பண கடன் அரேஞ்ச் பண்ணி இருக்கிறேன். அதைக்கொண் போய்க் கொடுப்பதற்குப் போகப்போகிறேன் என்னம்மா வேண்டும்" என்றார்.

"இல்லை, மானேஜரிடம் சொல்லி வேலைக் ஏற்பாடு செய்வதாகச் சொன்னீர்களே. நீங்க எப்பொழுது சொல்வீர்கள்?" என்று அவள் கேட்



பொழுது மரகதகம் குறுக்கிட்டு, "மாமாவை ஏண்டி தொந்தரவு செய்கிறாய். அவர் ஊருக்கு போவதற்குப் பணம் வேண்டும் என்று கவலைப்படுகிறார். அவரிடம் நாம் வீணே பேச்சுக் கொத்து அவரை நாம் இங்கே நிற்க வைப்பதில் என்ன லாபம். அவர் எங்காவது பணம் தேடி வாங்கிப் போவார் இல்லையா" என்றாள் தங்கம் சிரித்துக் கொண்டே. "அவரவர்களுக்கு அவரவர் கவலை. மாமா மனது வைத்தால் இப்பொழுது இந்த நிமிஷமே மானேஜரிடம் சென்று சிபாரிசு செய்து விட்டுப் போய்விடுவார். 10 ரூபாய்தானே வேண்டும். நான் எதிர்த்த வீட்டு மாமியைக் கேட்டு இதோ ஒரு நொடியில் வாங்கி வருகிறேன். மாமா மட்டும் எனக்கு இந்த உதவியைச் செய்வாரா?" என்று தைரியமாகக் கேட்டாள்.

பாச்சாவே அசந்துவிட்டார். "நான் இப்பொழுதே போய் மானேஜரிடம் சொல்லிவிட்டுத் திரும்பி வந்து உன்னிடம் பத்து ரூபாய் வாங்கிப் போகிறேன். சரிதானே அம்மா?" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, "உன்னுடைய பெயர் இண்டர்வியூ கடித நம்பர், தேதி இரண்டையும் எனக்கு ஒரு காகிதத்தில் குறித்துக் கொடு" என்று கூறிக் கேட்டு வாங்கிக் கொண்டு புறப்பட்டார்.

அவர் திரும்பி வருவதற்குள் தங்கம் எங்கு சென்றாளோ யாரைக் கேட்டாளோ தெரியாது. பத்து ரூபாய் பணத்துடன் தயாராய் நின்றாள். அவள் மகளுடைய சாமர்த்தியம் அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"நான் மானேஜரைப் பார்த்துச் சொல்லிவிட்டேன் அம்மா. நாளைக் காலையில் நீ போனவுடன் உன்னைத் தான் முதலில் இண்டர்வியூவுக்குக் கூப்பிடுவார். நீ தைரியமாக என் பெயரைச் சொல்லலாம். விஷ் யூ

குட்லக்” என்று பணத்தைப் பெற்றுக்கொண்டு பாச்சா புறப்பட்டார்.

ஆனால் மறுநாள் காலையில் குட்லக் கம்பெனியில் இண்டர்வியூ செய்யப்படும்பொழுது மானேஜர் வேலைக்கே வரவில்லை. தங்கத்தை இண்டர்வியூ செய்தவர் அந்தக் கம்பெனியின் உதவி மானேஜர்.

## 5

ஸ்ரீமான் பார்த்தசாரதி அவர்கள் வெளியூர் போய் இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. அவர் வீட்டிற்கு எதிர் வீட்டிலிருக்கும் சமையல்காரர் சாரங்கபாணியின் பிள்ளைக்குப் பி.காம். பரீட்சையில் தேறிவிட்டது. அவர் ஸ்பெஷலாக வீட்டிலேயே ஸ்வீட் தயார் செய்து அவர் வசிக்கும் காலனியில் உள்ளவர்களுக்கெல்லாம் வினியோகித்தார். கனகமும் வீட்டு வெளி வாயிலில் படியில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அருகே அவள் மகள் ருக்மணியும் நின்று கொண்டிருந்தாள். சாரங்கபாணி கொடுத்த ஸ்வீட்டில் பாதியை விண்டு ருக்மணியிடம் கொடுத்து, “மாமாவின் பிள்ளை பாஸ் செய்துவிட்டார். இனி மாமாவுக்குக் குறைவு கிடையாது. நல்ல இடமாகப் பார்த்து வேலைக்குப் போய் விட்டால் மாமா இப்படி அலைந்து அலைந்து சம்பாதிக்கும் தொல்லையும் குறையும்” என்றாள் கனகம்.

ஆனால், சாரங்கபாணி மெல்லிய குரலில் “அதெப்படி அம்மா முடியும்? என்றைக்கும் உழைத்துத்தான் பிழைக்க வேண்டும். பிறர் கையை நம்பவே கூடாது. என் கையில் வித்தை இருக்கும்பொழுது நாம் பிறர் கையை எதிர்பார்த்துக் கை கட்டி நிற்கலாமா? என் தகப்பனார் 80 வயது வரையில் பட்டணம் பக்கம் வரவேயில்லை. அவர் கிராமத்திலிருந்து கொண்டு ஏதோ



அங்கே கிடைக்கும் சொற்ப வரும்படியில் காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்தார். கடைசி வரையில் கண் நன்றாகத் தெரிந்தது. கம்பு ஊன்றாமலே நடப்பார். அவர் வேட்டியை அவரே தோய்த்துக் கொள்வார். என்னிடமிருந்து காலணா காசு எதிர்பார்க்க மாட்டார். ஆனால் மாதாமாதம் நான் 10 ரூபாய் அவருக்கு அனுப்பிவிடுவேன். அதைக்கூட அவர் எவ்வளவு நாள் சேர்த்து வைத்திருந்தாரோ 500 ரூபாயைக் கொடுத்து ஒரு சிறு வீடு விலைக்கு வருகிறது என்று என் பெயருக்கு வாங்கி அந்தப் பத்திரத்தை ரிஜிஸ்டர் தபாலில் எனக்கு அனுப்பி வைத்துவிட்டார். அப்படியென்றால் பாருங்களேன். இதுபோல் நானும் என் பிள்ளையின் வருமானத்தை ஒருநாளும் எதிர்பார்க்க மாட்டேன். பையன் வேலைக்குப் போனால் அடுத்த பிரச்னை அவனுடைய கல்யாணப் பிரச்னைதான். அது கிடக்கட்டும். நம்ம ருக்மணிக்கு எப்ப கல்யாணம்?” என்று சாரங்கபாணி ருக்மணியைப் பார்த்துக்கொண்டே கேட்டார்.

“உம் எல்லாம் பெருமாள் கண் திறக்கணும்” என்று சொல்லிக்கொண்டே கனகம் எழுந்தாள். அப்பொழுது பாச்சாவின் வீட்டிற்கு யாரோ வந்து கொண்டிருந்தார்கள்.

சற்று வயதானவர். “பார்த்தசாரதி இந்த வீட்டில் தானே இருக்கிறார்?” என்று மூக்குக் கண்ணாடியில் தனது கண்ணை மேல் பக்கமாக ஏறிட்டு நோக்கிக் கேட்டார். முகத்தில் க்ஷவரம் செய்யாததனால் ரோமம் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. தோய்த்துத் தோய்த்துக் கட்டியதால் வேஷ்டியும் ஜிப்பாவும் பழுத்துப்போய் இருந்தன. கையிலே உள்ள தடியை மெல்ல ஊன்றிக் கொண்டே அவர் வரும்பொழுது முதுமையுடன் சற்று வறுமையும் சேர்ந்து காட்சியளித்தன. “இந்த வீடுதான்

வாருங்கள். நீங்கள் யார்" என்று கேட்டாள் ருக்மணி. கனகம் உள்ளே சென்று கதவின் மறைவில் நின்று கொண்டிருந்தாள். என்னதான் பட்டண வாசத்தில் இருந்தாலும் புதிய மனிதரை நேருக்கு நேர் கண்டு அவள் பேசும் வழக்கம் இல்லை. அத்துடன் அவளுடைய தாயார் அவளை அப்படிப் பழக்கி இருந்தாள். பிற ஆடவர் எதிரே வந்து நிற்பது கிடையாது. இரண்டு புருஷர்கள் இருக்கும் இடத்தில் கலீரென்று சிரித்துப் பேசுவது கிடையாது. பிறருடைய வம்புப் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்வது கிடையாது. அண்டை அயல் வீடுகளுக்குச் சென்று பகல் பொழுதில் வீண் வம்பு அரட்டை அடிப்பது கிடையாது. அவளுடைய தாயார் இவற்றையெல்லாம் மிகவும் கவனமாகச் சொல்லிக் கொடுத்திருந்தார். அந்த நல்ல குணம் வாழ்நாளில் அவளை மிகவும் காப்பாற்றியது.

"குழந்தை உன்னுடைய தகப்பனார்தானா அவர்" என்று கேட்டார் வந்தவர். "ஆமாம். நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்? அப்பா ஊரில் இல்லையே" என்றாள் ருக்மணி. அதைக் கேட்டவுடன் சற்று அசந்துபோய் நின்று விட்டார் வந்தவர். ஏமாற்றத்தினால் அவருக்கு ஒரு கணம் என்ன செய்வது என்றுகூடத் தெரியவில்லை. அவர் மெல்லப் படிக்கட்டில் உட்காரப் போனார். "இல்லை இப்படி உள்ளே வந்து உட்காருங்கள்" என்று சொல்லி வராண்டாவிலிருந்த ஒரு உடைந்த நாற்காலியை எடுத்துப் போட்டாள் ருக்மணி. "வேண்டாம் அம்மா நான் இப்படியே நின்று கொள்கிறேன்! போக வேண்டியதுதானே" என்றார் கிழவர். "அப்பாவைத் தேடிக்கொண்டு வந்தீர்களே, ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லிவிட்டுப் போங்கள்" என்று கேட்டாள் ருக்மணி. "நல்ல வெயிலில் வந்திருக்கிறீர்கள்" என்று தனது குழந்தை உள்ளம் பிரதிபலிக்கக் கூறினாள் ருக்மணி.



"என்னை இன்று உங்க அப்பா வரச் சொல்லியிருந்தார். நான் திருவல்லிக்கேணியிலிருந்து வருகிறேன். ரொம்பவும் நம்பிக்கையாக வந்தேன். அவர் எப்பொழுது ஊருக்குப் போனார் குழந்தை?" என்று கேட்டார் கிழவர்.

'அவர் ஊருக்குப் போய் இரண்டு நாட்கள் ஆகிறதே' என்றாள் ருக்மணி. 'இன்றைய தினம் வரச் சொல்லியிருக்க மாட்டாரே' என்று கனகம் உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள். கிழவர் ஒன்றும் பேசவில்லை. பெருமூச்சு விட்டார். அவர் கண்களிலே கண்ணீர் தளும்பியது. தடியை மெல்ல ஊன்றிக் கொண்டு புறப்பட ஆயத்தமானார்.

"கொஞ்சம் அவரை இருக்கச் சொல்லு. மோர் கொண்டு வருகிறேன்" என்று கூறினாள் கனகம். "வேண்டாம் அம்மா. நான் வந்திருந்த காரியம் ஆகியிருந்தால் மோர் என்ன அமிர்தமே சாப்பட்டது போல் ஆகியிருக்கும். இப்பொழுது எனக்குள்ள நிலையில் ஒரு பச்சைத் தண்ணீர் கூட வாய் வழியாக இறங்காது. நான் போய்விட்டு வருகிறேன். அப்பா வந்தால் சுதர்சனம் வந்துவிட்டுப் போனார் என்று சொல்லு" என்று கூறி எழுந்தவர் மறுபடியும் திரும்பி ருக்மணியைப் பார்த்து, "என்றைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார்" என்று கேட்டார்;

"சொல்லிவிட்டுப் போகவில்லை தாத்தா. அவர் ஊருக்குப் போனால் காரியங்களை முடித்துக்கொண்டு தான் திரும்பி வருவார்" என்றாள் ருக்மணி.

"என்னம்மா குழந்தை உன் பெயர் என்ன?" என்று கேட்டார் பெரியவர்.

"ருக்மணி"

"நீ பாச்சாவின் எத்தனாவது குழந்தை"

"நான்தான் முதல் குழந்தை."

"பாச்சாவுக்கு எத்தனை குழந்தைகள் அம்மா? உனக்குத் தங்கை தம்பி இருக்கிறார்களா?"

"இல்லை தாத்தா."

"நீ என்ன, பள்ளிக்கூடம் படிக்கிறாயா?"

"இல்ல தாத்தா. எட்டாவதோடு என்னை நிறுத்தி விட்டார்கள்."

"கல்யாணத்திற்கு வரன் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள் இல்லையா" ருக்மணிக்கு நாணத்தால் முகம் சிவந்தது. 'ஆமாம்' என்று சொல்லிக்கொண்டே அவள் சென்றுவிட்டாள்.

"எனக்கும் உன்னைப்போல் ஒரு பெண் இருக்கிறாள். ஆனால் அவள் மூத்த பெண் இல்லை. அவள் மூன்றாவது பெண். அவளுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயம் பண்ணியிருக்கிறேன். அது சம்பந்த மாகத்தான் நான் இப்பொழுது வந்தேன்" என்றார் பெரியவர். யாரும் கேட்காமலேயே தானே சொல்லிக் கொண்டார்.

கனகம் இப்பொழுது சற்றுத் கதவு மறைவி லிருந்தே வெளியே வந்தாள். "கல்யாணம் என்றால் ஏகப்பட்ட அலைச்சலாய் இருக்குமே. அந்த அலைச்சலோடு அலைச்சலாக திருவல்லிக்கேணி யிலிருந்து இந்த வெயிலில் எங்கே வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

கிழவர் ஒன்றும் பேசவில்லை. அவர் மெல்லத் திரும்பி ஒவ்வொரு படிக்கட்டாகக் கவனமாகப் பார்த்து இறங்கி, "நான் போய்விட்டு வருகிறேன் அம்மா" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

ருக்மணியும் கனகவல்லியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பாவம் கிழவர்: இந்த



வெயிலில் தனது மூன்றாவது பெண்ணுக்குக் 'கல்யாணம் செய்து வைக்க வேண்டிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது' என்று தன் வீட்டுப் படியிலிருந்தே எதிர்வீட்டு சாரங்கபாணியின் மனைவியிடம் தெரிவித்தாள் கனகம்.

சாரங்கபாணியின் மனைவி மெல்லச் சிரித்தாள். "மாமி, நான் என் அப்பாவின் எட்டாவது பெண். கல்யாணம் செய்து கொடுப்பதற்குள் அப்பா பட்டபாடு இன்னதென்று சொல்ல முடியாது. கடைசியில் இவர் என்னைப் பெண் பார்க்க வந்தார். அம்மை வடு மூஞ்சி என்று எவ்வளவோ பேர் பார்த்துவிட்டுப் போய் இருக்க இவர் மட்டும் என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று உடனே சம்மதத்தைத் தெரிவித்து விட்டாராம். என் அப்பாவிடம் ஒரு 5,000 ரூபாய் இருந்திருந்தால் அம்மை வடு முகமாய் இருந்தாலும் 5,000 ரூபாயை வரதட்சணையாக வீசி எறிந்திருந்தால் நல்ல இடத்தில் கல்யாணம் நடந்திருக்கும். பாவம் அவருக்கு அப்பொழுதே இதே சமையல் தொழில்தான். இப்பொழுதுள்ள வரும்படிகூட கிடையாது. குப்புசாமி என்பவரிடம் உதவியாகத்தான் இருந்தார். சமையல்காரர் என்பதால் அவருக்கு யாருமே பெண் கொடுக்கத் துணியவில்லை. என் அப்பாவுக்கும் வசதியுமில்லை. இவரும் பணம் கொடுத்து கல்யாணம் செய்து கொண்டு போகிறேன் என்று சொன்னவுடன் அந்த முகூர்த்தத்திலேயே கல்யாணம் நடந்துவிட்டது. என் அப்பாவுக்கு அப்பொழுது 70 வயதுக்கும் மேல் இருக்கும் என்று நினைக்கிறேன். பெண்ணைப் பெற்றுவிட்டால் பெற்றவருக்கு வயது எப்பொழுதுமே ஒரு பொருட்டில்லை" என்று அவள் கதையாகச் சொல்லிக்கொண்டு போனாள்.

"ஏன் மாமி சமையல்காரர் என்றால் அவ்வளவு குறைவா என்ன? கல்யாணத்திற்குப் போய் சமையல் நன்றாக இருந்தது என்று நாக்கைச் சப்புக் கொட்டிச் சாப்பிட்டுவிட்டு வருகிறோம். இலையில் இவ்வளவு ஸ்வீட் பட்சணங்கள் வைத்தார்கள். சித்ரான்னங்கள் பரிமாறினார்கள். காய்கறி வகை நூறு இட்டார்கள். ஸ்வீட் பச்சடி இருக்கிறதா. ரசம், பன்னீர் ரசமா? சாம்பார் வெங்காய சாம்பாரா? அப்பளம் எவ்வளவு தடவை போட்டார்கள் என்றெல்லாம் கேட்டு அதை வைத்துக்கொண்டு அந்தக் கல்யாணத்தில் மதிப்பை எடைபோடுகிறார்களே? இந்தச் சமையல்காரர் இல்லாவிட்டால் விருந்துதான் பரிமளிக்குமா? விருந்து சாப்பிடாத கல்யாணம் மனதில் நிற்குமா? ஏன் மாமி இப்படி உலகத்தில் தொழிலில் உயர்வு தாழ்வு காட்டுகிறார்கள்?" என்றாள் ருக்மணி.

சமையல்காரர் மனைவி சிரித்தாள். "அடி பெண்ணே உனக்கு இன்னும் உலக நடவடிக்கை தெரியாது. என்ஜினீயரும் ஆண் பிள்ளைதான். ஓட்டலில் மேஜை துடைப்பவனும் ஆண் பிள்ளைதான். ஆனால் என்ஜினீயருக்கு உள்ள மதிப்பு மேஜை துடைப்பவருக்கு இல்லை. காரணம் வருமான வித்தியாசமே என்று சொல்வார்கள். ஆனால், ஒரு சமையல்காரர் வருஷத்தில் 5,000 ரூபாய் சம்பாதித்தாலும் ஒரு குமாஸ்தாதான் உயர்வாகக் கருதப்படுகிறார். இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. நான் உனக்கு எங்கே விளக்கிச் சொல்லப் போகிறேன். பஸ் கண்டக்டரையும் ரயில்வே கார்டு, இரண்டு பேரையுமே தான் எடுத்துக் கொள்வோமே. ரயில்வே கார்டுக்குள்ள மதிப்பு பஸ் கண்டக்டருக்குக் கிடைக்கிறதா? - பெரிய அதிகாரியின் காரை ஓட்டிச் செல்கிறார் டிரைவர். அந்த அதிகாரி அல்லது பெரிய மனிதரின் உயிர் அவர் கையில் தான்



இருக்கிறது. ஆனால், பெரிய விருந்தில் காரில் உட்கார்ந்து போகும் மனிதருக்கு ராஜோபசாரம் நடக்கிறது. அவர் சாப்பிட்டுவிட்டு அவ்வளவு நேரம் காத்திருக்கும் காரில் ஏறி அமர்ந்து டிரைவரை ஓட்டிப் போகச் சொல்கிறார். டிரைவரை மற்றவர் யாராவது சாப்பிடக் கூப்பிடுகிறார்களா? அப்படிக் கூப்பிட்டாலும் அவருக்கு உட்கார வைத்துப் போடும் இடம் எங்கு தெரியுமா? வராண்டா ஓரம். செருப்பெல்லாம் விட்டு வைப்பார்களே, அதைத் தள்ளிவிட்டு அதற்கு அருகே உட்கார வைப்பார்கள். இப்படி இருக்கிறது உலகம். இதில் சமையல்காரர் மட்டுமென்ன உயர்ந்துவிட்டார்?" என்று கூறுவதை அவள் கேட்கும்பொழுது சிறியவளானாலும் ருக்மணியின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

"அதற்காக நான் கேட்கலை மாமி. பாரதியார் பாட்டு படித்திருக்கிறேன். அதிலே செய்யும் தொழிலில் வேற்றுமையே கிடையாது" என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். எவ்வளவு வருஷமாக எல்லோரும் பாரதியார் பாட்டைப் பாடுகிறார்கள். ஒருவராவது அதன்படி நடக்க மாட்டேன் என்கிறார்களே என்பதற்காகத்தான் கேட்டேன் என்றாள்.

சாரங்கபாணி தனது ஸ்வீட் விநியோகத்தை முடித்துக்கொண்டு, "ருக்மணி என்ன சொல்கிறாள்?" என்று கேட்டுக்கொண்டே வந்துவிட்டார். ருக்மணி நாணத்தால் முகம் சிவக்கச் சட்டென்று உள்ளே சென்றுவிட்டாள். எனினும் தன் கணவரிடம் எதிர்வீட்டு மாமி தெரிவித்தது காதில் கேட்டுக் கொண்டு இருந்தது. "இப்படியெல்லாம் தொழிலை வைத்துக்கொண்டு ஏற்றத்தாழ்வு பார்க்கிறார்களே என்ற ருக்மணி வருத்தப்படுகிறாள். சிறுசு அவளுக்கு இன்னும் உலக அனுபவம் போதவில்லை அப்படிச் சொல்கிறாள்" என்றாள் அவள்.

சாரங்கபாணி இடியிடியென்று சிரித்தார். "ருக்மணி என்று அழைத்தார். இப்பொழுது பிரமாதமாய்ப் பேசுவாய் எல்லாம். வாய்ப் பேச்சுதான் எல்லாருக்கும். உனக்கே ஒரு டிரைவரோ அல்லது சமையல்காரரோ வரனாகப் பார்த்துக்கொண்டு வந்தால் கல்யாணம் செய்து கொள்வாயா?" என்று கேட்டார்.

'மாமா, நல்ல கணவர் குடும்பத்தைக் கஷ்டமின்றி நடத்தக்கூடிய சக்தி படைத்தவராய் இருந்தால் தொழில் வேற்றுமையை நான் பார்க்கவே மாட்டேன்' என்றாள் ருக்மணி.

"நீ சொல்லிவிட்டாய். உன் பெற்றோர்கள் ஒப்புக் கொள்வார்களா?" என்றார் சாரங்கபாணி.

கனகம் இப்பொழுது பேச்சில் கலந்து கொண்டாள். "என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள். நாங்கள் என்ன பெரிய அந்தஸ்தில் இருக்கிறோம். ஒரு தொழிலும் செய்யாமல் என்னுடைய கணவர் வாய் வீச்சிலே ஊரை விற்று உலையில் போட்டுக் கொண்டி ருக்கிறாரே. எங்களுக்கு என்ன டாக்டர் வீட்டுப் பிள்ளையா வரனாக கிடைக்கும்? ருக்மணி சொன்னதை நான் பூரணமாக ஆமோதிக்கிறேன்" என்றாள்.

"இது நிச்சயம் தானே மாமி" என்று கேட்டார் சாரங்கபாணி.

"ஆஹா முக்காலும் உண்மை. நல்லவரனாக கணவனாக கண்ணுக்கு லட்சணமாக இருக்கும் பிள்ளை எந்தத் தொழில் செய்பவனாக இருந்தாலும் நாங்கள் என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கத் தயார்."

"ஒரு சமையல்காரர் பிள்ளைக்கு" என்று சாரங்கபாணி சட்டென்று கேட்டார். "இவ்வளவு நேரம் ருக்மணி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டீர்களே.



சமையல்காரராய் இருந்தால் நாங்கள் கொடுக்கத் தயாராய் இருக்கும்பொழுது சமையல்காரர் பிள்ளைக்கு ருக்மணியைக் கொடுப்பதற்கு மறுக்க மாட்டோம்" என்று லட்சியவாதி பேசுவதுபோல் பேசினாள், கனகம்.

சாரங்கபாணி ஒரு கணம் மௌனமாக இருந்தார். பிறகு வாய் வெற்றிலையைத் துப்பிவிட்டு தண்ணீர் போட்டு வாயைக் கொப்பளித்துவிட்டு "சமையல்காரன் மகன்தானே? இருக்கிறான்: இதோ உங்கள் வீட்டுக்கு எதிரே இருக்கிறான். நீங்கள் 'உம்' என்றால் எனக்கு சரிதான்" என்றார் சாரங்கபாணி.

கனகத்திற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு சற்றுத் திடுக்கிட்டவளாய், "யாரைச் சொல்லுகிறீர்கள்? உங்கள் பிள்ளையையா?" என்று கேட்டாள். "ஆமாம் சாரங்கனைத்தான் சொல்கிறேன். நான் சமையல்காரன். என் பிள்ளை சமையல்காரன் மகன்தானே," என்று கூறியவுடன் கனகவல்லியும் ருக்மணியும் சிலைபோல் சலனமற்று நின்றனர்.

## 6

தங்கம் வேலையை ஒப்புக்கொண்டு விட்டாள். பாச்சா சொன்ன மானேஜர் அந்த ஆபீசில் இல்லை. அவளுடன் வேலைக்கு வந்த மூன்று பேர்களுள் அவளைத் தான் தேர்ந்தெடுத்தார் பேட்டி கண்ட உதவி மானேஜர். நல்ல களையான முகம். சிரித்துப்பேசும் சுபாவம். முதல் நாள் பேட்டிக்கு வருமாறு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்த அட்டெண்டர் தங்கத்தின் மேஜை அருகே வந்து "வேலை கிடைத்துவிட்டதாம்மா. இந்த ஆபீசில் கொஞ்சம் கவனமாக வேலை செய்யுங்க. என்னடா இப்படிச் சொல்றானேன்னு நினைக்காதீங்க. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு குணம் இங்கே.

பொறாமை, சூழ்ச்சி, கொடிய பார்வை, நரித்தந்திரம் எல்லாம் இங்கே இருக்கின்றன. எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு போனால்தான் காலம் தள்ள முடியும்" என்று சொல்லிக்கொண்டே அவன் போய் விட்டான்.

தங்கத்திற்குப் புதிய அநுபவம். கண்ணைக் கட்டி எங்கோ விட்டது போன்ற பிரமை. டைப்ரைட்டர் யந்திரத்தின் முன் உட்கார்ந்ததும் அவள் கை நடுங்கியது. அட்டண்டர் வேறு பயமுறுத்துவதுபோல் சொல்லி விட்டுச் சென்றிருந்தான். அந்தப் பெரிய ஹால் முழுவதும் எல்லாம் ஆண் பிள்ளைகள், கிழவர், குமரர் டெர்லின் சிலாக் அணிந்தவர், பேண்டுக்குள் சர்ட்டை நுழைத்துக் கொண்டு டை மட்டும் கட்டிக் கொண்டி ருந்தவர். ஜிப்பாவோடு வந்தவர், அரைக்கை அழுக்குச் சொக்காயுடன் தன் வறுமையையும் பறை சாற்றுபவர் போல் காட்சியளிப்பவர், இப்படியாகப் பலவிதமான உடைகளில் காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள். உடைகளைப் போல உள்ளமும் பலவிதம்தான். தெருவிலே ஓடும் பஸ்ஸின் சப்தத்திற்கு எதிரொலி போல் அந்தப் பெரிய ஹாலில் ஒருவருக்கொருவர் சடசடவென்று பேசிக் கொள்ளும் சப்தம் ஆரம்பப் பள்ளிக்கூடத்தைத் தான் நினைவூட்டியது. திடீரென்று ஓர் அமைதி. சற்று வயதானவராகவும் பழுத்த பரங்கிப் பழம் போன்ற நிறத்துடனும் வழுக்கைத் தலையாய் ஒருவர் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். எல்லோரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் தெரிவித்தனர். அவர் ஒருவரையும் கவனியாதவர் போல் நேரே தனக்கென்று ஏற்படுத்தப் பட்ட அறைக்குள் நுழைந்துவிட்டார். அது ஏர் கண்டிஷன் அறை முடுக்கப்பட்ட யந்திரம் போல் எல்லோரும் பரபரவென்று இயங்கினர். மானேஜர் வராததால் உதவி மானேஜரை மானேஜிங் டைரக்டர் கூப்பிட்டார்.



அந்தக் கம்பெனியின் ஆரம்பக் காலத்தில் சிறு குமாஸ்தாவாக சேர்ந்ததிலிருந்து படிப்படியாக உயர்ந்தவர் அந்த மானேஜிங் டைரக்டர் சுந்தரமூர்த்தி. காலையில் 9 மணிக்குக் காரியாலயத்திற்கு வந்தார் என்றால் மாலை நான்கு மணி வரையில் அவர் ஒரு வினாடியைக் கூட வீணாக்காமல் வேலை செய்து அந்தக் கம்பெனியை இவ்வளவு உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தவர். இப்பொழுதெல்லாம் வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள்தாம் காரியாலயத்திற்கு வருவது என்று பழக்கப்படுத்திக் கொண்டார்.

உள்ளே நுழைந்த உதவி மானேஜர் வெளியே வந்து தங்கத்தை அழைத்து, "மானேஜிங் டைரக்டர் கூப்பிடுகிறார் அம்மா. நீ மிகவும் கவனமாக நோட்ஸ் எடுத்துத் தப்பில்லாமல் டைப் செய்து வை. நீ வேலைக்கு அமர்ந்த உடனேயே மானேஜிங் டைரக்டரிடம் நோட்ஸ் எடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. நீ அதிர்ஷ்டம் செய்தவள்தான். பதட்டப்படாமல் அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் குறிப்பு எடுத்துக் கொள். டைப் செய்யும் பொழுது ரொம்பப் பொறுமையாகவும் இருபுறமும் ஒரே ஒழுங்காக அமையும்படியும் சீராக இருக்க வேண்டும். அடித்தல் திருத்தல் இருக்கவே கூடாது. ரப்பராலும் அழிக்கக் கூடாது. மெதுவாக டைப் செய்யலாம். ஆனால், சுத்தமாக இருக்க வேண்டும். இதையெல்லாம் மறந்து விடாதே" என்று உபதேசம் கூறி மானேஜிங் டைரக்டர் அறைக்குள் தங்கத்தை அனுப்பினார் உதவி மானேஜர். தங்கத்திடம் அவர் குனிந்து பேசிக் கொண்டிருப்பதை டேனியலும் கேசவனும் பார்த்து தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்.

"இவ்வளவு பேர் இன்டர்வியூவுக்கு வந்தார்களே இவளை மட்டும் எப்படித் தேர்ந்தெடுத்தார்?" என்று டேனியல் கேட்டான்.

"யாராவது சிபாரிசு செய்திருப்பார்கள்? மானேஜர் இருந்திருந்தால் இவ்வளவு சீக்கிரம் அவர் அப்பாயிண்ட் செய்வாரா?" என்றான் கேசவன். "அது என்ன லேடி டைப்பிஸ்டைத்தான் வைக்க வேண்டுமென்று ஏதாவது கட்டாயமா? எவ்வளவோ பேர் ஆம்பளைங்க வேலையில்லாம திண்டாடிக் கொண்டிருக்கும் போது இப்படி பொம்பளைங்களை வேலைக்கு வைக்கி றாங்களே?" என்று டேனியல் வேதனைப் படுபவன் போல் சொன்னான். கன்னையா நாயுடுவும் இப்பொழுது பேச்சில் கலந்து கொண்டார். அதற்குள் ஹெட் கிளார்க் ஆராவமுதன் 'உஸ்' என்று சப்தத்தை எழுப்பி "மானேஜிங் டைரக்டர் வந்திருக்கிறார் என்று கூடத் தெரியாமல் உங்கள் பிரதாபத்தை ஆரம்பித்து விட்டீர்களே. அவர் போகிற வரையிலாவது கமென்ட்ரி இல்லாமல் இருக்கக் கூடாதா?" என்று எச்சரித்தார்.

தங்கம் அவர்களைக் கடந்து மானேஜிங் டைரக்டர் அறைக்குள் செல்லும்பொழுது, "பரவா யில்லையே, எடுத்த எடுப்பிலேயே மானேஜிங் டைரக்டர் அறைக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்து விட்டதே இந்தப் பெண்ணுக்கு. அதிர்ஷ்டக்காரிதான்" என்றார் கன்னையா நாயுடு. தங்கம் மெல்ல மானேஜிங் டைரக்டர் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். குளிர் சாதனம் பொருத்தப்பட்டிருந்த அறை ஏற்கனவே பயத்தால் நடுக்கத்தை அளித்திருந்த அவளுக்கு மேலும் மேலும் நடுக்கத்தை அளித்தது. மானேஜிங் டைரக்டர் சுந்தரமூர்த்தி நிமிர்ந்து பார்க்காமல் காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். யார் வந்திருக்கிறார்கள் என்று பார்க்காமலேயே, "சிட்



டௌன். டேக் இட்" என்று சொல்லிவிட்டு மளமள வென்று கடிதம் அடிப்பதற்கு வேண்டிய குறிப்புகளைச் சொன்னார். தங்கம் கடவுளைத் துதித்துக் கொண்டே கூடியவரையில் தப்பில்லாமல் நோட்ஸ் எடுத்தாள். நான்கைந்து கடிதங்களைக் கொடுத்து விட்டுத்தான் சுந்தரமூர்த்தி நிமிர்ந்து நோக்கி இதைச் சீக்கிரமாக டைப் செய்து கொண்டு வா" என்று கூறியவர் தங்கம் எழுந்து செல்லும்பொழுது, "நீ இந்த ஆபீசுக்கு வந்து எவ்வளவு நாட்களாகிறது?" என்று கேட்டார்.

தங்கம் தலையைக் குனிந்து கொண்டே 'இன்று தான் நான் அப்பாயிண்ட் ஆனேன் சார்' என்று மிகவும் பண்பும் அமைதியும் கலந்த குரலில் கூறினாள். சுந்தரமூர்த்தி அவளுடைய தந்தையைப் பற்றியும், அவர் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியும் விசாரித்தார். தங்கம் மிகவும் மெல்லிய குரலில் தன் தந்தை இறந்துவிட்டார் என்றும் அவர் பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை செய்தவர் என்றும் கூறினாள்.

'பெயர் என்ன' என்று கேட்டார் சுந்தரமூர்த்தி. 'ராமச்சந்திரன்' என்றாள் தங்கம். சுந்தரமூர்த்தி சிறிது நேரம் ஏதோ யோசித்து விட்டு, "பெரம்பூரிலிருந்து வந்து கொண்டிருந்தாரே அவரா?" என்று கேட்டார்.

"ஆமாம் சார். நாங்கள் சிறிது காலம் பெரம்பூரில் தான் இருந்தோம். சைக்கிளில்தான் என் தந்தை தினமும் மவுண்ட் ரோடுக்கு வருவார்" என்றாள். சுந்தரமூர்த்தி எதையோ கண்டுபிடித்து விட்டவர்போல், "ராமச்சந்திரனின் மகளா நீ. ராமச்சந்திரன் என்னுடைய பள்ளித் தோழன். பள்ளிக்கூடத்திலேயே அவன் அந்தக் காலத்தில் கெட்டிக்காரன். ஐயோ பாவம். நீ வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை வந்து விட்டதா?" என்று சுந்தரமூர்த்தி கேட்டார்.

தங்கம் பதில் சொல்லவில்லை. ஆனால், மெல்லக் கதவைத் திறந்து கொண்டு டைப் செய்வதற்காக விரைந்தாள்.

கடிதங்களைக் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே டைப் அடித்து விட்டு அதை உள்ளே தானே எடுத்துச் செல்வதா? அல்லது அட்டெண்டர் மூலமாக அனுப்புவதா என்பது தெரியாமல் உதவி மானேஜர் அறைக்குள் நுழைந்தாள். "அட்டெண்டர் எடுத்துக் கொண்டு செல்வான், நீ போக வேண்டாம்" என்று உதவி மானேஜர் சொல்லிவிட்டார். பிறகு "பயமில்லாமல் நீ அடித்தாயோ இல்லையோ, தவறு இருக்காதே?" என்று கூறிக்கொண்டே கடிதங்களைப் புரட்டலானார்.

"நீங்கள் ஒருமுறை பார்த்துவிடுங்கள் சார்" என்றாள் தங்கம். ஏதோ சற்று சுவாதீனம் உள்ளவள் போல். அதற்குள் சுந்தரமூர்த்தி அந்த அறைக்குள் நுழைந்துவிட்டார். "எனக்கு அவசரமாக ஒரு டெலிபோன் கால் வந்து விட்டது. நான் போகிறேன். கடிதங்கள் டைப்பாகிவிட்டனவா? வெரி ஸ்மார்ட். கேர்ள். இவள் யார் தெரியுமா, மிஸ்டர் ராமமூர்த்தி பெரிய பத்திரிகையாளர் ராமசந்திரனின் பெண். இவளுக்கு நல்ல முன்னேற்றம் இந்த ஆபீசில் கொடு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். தங்கத்திற்கு ஒரு கணம் தலை சுற்றியது. முதல் நாளே தனக்கு இவ்வளவு பெரிய வரவேற்பு இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

அன்றைய தினம் அவள் வீட்டிற்குச் சென்றவுடன் தாயாரிடம் ஆபீசில நடந்தவற்றை ஒன்று விடாமல் கூறினாள். சுந்தரமூர்த்தியின் பெயரைச் சொன்னவுடன் மரகதத்தின் முகம் கறுத்தது. "எந்த சுந்தரமூர்த்தியைச் சொல்கிறாய் தங்கம். சற்றுப் பருமனாக, செக்கச்



செவேலென்று அடர்ந்த புருவங்களுடன் இருப்பாரே! அவரா?" என்று கேட்டாள் மரகதம்.

"ஆமாம் அம்மா. அப்பாவை அவருக்கு நன்றாகத் தெரியுமாம்" என்று தங்கம் பெருமையாகச் சொல்லிக் கொண்டாள். "உதவி மானேஜரிடம் சொல்லி என் முன்னேற்றத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு அவர் கூறினார்" என்றாள். மரகதம் ஏனோ பதற்றத்துடன் அவளை நோக்கி, "உன் முன்னேற்றத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு வேறு அவர் சொல்லிவிட்டரா? நம் குடும்பத்திற்கு ஓர் அழிவை உண்டுபண்ணுவதற்குக் காரணமாய் இருந்தவரே அவர்தான்" என்றாள் மரகதம். தங்கம் ஒரு மாதிரியாக, தாயை நோக்கினாள். "என்னம்மா உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? நம் குடும்பம் எங்கே, அந்தப் பெரிய கம்பெனி எங்கே? அவர் ஏன் நம் அப்பாவுக்குத் தொல்லை கொடுத்திருக்கப் போகிறார்? நீ யாரையோ எண்ணி இப்படிச் சொல்லாதே" என்றாள். மரகதம் சொன்னாள். உன்னிடம் நான் அதெல்லாம் சொல்லக் கூடாததான். புதிதாக நீ வேலைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறாய். பெரிய கம்பெனி அது. எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால், நாம் இப்பொழுதிருக்கும் நிலையை எண்ணி நாம் இருக்கும் இந்தக் கோலத்தில் சுந்தரமூர்த்தியைப் பற்றிச் சொன்னால் நீ நம்பமாட்டாய். யாரும் நம்ப மாட்டார்கள். பெரம்பூரில் நானும் உன் அப்பாவும் குடித்தனத்தை ஆரம்பித்தோம். அப்பொழுது சுந்தரமூர்த்தி எதிர்வீட்டில் குடியிருந்தார். சைக்கிளில் தான் மவுண்ட்ரோடிலுள்ள கம்பெனிக்கு வேலைக்குச் செல்வார். அவருக்கும் கல்யாணமாகி இருந்தது. அதற்குள், நான்கு, ஐந்து குழந்தைகள் அவருக்கு இருந்தன. அவருக்குச் சொற்ப வருமானம். காலையில் உன் அப்பாவும் அவரும் ஒன்றாகத்தான் சைக்கிளில்

செல்வார்கள். பெரம்பூரிலிருந்து மவுண்ட் ரோடுக்
இப்பொழுதெல்லாம் மிகவும் சர்வ சாதாரணமாக
பஸ்ஸில் போய் விடுகிறார்கள். அந்தக் காலத்தி
அவ்வளவு தூரம் போய் வருவது என்றா
கஷ்டமாகத்தான் இருக்கும். உன் அப்பா அப்பொழு
ஒரு செய்தி நிருபராகப் பதவி வகித்தார். ஒரு சமய
தன் பத்திரிகையில் உன் அப்பா கொடுத்த செய்தின
வெளியிட்டவுடன் மறுநாள் சென்னை நகரிலே பெரு
பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது யுத்த சமய
இருட்டிப்பு வேறு. சுந்தரமூர்த்திவேலை பார்த்து வந்
கம்பெனியில சில மருந்துகளை மிக அதிக விலைக்
விற்றுக் கொண்டு வந்தார்கள். அவை கிடைக்கா
அபூர்வ மருந்துகள். சுந்தரமூர்த்தி பேச்சு வாக்கி
அதைப் பற்றி உன் தந்தையிடம் தெரியப்படுத்
"இப்படிப்பட்டவர்களைப் பற்றியெல்லா
பத்திரிகையில் எழுதினால்தான் நல்லது" என்று தூப
போட்டார். உன் அப்பா எப்பொழுதும் நேரா
வழியில்தான் செல்பவர். சுந்தரமூர்த்தி சொன்னவுட
அந்தக் கம்பெனிக்குச் சென்று அந்தக் குறிப்பிட்
மருந்து இருக்கிறதா என்று கேட்டார். இல்லையென்
அவர்கள் சொல்லிவிட்டார்கள். வெளியே வந்து நின்
கொண்டிருந்தார். சற்று நேரத்தில் மற்றொருவர் அந்
மருந்தை வாங்கிக்கொண்டு போவது தெரிந்த
அன்றைய தினமே பத்திரிகையில் அதைப் பற்றி
செய்தி ஒன்றை வெளியிட்டார். உயிரோடு போராடு
நோயாளிக்கு மருந்து இல்லை என்று சொல்லிவிட்
மருந்தை வைத்தகொண்டு அதிக விலைக்கு விற்பவர்க
மாபாதகம் செய்தவர்கள் ஆவார்கள் என்ற பொரு
படும்படியாக எழுதிவிட்டார். அந்தக் கம்பெனியா
மறுநாளே அந்தப் பத்திரிகை மீது வழக்குத் தொடர்
விட்டார்கள். அந்த வழக்கு சென்னை நகரிலே



பெருத்த பரபரப்பை ஏற்படுத்தியது. உன் தந்தையின்
பெயர் பிரபலமாகியது. வழக்கில் குறுக்கு
விசாரணையின்போது உன் தந்தை சுந்தரமூர்த்தியைச்
சாட்சியமாக அழைக்கும்படியான நிலை ஏற்பட்டது.
ஆனால், சுந்தரமூர்த்தி சாட்சிக் கூண்டில் உன்
தந்தையைத் தெரியவே தெரியாது என்றும், தான் அது
போல் அந்தக் கம்பெனியில் அதிக விலைக்கு மருந்து
விற்கிறார்கள் என்று சொல்லவேயில்லை என்றும்
கூறிவிட்டார். அந்தச் சாட்சியின் விளைவாக கேஸின்
போக்கே மாறிவிட்டது. அந்தக் கம்பெனி
பத்திரிகையாளர் மீது மானநஷ்ட வழக்குப் போட்டு
பல ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி செய்துவிட்டது.
அதில் மனம் உடைந்ததோடு அல்லாமல், அவருடைய
வேலையும் போய்விட்டது. பிறகு ஏதோ கேஸ் போட்டு
பத்திரிகை ஆபீஸிலிருந்து நஷ்ட ஈடு வாங்கினார்
என்று வைத்துக்கொள். ஆனால, சுந்தரமூர்த்திதயின்
தொடர்புதான் உன் தந்தையின் வேலைக்கு வீழ்ச்சியாக
இருந்தது. பிறகுதான் உடல் நோய் வந்தது. நோய்வாய்ப்
பட்டார். கடைசியில் காலன் அவரை அழைத்துக்
கொண்டார். இப்பொழுது தெரிந்ததா. அந்தச்
சுந்தரமூர்த்திதான் இப்பொழுது படிப்படியாக
முன்னேறிப் பெரிய மனிதராகிவிட்டார். இப்பொழுது
உன் முன்னேற்றத்தில் தான் கண்ணும் கருத்துமாக
இருப்பதாக அவர் நடிக்கிறார் போல் இருக்கிறது.
தங்கம் எனக்கு முன்பே தெரிந்திருந்தால் அந்தக்
கம்பெனியே வேண்டாம் என்றுதான் சொல்லி
இருப்பேன்" என்றாள்.

தங்கத்திற்குக் காலையில் இருந்த உற்சாகமும்
பிறகு காரியாலயத்திலிருந்து திரும்பி வரும்பொழுதிருந்த
சந்தோஷமும் இப்பொழுதில்லை. அவள் வேதனையுடன்
படுக்கச் சென்றாள்.

மறுநாள் காலையில் அவள் வழக்கம்போல் எழுந்து டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்குச் சென்று விட்டுத் திரும்பி வரும்பொழுது அவள் வீட்டு வாசலில் அது வரை நின்றிருந்த பெரிய கார் ஒன்று கிளம்பி வேகமாகச் செல்வதைக் கண்டாள். குடித்தனக்காரர் வீட்டிற்கு யாராவது வந்திருப்பார்கள் என்று முதலில் நினைத்தவள் அந்தக் கார் திரும்பும்பொழுது காரிலே தன் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

கார் போன பிறகுதான் தன் மகள் வருகிறாள் என்று நினைக்கும்பொழுது மரகதத்திற்குச் சற்று ஆறுதலாகத் தான் இருந்தது. கார் வந்ததைப் பற்றியும் போனதைப் பற்றியும் சொல்லாமலே இருந்து விடலாம் என்று நினைத்தாள். ஆனால், தங்கம் "என் ஆபீசிலிருந்து தானே அம்மா கார் வந்தது என்று" கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள். மரகதத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. சுந்தரமூர்த்தி அங்கு வந்ததையும், தங்கத்தின் விடு இதுதானே என்று கேட்டுக்கொண்டே டிரைவர் வந்ததையும் பிறகு அவரே இறங்கி உள்ளே வந்ததையும் தான் அவரை அடையாளம் கண்டு கொள்ளாதவள் போலவே நடித்து 'தங்கம் வெளியே போய் இருக்கிறாள்' என்று ஒரே வார்த்தையில் கதவின் மறைவிலிருந்து கூறியதையும் தன் மகளிடம் கூறலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது குடித்தனக்கார வீட்டு மாமி உள்ளே வந்து, மரகதம் "யார் தேடிக்கொண்டு வந்தார்கள்?" என்று கேட்டாள். மரகதம் சட்டென்று "என்னை யாரோ தேடிக்கொண்டு இங்கே தவறுதலாக வந்து விட்டார்கள்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டாள். தாயார் ஏன் இப்படிப் பொய் சொல்கிறாள் என்று தங்கத்திற்கு வியப்பாய்



இருந்தது. அந்த வியப்பைத தொடர்ந்து மரகதம் தன் மகளை உள்ளே அழைத்துக்கொண்டு கூறிய வார்த்தையைக் கேட்டுத் தங்கம் திடுக்கிட்டாள்.

## 7

பாச்சா ஊரிலிருந்து திரும்பி வந்துவிட்டார். வரும்பொழுதே குதூகலத்துடன் வந்தார். இரண்டு பளுவான பைகளைக் கொண்டு வந்தார். பையை வாசற்படிக்கு அருகே வைத்து எல்லோர் காதிலேயும் விழவேண்டுமென்பதற்காகவே, "பகவான் இன்னும் இரண்டு கைகளைக் கொடுத்திருந்தால் இன்னும் நான்கு பைகளைக் கொண்டு, வந்திருப்பேன். அப்பாடா! என்ன கூட்டம் என்ன கூட்டம்? அத்தனை பேரும் முண்டியடித்துக் கொண்டு ரயிலில் எங்குத்தான் போகிறார்களோ, வருகிறார்களோ" என்று சொல்லிக்கொண்டே, கனகம் என்று குரல் கொடுத்தார். கனகவல்லி உள்ளே குளித்துக் கொண்டிருந்தாள். ருக்மணிதான் அன்று சமையல் செய்து கொண்டிருந்தாள். தகப்பனார் வந்து விட்டதை அறிந்தவுடன் அவள் வேகமாக வெளியே வந்தாள். தகப்பனார் முகமலர்ச்சியுடன் இருப்பதைக் கண்டவுடன் ஏதோ நல்ல செய்திதான் என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது. பாட்டியும் எதிர்வீட்டிலிருந்தவள் தன் மகன் வந்துவிட்டதைக் கண்டு வேகமாக வந்தாள்.

"இப்பத்தான் வரீயாடா" என்று ஆசை பொங்கக் கேட்டாள்.

"ஆமாம்மா. வண்டி இன்று 150 நிமிஷம் லேட். 'எந்தக் காலத்தில்தான் வண்டி சரியாக வந்திருக்கிறது' என்று கேட்கிறாயா? உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு தரம் நீ கிராமத்திலிருந்து இங்கு வந்துச் சேருவதற்கு

மூன்று நாள் பிடித்ததே" என்று கூறி, பாச்சா சிரித்தார். ருக்மணி ஒவ்வொரு பையாகத் தூக்கிக்கொண்டு உள்ளே வைத்தாள். ஒரு பையில் வாழைக்காய், கொஞ்சம் பிரண்டை, கருவேப்பிலை, வெண்டைக்காய் இவை எல்லாம் இருந்தன.

"என்னடா இது? பிரண்டையைக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறாயே?" என்று கேட்டாள் பாச்சாவின் தாய். "ஏம்மா; போன வருஷம் ஒரு சாண் பிரண்டைக்கு நீ எங்கெல்லாம் அலைந்தாய்? அப்பளம் இடவேண்டும். பிரண்டை வேண்டுமென்று கேட்டாயே! கடைசியில் ஒரு ரூபாய் கொடுத்து வாங்கி வந்தது மறந்து விட்டதா?" என்றார் பாச்சா. தன் பிள்ளையின் சாமர்த்தியத்தை மெச்சி வாழ்த்துவதா அல்லது, கடிந்து கொள்வதா என்று தாய்க்குப் பிடிபடவில்லை.

இன்னொரு பையில் வேர்க்கடலை கொஞ்சம், தேங்காய் இரண்டு, ஒரு சிறு பூசணிக்கொட்டை, இவையெல்லாம் இருந்தன. "போன காரியம் என்னடா ஆச்சு? பாச்சா, காயா பழமா?" என்று கேட்டாள் பாச்சாவின் தாய்.

"பாச்சா எடுத்த காரியம் எதுவும் காயாகாது?" என்று சொல்லிவிட்டு சொக்காயைக் கழற்றிக் கொண்டே, "எனக்குச் சூடாக ஒரு கப் காபி கொடு. நான் நடந்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் சொல்கிறேன்" என்று சுவரில் சாய்ந்து கொண்டே காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டார் பாச்சா. "இதோ ஒரு நொடியில் கொண்டு வருகிறேன்" என்று ருக்மணி சமையல் உள்ளுக்குள் சென்றாள். பாச்சா வெற்றிலையைப் போட்டுக்கொண்டே தன் பிரதாபத்தை ஆரம்பித்தார்.

"இங்கிருந்து நேரே புறப்பட்டுப் போனேனா ஸ்டேஷனுக்கே ஜமீன்தார் இரட்டை மாட்டு



வண்டியை அனுப்பியிருந்தார். மாடா அது. பஞ்சகல்யாணி குதிரைதான் போ! மாடு ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாய் பெறும். உள்ளுக்குள்ளே தைத்துப் போட்டிருக்கும் மெத்தை இருக்கே - அதிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கலாமா என்று சொல்லத் தோன்றும். ஜமீன்தார் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். பத்தாயிரம் ரூபாயையும் எண்ணி முதலிலே அவரிடம் கொடுத்து விட்டுத்தான் மறு பேச்சு பேச ஆரம்பித்தேன். "என்னடா பாச்சா பணத்திற்கு அவசரம்? ரொம்பவும் அவஸ்தைப்பட்டு விட்டாயே? என்று கேட்டார் ஜமீன்தார். "உங்கள் பெயரைச் சொன்னவுடனேயே பட்டணத்தில் நான் முந்தி, நீ முந்தி என்று பணம் கொடுக்கும்பொழுது அதைக்கொண்டு வருவதற்கு எனக்குக் கசக்கிறதா?" என்று நான் சொன்னேன். என்னை அவர் கட்டி அணைத்துக் கொள்ளாத தோஷம்தான். ராஜோபசாரம் நடந்தது; அவருடைய சகதர்மிணியைக் கூப்பிட்டு எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். உனக்குத் தெரியாதா அம்மா, ஜமீன்தார் சம்சாரம்தான் வெளியிலே யாருடனும் கலகலப்பாகவே பேச மாட்டாள் என்பது. அந்த அம்மாள் அன்று எனக்கு ஒரு பெரும் விருந்தே வைத்துவிட்டாள். இரவு சாப்பாடு தடபுடல். அதுதான் சரியான சந்தர்ப்பம் என்று நான் ருக்மணியினுடைய அழகைப் பற்றியும், அவளுடைய மேதா விலாசத்தைப் பற்றியும் பிரமாதமாகப் பேசினேன். சாப்பாடு முடிந்தது. ஆனால், அன்று இரவு வண்டிக்குப் புறப்படப்போகிறேன் என்று ஜமீன்தாரிடம் விடை பெற்றுக்கொள்ள எழுந்தேன். ஜமீன்தார் ஒரு நிமிஷம் என்னை இருக்கச் சொன்னார். உள்ளே சென்றார். ஒரு வெள்ளித் தட்டில் ஆயிரம் ரூபாய்ப் பணத்தை வெற்றிலைப் பாக்குடன் கொண்டு வந்து என் எதிரே எடுத்து வைத்து, "எடுத்துக் கொள்ளுங்கள் பார்த்தசாரதி

ஐயங்காரே" என்றார். சாதாரணமாக எந்த ஒரு தரகருக்கும் கொடுக்க வேண்டிய ரூபாய்க்கு இரட்டிப்பான தொகைதான் அது. இருந்தாலும் நான் அந்த ரூபாயை அவரிடமே கொடுத்துவிட்டு "ஸ்வாமி என்னை மன்னிக்க வேண்டும். இதெல்லாம் எனக்கு எதற்கு?" என்று சொன்னேன். அவர் என்னை ஏற இறங்க ஒரு தரம் பார்த்தார். "ஏன் இந்த ரூபாய் குறைவு என்று நினைக்கிறீர்களா? இன்னும் எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் கேளுங்கள். தருகிறேன்" என்றார்.

நான் மிகவும் பயபக்தியுடன், "ஜமீன்தார்வாள், அப்படியெல்லாம் நீங்கள் நினைக்க வேண்டியதில்லை. நீங்கள் ஒரே ஒரு ரூபாய் கொடுத்தாலும் லட்சம் ரூபாயாக நினைத்துச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவன். ஆனால், நான் தங்களிடம் ரூபாயை எதிர்பார்த்து இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. எனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் என் பெண்ணுக்கு நல்ல ஓர் இடமாகப் பார்த்துக் கல்யாணத்தை முடித்து வையுங்கள்" என்றேன். தெய்வ சங்கல்பம் பாருங்கோ அம்மா. அந்தச் சமயம் பார்த்து அந்த ஊர் ஹெட்மாஸ்டர் அங்கே ஜமீன்தாரைப் பார்ப்பதற்காக வந்தார். அந்த ஹெட்மாஸ்டருக்குக் கல்யாண வயதில் ஒரு பையன் இருப்பது ஜமீன்தாருக்குத் தெரியும் போல் இருக்கிறது.

ஹெட்மாஸ்டர் வந்த உடனேயே ஜமீன்தார், "வாங்கோ ரங்கசாமி! நல்ல சமயத்திற்கு வந்தீர்கள். கிளி போன்ற ஒரு பெண். நல்ல குணவதி. உயர்ந்த குடும்பம்; தகப்பனாரோ பரம தயாளன். உமது பையனை உடனே அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் செய்தாக வேண்டும். கல்யாணச் செலவு பூராவும் என்னுடையது, என்ன சொல்கிறீர்கள்?" என்றார்.



தலைமை ஆசிரியர் 'திருதிரு' என்று விழித்தார். நான் என்ன சொல்கிறேன் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? என்றார் ஜமீன்தார். தலைமை ஆசிரியராயிற்றே! அவ்வளவு எளிதில் பிடி கொடுத்து விடுவாரா? பொடி வைத்துப் பேசும் வழக்கம் மறைந்து விடுமா? மிகவும் பயந்தவர் மரியாதை கொடுப்பவர் போலவும் நடித்து, "தாங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாமல் போகவில்லை. என் மகனுக்கு நல்ல இடத்தில் வரன் தேடி இருக்கிறீர்கள். நாங்கள் நினைப்பது நடக்காததா? தங்களுக்குச் சம்மதம் இல்லையென்றால் சொல்வீர்களா?" என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

ஜமீன்தார் என் பக்கம் திரும்பி, "பார்த்தசாரதி, இந்த ஊர் போர்டு பள்ளித் தலைமை ஆசிரியர் இவர். மகாமேதை. அவருடைய தகப்பனார் பல யாகங்கள் செய்தவர். அவருடைய மாமனார் உபன்யாசங்கள் செய்வதில் பிரசித்திப் பெற்றவர். நீர் கேள்விப்பட்ட இல்லையா? வேதாந்த கேசரி வெங்கடவரத ஐயங்கார் என்பவரைப் பற்றி. அவருடைய சாட்சாத் மாப்பிள்ளை இவர். இவருடைய பிள்ளை பிரகலாதன். என்ன படித்துக் கொண்டிருக்கிறான் உம்பிள்ளை? ரங்கசாமி?" என்றார் அவரைப் பார்த்து. அவர் சொல்லைக் கேட்டு, "ஓஹோ இந்த வருஷம் பி.ஏ. போகிறானா? ரொம்பச் சரி, பாச்சா. அவனுடைய படிப்பை முடித்து வைக்க வேண்டியது உமது கடமை. படித்த பிறகு வேலை வாங்கித் தருவதுதான் உமக்குத் தண்ணீர் பட்ட பாடாயிற்றே! இந்தக் கல்யாணத்தை நான் நடத்தி வைக்கிறேன்; என்ன சொல்கிறீர்கள் ரங்கசாமி ஐயங்கார்?" என்றார்.

ரங்கசாமி ஐயங்கார் தலையை அசைத்தார். "சரி இப்பொழுதே உமது மகனை இங்கே அழைத்து வாரும்.

நீர் நடந்து போக வேண்டாம். வண்டியிலேயே செல்லுங்கள்" என்று உத்திரவு போட்டார். அந்த ஜமீன்தாருக்கு என்ன செல்வாக்குத் தெரியுமா? வண்டி வந்து நின்றது. தலைமை ஆசிரியர் வண்டியில் ஏறினார். திரும்பி வரும்பொழுது தலைமை ஆசிரியரும் மாப்பிள்ளைப் பையன் பிரகலாதனும் வந்து சேர்ந்தனர். ஜமீன்தார் கண் சாடை காட்டினார். உடனே ஒரு வெள்ளித் தட்டிலே வெற்றிலை பாக்கு பழம் இவையெல்லாம் வந்துவிட்டன. எனக்குக் கொடுத்த அந்த ஆயிரம் ரூபாயையும் அந்தத் தட்டிலே வைத்து, "ரங்கசாமி ஐயங்கார் இன்று வெள்ளிக்கிழமை நல்ல நாள். பிடியுங்கள், பெண்ணைப் பார்க்கவில்லை என்று நினைக்கிறானா பையன்? பெண் ரதி என்றால் ரதி தான். ரதி கூடத் தோற்றுவிடுவாள். பார்த்தசாரதி ஐயங்கார் ஊருக்குப் போனவுடன் முகூர்த்தத்திற்குத் தேதி குறித்து விடுவார். நாம் எல்லாரும் போய் கல்யாணத்தை நடத்தி முடித்துவிட வேண்டும். ரங்கசாமி ஐயங்கார் இப்பொழுதே நான் சொல்லி விட்டேன். நான் பெண் வீட்டுக்காரன்" என்று பெரும் உத்தரவைப் போட்டார். அம்மா இதுதான் பெருமாள் திருவிளையாடல் என்று சொல்வார்கள். வேறு என்ன சொல்ல முடியும்" என்று கூறி நிறுத்தியதுடன் திறந்த வாயை மூடாமல் பாச்சாவின் தாயார் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

இப்படியும் ஒரு அதிசயம் நடக்குமா என்று நினைத்தவாறு குளித்துவிட்டு வெறும் புடைவையை மேலே சுற்றிக் கொண்டு பிரமிப்புடன் கனகவல்லி நின்று கொண்டிருந்தாள். கொதித்து கொதித்து அடுப்பின் மேலேயே விழும் ரசத்தைக் கூட அடுப்பிலிருந்து இறக்காமல் தந்தை சொல்லும் அற்புத நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டே நின்றிருந்தாள் ருக்மணி. 'என்னம்மா அப்படிப் பார்க்கிறாய்? நிச்சயம்



தான். அதிசயம்; ஆனால உண்மை. உன்னுடைய பேத்திக்கு மிகவும் உயர்தரமான வரன். வெறும் ஆயிரம் ரூபாய் வரதட்சணையில் ஒரு பி.ஏ. படிக்கும் பையன் கண்ணுக்கு மன்மதனைப்போல் லட்சணமாய் இருக்கும் ஒரு பையன் கிடைக்கிறான் என்பது அவ்வளவு லேசு என்று நினைத்துவிட்டாய். இனிமேல் நாம் முகூர்த்தத் தேதி தான் பார்க்க வேணடும். கல்யாண சத்திரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நகைகளை வாங்கவேண்டும். சாமான்களையெல்லாம் சேகரிக்க வேண்டும். முதலில் நான் கல்யாண சத்திரம் கிடைக்கிறதா என்று பார்த்து விட்டு வருகிறேன். நீ அதற்குள் குளத்தங்கரை ஜோதிடரிடம் போய் முகூர்த்தத்திற்கு நல்ல நாளாக இரண்டு மூன்று நாட்கள் பார்த்துவிட்டு வா' என்று கூறிவிட்டு எதிரே வைக்கப்பட்டிருந்த ஆவி பொங்கும் காபியை எடுத்து ஒரே மடக்காகக் குடித்துவிட்டு தன்னுடைய சைக்கிளில் ஏறி புறப்பட்டுவிட்டார் பாச்சா.

கனகவல்லியின் இதயம் படபட என்று அடித்துக் கொண்டுவிட்டது. தன்னுடைய கணவர் பொறுப் பில்லாமல் செய்யும் குணம் உடையவர் என்று பெயரெடுத்தவர். இப்படி ஒரு நல்ல வரனாகப் பார்த்து நிச்சயப்படுத்திவிட்டார் என்ற செய்தி அவளுக்குப் பெரும் திகைப்பைத் தான் தந்தது. பெருமாளே நல்லபடியாக என் மகள் திருமணம் நடந்து முடிந்தால் உனக்கு திருப்பதியில் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று கனகவல்லி வேண்டிக் கொண்டாள்.

கனகவல்லியின் மாமியார் வியப்புடன் "என்னடியம்மா கையிலே காலணா காசில்லை. சத்திரத்திற்கு அட்வான்ஸ் கொடுக்க வேண்டுமென்றால் ஒரு நூறு ரூபாயாவது வேண்டாமா? நீ போய் எதிர்த்த வீட்டு மாமாவைத் தான் கேளேன்" என்றாள்.

கனகவல்லி சரியாகத் தான் புடைவையை அணிந்து கொள்ளாததைக் கூட கவனிக்காமல் வேகமாக எதிர் வீட்டுச் சமையல்காரரிடம் சென்று தன் கணவர் கூறிய கல்யாணச் செய்தியைத் தெரிவித்து, ஒரு நூறு ரூபாய் பணம் வேண்டுமென்று கேட்டாள். சாரங்கபாணிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை; அன்று மாலைக்குள் அவர் 500 ரூபாயைத் தயார் செய்து பாங்கியில் கொண்டு கட்டினால் அவர் மகனுக்கு நல்லதொரு வேலை கிடைக்கும். அன்று கட்டவில்லை யென்றால் அந்த வேலை கிடைக்காது. மிகவும் தழுதழுத்த குரலில், "கனகவல்லி அம்மா, இன்று சாயங் காலத்திறகுள் எனக்கு 500 ரூபாய் வேண்டும். 200 ரூபாய் தயார் பண்ணிவிட்டேன். மீதி 300 ரூபாய்க்கு என்ன செய்யப் போகிறேன் என்றே தெரியவில்லை. 200 ரூபாய் தேடுவதற்குப் பதிலாக 300 ஆகத் தேடி உங்களுக்கும் நூறு ரூபாய் கொண்டு வந்து கொடுக்கிறேன். ருக்மணியின் கல்யாணம் என்றால் எனக்குப் பரம சந்தோஷம். நீங்கள் கல்யாணத்தில் சாப்பாட்டு விஷயத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அந்தப் பொறுப்பு பூராவும் நான் ஏற்றுக் கொள்கிறேன். எங்கள் அகத்துக்காரர் அலட்சியமாக ஏதாவது சொல்வார். அதைப்பற்றி யெல்லாம் நாங்கள் மனத்தில் வைத்துக் கொள்ள மாட்டோம். உங்களுடைய குணம் உங்களுடைய பெண்ணின் குணம் எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் நிம்மதியாகப் போய் மற்ற வேலைகளைக் கவனியுங்கள். நான் சாயங்காலம் மூன்று மணிக்குள் உங்களை வந்து பார்க்கிறேன்" என்றார்.

சாரங்கபாணி சொன்னதில் கனகவல்லிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. என்றாலும், இந்த நூறு ரூபய்க்கே இவ்வளவு சிரமமாக இருக்கும் போது



இன்னும் கல்யாண செலவுக்கு என்ன செய்யப் போகிறோம் என்ற கவலை அவள் அடிவயிற்றைக் கலக்கியது. நல்ல வெய்யிலில் அந்தக் கிழவர் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகள் அவள் காதில் இன்னும் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

## 8

பகல் மூன்று மணிக்குச் சமையல்காரர் சாரங்கபாணி கதவைத் திறந்து கொண்டு, "ருக்மணி" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார். அரிசியில் கல்லைப் பொறுக்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்த கனகவல்லி, திடுக்கிட்டு எழுந்தாள். என்றுமே அந்த வீட்டுப்படி ஏறிவராத எதிர் வீட்டுக்காரர் அப்படி வந்தது அவளுக்கு வியப்பை அளித்தது. அவர் கையிலே நூறு ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது. 'கனகம்மா நான் சொன்னபடி இதோ ரூபாய் கொண்டு வந்து விட்டேன். நீங்கள் சத்திரத்திற்கு அட்வான்ஸ் கொடுக்க இதை வைத்துக் கொள்ளுங்கள். பெருமாள் புண்ணியத்தில் நான் என் பிள்ளைக்காக பாங்கில் டெபாசிட் தொகையும் கட்டிவிட்டேன். நாளையிலிருந்து அவன் வேலைக்குப் போக ஆரம்பித்து விடுவான். ஏதோ நல்ல வேளையாக இந்தக் காலனியில் இருப்பவர்களுக்கு அதிலும் எதிரும் புதிருமாக உள்ள வீட்டில் இருக்கும் நமக்கு நல்லதுதான் நடக்கிறது' நான் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. நான் வரட்டுமா" என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் கூட எதிர்பார்க்காமல் வேகமாக விரைந்தார். அவர் படியிறங்கிப் போவதற்கும் பாச்சா சைக்கிளில் வருவதற்கும் சரியாக இருந்தது. அவர் சமையல்காரரைப் பார்த்தும் பார்க்காதவராக அலட்சியாக உள்ளே நுழைந்தார். கனகவல்லியின் கையில் நூறு ரூபாய் நோட்டு

இருந்தது. பாச்சாவோ எங்கு சுற்றியும் காலணா கையில் கிடைக்காமல் மிகவும் சோர்ந்து போய் இருந்தார். தன்னுடைய தோல்வியைத் தன் மனைவியின் எதிரே தெரிவித்துக் கொள்ளாமல் மிகவும் சாமர்த்தியமாக ஒரு நோட்டம் விட்டார்.

தன் கணவருடைய பார்வையிலிருந்தே அவர் என்ன கேட்கப் போகிறார் என்பதைப் புரிந்து கொண்ட கனகவல்லி, "நீங்கள் காலையில் சாப்பிட்டீர் களோ இல்லையோ, இன்னும் சாதம் ஆறாமல் உங்களுக்காக இருக்கிறது. இலையைப் போடுகிறேன் உட்காருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"வேண்டாம் வேண்டாம் நான் நண்பன் ஒருவன் வீட்டில் சாப்பிட்டு விட்டேன். ருக்மணியின் கல்யாணத்தைப் பற்றிச் சொன்னவுடனேயே அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தன் வீட்டில்தான் சாப்பிட வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான். அவனும் நானுமாகச் சேர்ந்து கல்யாண சத்திரத்தை ஏற்பாடு செய்வதற்காக வெளியே கிளம்பினோம்" என்றார்.

"சத்திரம் ஏற்பாடு செய்து விட்டீர்களா?" என்று கனகவல்லி ஆவலுடன் கேட்டாள்.

"செய்யாமல் இருப்பேனா! பாச்சா எடுத்தால் எந்தக் காரியத்தையும் முடிக்காமல் வரமாட்டான்."

"அட்வான்ஸ் கொடுத்து விட்டீர்களோ? நான் எதற்கும் சமையல்காரர் மாமாவிடம் பணம் கேட்டிருந்தேன். அவர் கொடுத்து விட்டுப் போனார். இப்பொழுது நான் கொண்டுவந்து கொடுத்தார். அவர் பிள்ளைக்குப் பாங்கியில் உத்தியோகம் கிடைத்து விட்டதாம். எடுத்த எடுப்பிலேயே 500 சம்பளமாம் என்று கனகவல்லி பெருமையுடன் சொல்லிக் கொண்டது பாச்சாவுக்குப் பிடிக்கவில்லை.

அவர் சூள் கொட்டினான். ருக்மணியின் கணவனாக வரப் போகிறவனை ஆயிரம் ரூபாய்



வேலையில் நானே அமர்த்தப் போகிறேன். கல்யாணம் ஆனவுடன் நமது மாப்பிள்ளை ஆயிரம் ரூபாய் சம்பளக்காரன் தெரியுமா? பெரிய ஐந்நூறு ரூபாய் சம்பளத்தைப் பிரமாதமாகச் சொல்கிறாயே என்று கூறிவிட்டு, "போயும் போயும் முதன் முதலில் அந்த அழுக்கிடம் போய் நூறு ரூபாய் ஏன் வாங்கினாய்? நீ காலையில் கேட்டாயே இப்பொழுதுதானே அவர் கொண்டு வந்து கொடுத்தார். வரனைப் பற்றி அதற்குள் அவரிடம் சொல்லிவிட்டாயா? வயிற்றெறிந்து சாவானே" என்று வெறுப்பும் அலட்சியமும் மேற்பட பாச்சா பேசினார்.

கனகவல்லிக்கு முகம் சுண்டிப் போய்விட்டது. வயிற்றெரிச்சலுடன் பேசுவது யார் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. தன் கணவர் பேசுவது எதிர்த்த வீட்டிலிருக்கும் சமையல்காரர் காதில் விழாமலா இருக்கும்? அவர் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறாரே என்று பெரும் கவலை அவளைச் சூழ்ந்து கொண்டது. தன் கணவர் குணம் அவளுக்குத் தெரியும். இருந்தாலும் இப்படி அலட்சியப்படுத்தித் தூக்கியெறிந்து பேசுவது அவளுக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை.

"சத்திரத்திற்கு அட்வான்ஸ் கொடுத்தீர்களா? என்று நான் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லவில்லை. வேறு என்னென்னமோ பேசிக்கொண்டு இருக்கிறீர் களே. பணம் கிடைத்ததா? பாலுக்கு முன் பணம் கொடுத்து விட்டீர்களா? சாமான் வாங்க வேண்டாமா. இதற்கெல்லாம் பணத்திறகு என்ன செய்திருக்கிறீர்கள், நான் இதையெல்லாம் கேட்டு விடுவேனா என்பதற்காக வேறு யாரையாவது தூஷணையாகப் பேசுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்று கனகம் சற்றுக் கோபமாகப் பேசினாள். அவளுக்கு உண்மையிலேயே அத்தகைய ஆத்திரம் வந்ததே கிடையாது. கனகத்தின்

கோபத்தைக் கண்டு பாச்சாவே சற்று உள்ளுக்குள்ளே நடு நடுங்கினான். காலணா பணம் இப்பொழுது பையில் இல்லை. இருந்தாலும் ஜம்பத்தை விட்டுக் கொடுக்கவும் முடியவில்லை. கனகவல்லியிடம் இருக்கும் நூறு ரூபாயை எப்படியாவது வாங்கி விட வேண்டும்.

"சத்திரத்திற்கு அட்வான்ஸ் காலையிலே கொடுத்து விட்டேன். நண்பன் என்றால் அவன்தான் நண்பன். சத்திரத்திற்கு அவனே தன்னிடமிருந்து கொடுத்து விட்டான். மேளகாரனுக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டேன். பாலுக்குச் சொல்லி விட்டேன். இப்பொழுதே போய் சமையற்காரர் கொடுத்த அந்த நூறு ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்துவிடு" என்றான் பாச்சா மறுபடியும். கனகவல்லியும் ஆத்திரத்துடனும் எரிச்சலுடனும் அங்கிருந்துப் புறப்படத் தயாரானாள். ஆனால், பாச்சா நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, "இன்று வெள்ளிக்கிழமை ஆயிற்றே. வீட்டுக்கு வந்த பணத்தைத் திருப்பித் தர வேண்டாம். இந்த நூறு ரூபாயை இப்படிக் கொடு. நான் ஜவுளிக் கடைக்குச் சென்று நூறு ரூபாயை அட்வான்ஸாகக் கொடுத்துப் புடவைகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்" என்றார் பாச்சா.

"வெள்ளிக்கிழமை புடவைகள் எடுப்பதற்கு நல்ல நாள். நானும் கூட வருகிறேனே" என்று கனகவல்லி சொன்னாள். பாச்சாவுக்கு தர்மசங்கடமாகப் போய் விட்டது. அவன் இந்த நூறு ரூபாயைக் கொண்டு சத்திரத்திற்கு அட்வான்ஸ் ஆகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான். அவளும் கூட வருவதாக இருந்தால் அந்த நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று அவனுக்குப் புரியவில்லை. அதனால் அவர் சற்று யோசனை செய்த வண்ணம் தன் மனைவியைத் திருப்திப் படுத்துவதற்காக, "சரி சரி நான் சைக்கிளில்



வருகிறேன். நீ உன் பெண்ணையும் அழைத்துக் கொண்டு அம்மாவையும் கூப்பிட்டுக் கொண்டு பஸ்ஸில் ஏறி வந்துவிடு. நீங்கள் லஸ் முனையில் நின்று கொண்டிருங்கள். நான் அங்கு, வந்து ஜவுளிக் கடைக்கு அழைத்துச் செல்கிறேன்" என்று கூறவிட்டு முகத்தில் குளுமையாகத் தண்ணீரை எடுத்துத் தெளித்துக் கொண்டான். அப்பொழுது அவனுக்குப் புதுத் தெம்பு வந்துவிட்டது. பையிலே நூறு ரூபாய் வேறு வந்து விட்டதே! அந்த நூறு ரூபாயை வைத்துக்கொண்டு நிச்சயம் அவன் அஷ்டாவதானம் செய்து விடுவான். நேரே சத்திரத்து மானேஜரிடம் சென்று சத்திரத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு அங்கிருந்து ஜவுளிக்கடைக்குச் சென்று ஜவுளிகளை வாங்க வேண்டும். இதற்கெல்லாம் கையில் இருப்பது நூறு ரூபாய்தான். அவன் வாக்கில் சாமர்த்தியம் இருக்கும் பொழுது கையில் பணம் இல்லாவிட்டால் என்ன பயம்?

சிறிது நேரத்தில் கனகவல்லியும், ருக்மணியும், பாச்சாவின் தாயாரும் ஜவுளிக்கடைக்குப் புறப்படத் தயாரானார்கள். புறப்படும் பொழுது பாச்சா ரொம்பவும் உற்சாகமான குரலில், "நீங்களே நல்ல புடவைகளைப் பார்த்து எடுத்து விடுங்கள். கடைக்கு வந்த பிறகு இதை எடு அதை எடு என்று சொல்லும்படியாக வைத்துக் கொள்ளாதீர்கள்" என்று கூறினான். பாச்சாவின் தாயாருக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. ஆனால் ருக்மணி மட்டும் உற்சாகம் இல்லாமல் இருந்தாள். பெற்றோர்கள் அழைக்கும் இடத்திற்குத் தட்டாமல் செல்ல வேண்டும் என்பதற்காக அவள் புறப்பட்டாள்.

பாச்சா நேரே சத்திரத்து மானேஜரிடம் சென்றான். நல்லவேளையாக அவன் கேட்ட தேதியில் வேறு முகூர்த்தமில்லை. சத்திரத்து மானேஜருக்குப்

பாச்சாவைத் தெரியும். ஆனால் பாச்சாவின் சிறப்புக் குணமெல்லாம் அவருக்குத் தெரியாது. மிகவும் வியாபகன் ஊரில் பிரபலமான ஒரு புள்ளி என்ற முறையில் சற்று மரியாதையும் அவர் வைத்திருந்தார். பாச்சாவைப் பார்த்த உடனேயே முகமலர்ச்சியுடன் அவர் வரவேற்றார்.

"மார்ச் 19ஆம் தேதி சத்திரம் காலியாக இருக்கிறதா" என்று மிகவும் அதிகாரமான குரலில் கேட்டார் பாச்சா. "ஆஹா! இருக்கிறதே" என்றார் மானேஜர்.

"சரி 18, 19, 20 மூன்று நாட்களுக்கும் என் பெயரில் உடனே சத்திரத்தை ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

மானேஜரும் பதிவுப் புத்தகத்தை எடுத்து, யார் பெயரில் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காக பாச்சாவின் முகத்தைப் பார்த்தவுடன், பாச்சா உற்சாகமான குரலில் "எனக்குத்தான் ஓய்! என் பெண்ணுக்குக் கல்யாணமாக்கும். மாப்பிள்ளை பெரிய இடத்தைச் சேர்ந்தவன். கொஞ்சம் சுண்ணாம்பெல்லாம் அடித்து நன்றாக வைத்துக கொள்ளக் கூடாது, இந்தச் சத்திரத்தை? ஏன் இப்படி அழுக்குப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்" என்றார்.

"சுண்ணாம்பெல்லாம் அடிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். உங்களைப் போன்றவர்கள் கல்யாணம் செய்வதற்கு வருகிறார்கள் என்றால் நாங்கள் அப்படியெல்லாம் வைத்திருப்போமா?" என்று மானேஜர் பாச்சாவுக்குக் கொஞ்சம் ஐஸ் வைத்தார். "மூன்று நாட்களுக்கும் எவ்வளவு கட்டணம் வாங்குகிறீர்கள் ஐயா" என்று கேட்டார் பாச்சா.

"முந்நூறு வாங்குகிறோம். உங்களுக்கு நான் சரிபாதிதான் வாங்குகிறேன்" என்றார் மானேஜர்.



"என்னிடம் நீங்கள் பணமே வாங்கக் கூடாது என்பேன்! அப்படி இனாமாகக் கொடுப்பதனால் நீங்களும் குறைந்து போய்விட மாட்டீர்கள். நிச்சயமாக உங்களுக்கும் இரட்டிப்பு லாபம் வரும்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் பாச்சா.

"வாங்கக் கூடாதுதான். ஆனால், இந்தப் பாத்திர வாடகை. வேலைக்காரர்கள், லைட் இவைகளுக்குக் கொடுத்தாக வேண்டியிருக்கிறதே. அதற்காகத்தான் சரிபாதி கேட்கிறோம் உங்களிடம்" என்றார்.

"அதனால் என்ன விளையாட்டுக்காகச் சொன்னேன். முந்நூறு, என்ன? ஐநூறு ரூபாய்கூட கொடுக்கலாம் உங்களுக்கு. கல்யாணம் மூன்று நாளும் நீங்கள் வேறு எங்கும் சாப்பிடக்கூடாது. இங்குதான் சாப்பிட வேண்டும்" என்று ரொம்பவும் அமர்த்தலாகப் பாச்சா கூறினார். பிறகு மானேஜர் காதில் மட்டு விழும்படியாக, "ஏன் ஐயா, நீர் எவ்வளவு வருடங்களாக இந்தச் சத்திரத்து மானேஜராய் இருக்கிறீர்? எவ்வளவு கலியாணங்களைப் பார்த்திருப்பீர்கள். உங்கள் பெண் கல்யாணத்திற்கு என்று இதுவரை ஏற்பாடு செய்திருக்கிறீரா? பணம்தான் சேர்த்து வைத்திருக்கிறீரா?" என்று கேட்டவுடன் மானேஜருக்குப் பாச்சாவிடம் ஒரு குடும்ப நண்பரிடம் பழகும் உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. தலையை அசைத்தார். "கவலைப்படாதீர்கள் நான் உமக்கு வேண்டியதைச் செய்கிறேன்" என்று கூறி மானேஜரைக் குஷிப்படுத்தினார். உடனே விருட்டென்று எழுந்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பாச்சா புறப்படும்பொழுது மானேஜர் கையைப் பிசைந்து கொண்டே, "அட்வான்ஸ் தொகை..." என்று சொல்ல முற்பட்டவுடன், "அட்வான்ஸ் எதற்கையா? நான் எங்கே போய்விடப் போகிறேன். எல்லாம் கல்யாணம் முடிந்தவுடன் அட்வான்ஸ் தொகையுடன் உங்களுக்கு பிரசென்டேஷன் எல்லாம் தருகிறேன். உமது மகள்

கல்யாணத்தை எப்போது வைத்துக் கொள்ளப் போகிறீர்? இப்பொழுது நான் ஜவுளிக் கடைக்குப் போகிறேன். ஆயிரம் ரூபாய் எடுத்து வந்திருக்கிறேன். இப்பொழுது அதில் நான் ரூபாயை எடுத்து பின்னப் படுத்தக்கூடாது" என்று சொல்லிக்கொண்டே பையிலே கையை விட்டு வெளியே எடுத்து தெரிந்தும் தெரியாததுமாகக் காட்டி விட்டு பையிலே போட்டுக் கொண்டார். மானேஜரும் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. "அதனால் என்ன சார். உங்கள் உத்தேசம் போல் செய்யுங்கள்" என்று பெரிய கும்பிடாக ஒன்று போட்டார்.

முதல் வெற்றி அந்த உற்சாகத்தில் சைக்கிளை வேகமாக மிதித்துக் கொண்டு லஸ் கார்னரை நோக்கிச் சென்றார். இடையிலே அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. நேரே மரகதம்மாள் வீட்டிற்குச் சென்று தன் பெண் கல்யாணத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று தோன்றியது. பாச்சா தங்கத்தின் வீட்டை நோக்கிச் சென்றார். மரகதத்தின் வீடு பூட்டியிருந்தது. மரகதம் எங்கே சென்றிருப்பாள் என்று யாரைக் கேட்பது என்று அவருக்குத் தெரியவில்லை. அப்பொழுது ஒரு சிறு பையன் உள்ளே இருந்து ஓடி வந்தான். "மரகதம் மாமி எங்கே?" என்று பாச்சா அவனைக் கேட்டார். "மரகதம் மாமி வீட்டை திடீரென்று காலி செய்து கொண்டு மாம்பலம் போய் இரண்டு நாட்களாகிவிட்டன மாமா" என்றான் பையன். அதற்குமேல் அவன் பதில் சொல்லாமல் ஓடியே போய் விட்டான். பாச்சாவுக்குத் தூக்கி வாரி போட்டது. தங்கத்திற்குக் கல்யாண ஏற்பாடு செய்வித்து அதன் மூலம் ஒரு ஆயிரம் ரூபாய் உடனடியாகப் பெறலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த தன் எண்ணம், இப்படித் திடீரென்று சரிந்து விட்டதே என்று வருத்தப்பட்டார். இளையாளாக தங்கத்தை 50 வயதுக்



கிழவருக்கு ஏற்பாடு செய்து கொடுத்தது. அந்த மாப்பிள்ளை கொடுப்பதாகச் சொல்லியிருந்த ஆயிரம் ரூபாயை இப்பொழுது பெற்றுக் கொண்டால் கல்யாணத்திற்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான் மரகதத்தை மறுபடியும் குழையடித்துக் கல்யாணத்திற்கு ஒப்புதல் வாங்கிச் செல்வதற்காக அவன் வந்திருந்தான். ஆனால் அது நடக்காது போல் இருக்கிறதே! மாம்பலத்தில் அவள் சென்றிருப்பது எந்த வீடாக இருக்கும் என்று கண்டுபிடிக்க அவர் சிந்தனை செய்தார். அப்பொழுது ஓர் எண்ணம் தோன்றியது. தங்கத்தின் தோழி சந்திராவிடம் சென்று தங்கம் குடிபோயிருக்கும் இடத்திற்கு அவர்கள் வீட்டிற்குச் சென்று விசாரித்தால் எப்படியும் அறிந்து கொள்ளலாம் என்று சந்திராவின் வீட்டை நோக்கிச் சென்றார். அவருடைய நோக்கம் மாறியதால் லஸ் முனையில் தனது மகளும் தாயும் மனைவியும் காத்திருப்பது மறந்து போய் விட்டது.

அவர்கள் நின்று நின்று பார்த்தார்கள். மணி 7, 7½ என்று ஆகிக்கொண்டே வந்தது. அந்த வழியாக மீண்டும் வந்து சேர்ந்தார் ஆபத்துக் காலத்தில் உதவுபவர் போல் கனகவல்லியும் அவள் மாமியாரும், மருமகளும், யாரையோ எதிர்பார்த்துச் சோர்ந்து போய் நின்று கொண்டிருப்பதை சாரங்கபாணி கண்டார். அவருக்கே அதிர்ச்சியாக இருந்தது. அவர்கள் அங்கு நிற்பது. யாருக்காக நிற்கிறார்கள் இவர்கள் என்று அவருக்குத் தெரியவில்லை. மெல்ல அவர்கள் அருகே சென்று "இருட்டி இவ்வளவு நேரமாக இங்கே ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்" என்று அவர் கேட்ட பொழுது மூன்று பேருக்கும் தூக்கிவாரிப் போட்டது போல் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். சாரங்கபாணியை பார்த்தவுடன் அவர்களுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவர்கள் என்னத்தைச் சொல்வார்கள். தனது கணவர் இப்படி நிற்கச் சொல்லி வராமலேயே

இருந்து விட்டார் என்பதைச் சொல்வார்களா! முதல் முதல் பெண்ணுக்கு ஜவுளி வாங்கக் கிளம்பிய பொழுதே அபசகுனம் போல் தடை போட்டு நிற்கும் கிரகத்தைச் சொல்வார்களா!

சாரங்கபாணி மிகவும் சாமர்த்தியசாலி. ஒரு நொடியில் புரிந்து கொண்டார். "அம்மா கவலைப் படாதீர்கள். நீங்கள் புறப்படும்போதே மூன்று பேராகக் கிளம்பினீர்களே என்று நான் எண்ணினேன். அதனால் ஒன்றும் இப்பொழுது முழுகிப் போய்விடவில்லை. கல்யாண ஜவுளி வாங்குவதற்காகத்தானே வந்தீர்கள். நீங்கள் வந்த காரியம் ஒன்றும் கெட்டுவிடவில்லை. கவலைப்பட வேண்டாம். எனக்குத் தெரிந்த கடை இதோ அருகேதான் இருக்கிறது. வாருங்கள் போகலாம் என்ன வேண்டுமோ வாங்கிக் கொள்ளுங்கள். மனம் தளர்ந்து வேதனைப்பட்டு நீங்கள் மூவரும் நிற்பதைப் பார்க்கும்பொழுது என்னை யாரோ கசக்கிப் பிழிவது போல் இருக்கிறது" என்று அவர் கூறும்போது மூவர் கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

சந்திராவின் வீட்டிற்குப் பாச்சா சென்றபொழுது சந்திரா வீட்டில் இல்லை, சந்திராவின் தாயார் மட்டும் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து இருந்தார். பல நாட்கள் கழித்து பாச்சா வருவதைக் கண்டவுடன் முகமலர்ச்சியுடன் வரவேற்றார். சந்திரா வீட்டில் இல்லாததை அறிந்த பாச்சா என்ன செய்வது என்றே புரியவில்லை. ஆனால் சந்திராவின் தாயார் மிகவும் கலகலப்புடனும் உற்சாகத்துடனும் வரவேற்றாள். வீட்டு நலன்களை விசாரித்தாள். காபி கலந்து கொண்டு வந்து கொடுத்தாள். பாச்சா கொஞ்சம் இழை கிடைத்தால் விடுவாரா? அங்கவஸ்திரத்தை எடுத்து சோபாவின் மீது போட்டுவிட்டு மெல்ல வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிக்கொண்டு தனது சாமர்த்தியத்தை அங்கே பயன்படுத்தத் தொடங்கினார்.



"கல்யாணம் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்" என்று ஆரம்பித்தார் பாச்சா. சந்திராவின் தாயார் சிரித்துக் கொண்டே "நீங்கள் எப்பொழுதுமே வாய் நிறைய கல்யாணத்தைப் பற்றித்தானே பேசுவீர்கள், நீங்கள் ஏற்பாடு செய்யாத கல்யாணம் உண்டா? நடத்தாத கல்யாணம் உண்டா?" என்று பெருமையாகப் பேசினாள்.

"ஊருக்கெல்லாம் நான் இடம் தெரிந்து கல்யாணம் பண்ணி வைத்திருந்தேன். இப்பொழுது என் சொந்தப் பெண்ணிற்கே கல்யாணம் நிச்சயம் பண்ணிவிட்டேன். ஆனால் என்ன பிரயோஜனம் போங்கள். நான் ஒரு நல்ல வரனை விட்டு விட்டு ஏதோ சுமாரான வரனை இப்பொழுது என் மகளுக்கு முடிக்கிறேன்" என்று ஆரம்பித்தார், ஏதோ சுவையான செய்தி இருக்கிறது என்று சந்திராவின் தாயார் ஊஞ்சலை ஆட்டுவதை விட்டுவிட்டு கவனமாகக் கேட்கலானாள்.

பாச்சாவுக்கு அந்த வீட்டில் மிகவும் சுவாதீனம் உண்டு. அதனால் அவர் சோபாவில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, "மாமி உங்களிடம் மனம் விட்டுச் சொல்லாவிட்டால் எனக்குச் சங்கடமாக இருக்கும். இந்தத் தங்கம் இருக்கிறாளே தெரியுமா? உங்களுக்கு" என்று ஒரு போடு போட்டார்.

"எந்தத் தங்கத்தைச் சொல்லுகிறீர்கள்? சந்திராவின் சிநேகிதியைத்தானே!" என்று கேட்டாள் சந்திராவின் தாயார்.

'ஆமாம். உங்கள் மகளின் பிரண்டு இருக்கிறாளே அவளுக்கு ஒரு வரன் பார்த்தேன். வரன் என்றால் சாதாரண வரனா? பெரிய ஆபீஸ் முதலாளி அவர். சொத்து 5 லட்சத்துக்குக் குறையாது. நான் கணக்குப் போட்ட வரையில். என் கணக்கெல்லாம் எப்பொழுதும் ஒன்றுக்குக் கால் பங்காகத்தான் இருக்கும். அவருக்கு முதல் சம்சாரம் தவறி ஏழு எட்டு வருஷங்களாகி

விட்டன. கல்யாணமே செய்து கொள்ளவில்லை. வயது ஒன்றும் அதிகமில்லை. 45 தான். அவர் நல்ல குடும்பதில் பிறந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டார். அந்த ஆசை ஏன் வந்தது என்றால் தனக்குப் பிறகு சொத்தை அடைவதற்கு ஒரு வாரிசு வேண்டுமேயென்பதற்காகத்தான். நானும் மனிதன் தானே! என் மகளை அவருக்குக் கொடுத்துவிடலாம் என்று மனத்தில் திட்டம் போட்டுக் கொண்டேன். ஆனால், இந்த மரகதம் இருக்கிறாளே, அதுதான் தங்கத்தின் தாயார், அவள் ரொம்ப நல்ல மாதிரி. இந்த உலகத்திலே அவளைப் போன்ற ஒரு நல்லபெண்மணியைப் பார்க்கவே முடியாது. அவருடைய கணவர் புகழ்பெற்ற பத்திரிகையில் ஆசிரியராக இருந்தார். மனைவிக்குக் காலணா சேர்த்து வைக்காமல் கண்ணை மூடிவிட்டார். என்னுடைய உயிர் நண்பர். அவருக்கு ஒரே பெண். அவள் தான் தங்கம். மரகத்தைப் பார்த்தவுடன் எனக்குப் பரிதாபமாய் இருந்தது. நன்றாக வாழ்ந்த அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று அப்பொழுதே தோன்றிவிட்டது. நான் உடனே தங்கத்தை இந்த வரனுக்கு ஏற்பாடு செய்துவிடுவது என்று முடிவு செய்தேன். மரகதத்திடம் சொன்னேன். அவள் நல்ல குணமுடையவள். ஒப்புக் கொண்டாள். தங்கம் இருக்கிறாளே அவள் கொஞ்சம் தலைக்கிறுக்கு போல் இருக்கிறது. பாருங்களேன். இவ்வளவு எல்லாம் ஏற்பாடுசெய்து வைத்திருக்கிறேன். இன்னும் பத்து நாள்தான் கல்யாணத்திற்கு இருக்கு. வீட்டைக் காலி பண்ணிக் கொண்டு எங்கே போகிறோம் என்றும் சொல்லாமல் போய்விட்டார்கள். நான் என் பெண்ணிற்காவது அந்த வரனை ஏற்பாடு செய்திருக்கமாட்டேனா? நான் வேறு இடத்தில் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன்" என்று கூறி அடுத்து சந்திராவின்



தாயார் என்ன சொல்லப் போகிறாள் என்பதை அறியும் நோக்கத்துடன் கீழ்க் கண்ணால் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

சந்திராவின் தாயார் ஊஞ்சலை விட்டுத் துள்ளி எழுந்தாள். "பாச்சா! என் குடும்பத்தோடு உங்களுக்கு எவ்வளவு நாள் பழக்கம்; இந்தச் செய்தியை ஏன் என்னிடம் சொல்லியிருக்கக் கூடாது? நான் சந்திராவுக்கு ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்க மாட்டேனா; 5 லட்ச ரூபாய் ஆஸ்தி என்றால் லேசா. மாப்பிள்ளைக்கு 45 வயது தான் ஆகிறது என்கிறீர்கள் அது ஒரு வயதா? சந்திராவுக்கு 25 ஆகிறது. 20 வயதுதானே வித்தியாசம். எனக்கும் என் கணவருக்கும் என்ன வயது வித்தியாசம் தெரியுமா? அந்தக் காலத்தில் எனக்கு 8 வயது. அவருக்கு 20 வயது. இன்னும் அந்த வித்தியாசத்தை விட இன்னும் 8 வயது வித்தியாசம்தானே அதிகம் 5 லட்சம் என்றால் இலேசா, இந்தச் சந்திராவும் அப்படித்தான். தங்கத்தோடு சேர்ந்துகொண்டு குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறாள். வேலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாமென்று நான் சொல்கிறேன். இவள் சம்பாதித்துத்தானா இந்தக் குடும்பம் நடக்கிறது. காலாகாலத்தில் கல்யாணம் செய்து கொண்டு நிம்மதியாக இரு என்று சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறாளே! வேலை வேலை என்று வெய்யிலிலும் மழையிலும் சுற்றிக் கொண்டிருக்கிறாளே. அவள் அப்பாவும் கவனிப்பதில்லை. அவளுடைய அண்ணன் தம்பிகளும் செல்லம் கொடுக்கிறார்கள். இதோ பார் பாச்சா! இப்பொழுதே போய் அந்த வரனைக் காதும் காதும் வைத்தாற் போல் சந்திராவுக்கு முடித்து வையுங்கள்" என்று ஆவேசம் வந்தவள் போல் பேசினாள்.

பாச்சா நடிப்புக் கலையில் மிகச் சிறந்தவர். மிகவும் நடுங்குபவர் போல் அவள் எதிரே பாவனை

செய்து, "இன்று, வெள்ளிக்கிழமை. நல்லநாள்; நல்ல நேரம். சாட்சாத் மகாலட்சுமி மாதிரி நீங்கள் சொல்லுகிறீர்கள். உங்களிடம் நான் இந்த வரனைப் பற்றிச் சொல்லாதது தப்புதான். என் புத்தி ரொம்பவும் கெட்டுப் போய் விட்டது. சந்திராவுக்கு ஏற்ற வரன்தான் இது. நான் இன்று இரவே பெங்களூருக்குச் சென்று அந்த முதலாளியிடம் சமாசாரத்தைச் சொல்லி ஏற்பாடு செய்து வைக்கிறேன். ஆனால் மணி என்ன இப்பொழுது? வண்டி கூடக் கிடையாதே!" என்று சொல்லித் தயங்கினார்.

சந்திராவின் தாயார் கண்களை ஒரு சுழற்றி சுழற்றி, "டிரெயின் கிடையாதா? டிரெயின் இல்லா விட்டால் டாக்ஸியில் போய்வாருங்கள். இந்தாருங்கள் முந்நூறு ரூபாய், 5 லட்சம் ரூபாய் வருவதை அவ்வளவு லேசில் விட்டுவிடவா சொல்கிறீர்கள். இதோ இங்கிருந்தே டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு வழியில் எங்காவது ஏதாவது சாப்பிட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறி மளமளவென்று உள்ளே சென்று இருப்புப் பீரோவைத் திறந்து 300க்குப் பதிலாக 500 ரூபாய் ஆக எடுத்துவந்து, "இந்தாருங்கள் 500 ரூபாய் இருக்கிறது. உடனே போய் முடித்துவிட்டு வாருங்கள் அந்த வரனை" என்றாள்.

பணத்தைக் கையிலே வாங்கிக் கொள்ளாத பாச்சா "மாமி கோபித்துக் கொள்ளக்கூடாது. என்னுடைய பெண்ணின் கல்யாணம் இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. நான் இன்னும் ஒரு சாமானும் வாங்கவில்லை. புடவை வாங்கவில்லை. பாலுக்கு அடவான்ஸ் கொடுக்கவில்லை. இந்த நிலைமையில் நான் திடீரென்று இப்பொழுது கிளம்பிப் போய்விட்டால் என்னாவது?" என்றார்.

மறுபடியும் சந்திராவின் தாயார் விடுவிடு என்று உள்ளே போனாள். மற்றும் 500 ரூபாயை எடுத்து



வந்து அவரிடம் நீட்டி, "டாக்ஸியில் போகும்போதே வீட்டிற்குள்ளே நுழைந்து 500 ரூபாயை உங்கள் சம்சாரத்திடம் வீசிவிட்டு எல்லாக் காரியத்தையும் ஏற்பாடு செய்து கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போங்கள். என் பெண் கல்யாணத்தை முடித்து வாருங்கள். உங்கள் பெண் கல்யாணத்தை நானே முன்னே நின்று நடத்தி வைக்கிறேன் சரிதானா!" என்றாள். ஒரு வெறி திடீரென்று பிடித்தது போல் சந்திராவின் தாயார் நடப்பதைக் கண்டு பாச்சாவே ஆச்சரியப்பட்டு விட்டார்.

அவரால் நம்பவே முடியவில்லை. ஆயிரம் ரூபாயை வாங்கி அப்படியே கண்களில் ஒற்றிக் கொண்டு, "இதோ பாருங்கள் மணி அடிக்கிறது. கல்யாணம் எல்லாம் சுபமாக முடியும். நான் போய் வரட்டுமா" என்று கூறிக்கொண்டே வெளியே வந்தார். சைக்கிளில் ஏறிச் செல்லும்பொழுது, அப்பொழுதுதான் லஸ்ஸில் தன் மனைவியையும் தாயையும் மகளையும் நிற்கச் சொல்லியிருந்தது அவர் நினைவுக்கு வந்தது. பாச்சா நடு நடுங்கி விட்டார். மணி அப்போது ஒன்பது. பாவம், அவர்கள் என்ன செய்வார்கள் எப்படித் திண்டாடுவார்கள் என்ற கவலையில் சைக்கிளை அப்படியே போட்டோ கடையில் வைத்துவிட்டு ஒரு டாக்ஸியைப் பிடித்துக்கொண்டு லஸ்ஸை நோக்கி விரைந்தார். ஆனால் அவர் நிற்கச் சொன்ன இடத்தில் அவரது குடும்பத்தினரைக் காணவில்லை.

## 9

மரகதம் அந்த வீட்டை விட்டுக் காலி செய்ய வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால் சுந்தரமூர்த்தியின் பார்வை அந்தக் குடும்பத்தின் மீது வீழ்ந்து விட்டது என்று மரகதத்திற்குத் தோன்றிவிட்டது.

அன்று அவர் வீடு தேடி வந்து தன் குடும்பத்தைப் பற்றி விசாரித்ததும், அவர் மிகவும் பரிவோடு பேசியதும் மரகதத்திற்குப் பிடிக்கவில்லை.

"ஏனம்மா, எங்கள் ஆபீஸ் மானேஜிங் டைரக்டர் இங்கே வந்தாரா? நான் அவரது காரைத் தெருமுனையில் பார்த்தேன்" என்று கேட்டாள் தங்கம்.

மரகதம் உடனே அதற்குப் பதில் சொல்லாமல், "அவர் உன்னைப் பார்த்தாரா தங்கம்?" என்று கேட்டாள். 'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தங்கம் தலையசைத்த பிறகுதான் மரகதத்திற்கு நிம்மதி ஏற்பட்டது.

"ஏனம்மா, குடித்தன மாமி கேட்டதற்கு அடுத்த தெருவிலுள்ள டாக்டர் தங்கத்தைத் தேடி வந்ததாகக் கூறினாயே. ஏன், அவர் என்னைத் தேடிவரவில்லையா?" என்று தங்கம் கேட்டாள். மரகதம் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, "தங்கம், அவர் உன்னைத் தேடி வரவில்லை; என்னைத் தேடித்தான் வந்தார்" என்று கூறிவிட்டு, "இதோ பார் தங்கம், நாம் மானம் மரியாதையுடன் வாழவேண்டுமென்றால் இந்த வீட்டை விட்டுக் காலி செய்து விட வேண்டும். நீயும் இந்த ஆபீசை விட்டு ராஜினாமா செய்து விட வேண்டும்" என்றாள்.

தாயார் சொல்வது தங்கத்திற்கு முதலில் விளங்கவில்லை. பிறகு மரகதம் முதலிலிருந்தே சற்று விளக்கமாகக் கூறினாள். அவளுடைய ஆபீஸ் மானேஜிங் டைரக்டரைப் பற்றி அவள் கூறியது தங்கத்தின் மனத்தை மாற்றிவிடவில்லை.

"அன்றுகூட அவர் ஆபீசில் அப்பாவை மிகவும் புகழ்ந்து பேசினார். எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு உதவி மானேஜரிடம் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். உண்மையிலேயே அவருக்கு நம்



குடும்பத்தின் மீது அக்கறை இருப்பதாக நான் நினைக்கிறேன்" என்று தங்கம் கூறினாள்.

தன் மகள் இன்னும் குழந்தை மன நிலையில் இருப்பது மரகதத்திற்கு வேதனையை அளித்தது.

"தங்கம் உனக்கு இன்னும் உலகமே புரியவில்லை. உன்னைப் போன்றவர்களை எளிதில் ஏமாற்றுவதற்கு இந்த உலகத்தில் வட்டமிடுபவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன் - சீக்கிரமாக இந்த இடத்தை விட்டும், வேலையை விட்டும் வேறு இடத்திற்குப் போய்விட வேண்டும் என்று. இல்லாவிடில் நமது பரம்பரையின் நல்ல பெயரே கெட்டுக் குட்டிச்சுவராகிவிடும்" என்றாள் மரகதம்.

தங்கத்திற்கு இன்னும் புரியவில்லை. தாயாருக்கு வசதியுடனிருப்பதும், கஷ்டப்படாமல் வாழ்க்கை நடத்துவதும் பிடிக்கவில்லை; எப்போதும் பழைய படியே இருக்க ஆசைப்படுகிறாள் என்று எண்ணினாள். முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு, "நீயே யோசனை செய்து பார். முன்பு பெட்டியில் இரண்டு புடவைகளுக்கு மேல் மறு புடவை கட்டிக் கொள்ளக் கிடையாது. இப்போது பதினைந்து நாட்களில் ஆறு புடவை வாங்கிவிட்டோம். ஒரு மாதத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கியிருக்கிறோம். டைப்பிஸ்டுக்கு எந்த ஆபீசில் அம்மா முந்நூறு ரூபாய் எடுத்த எடுப்பில் சம்பளம் கொடுக்கிறார்கள்? அட்வான்ஸாக எனக்கு ஒருமாதச் சம்பளத்தைத் தருமாறு மானேஜிங் டைரக்டர் உதவி மானேஜருக்கு உத்தரவு போட்டிருக்கிறார்... நீ என்னவென்றால் அவரை நம்பாதே என்கிறாய்" என்றாள்.

மரகதத்திறகுச் சிரிப்புத்தான் வந்தது. "தங்கம் நீ படித்த பெண். என்னைவிட அதிகம் படித்தவள். உன் அப்பாவின் டைரி முழுவதும் படித்திருந்தால் பெண்கள் நடந்துகொள்ள வேண்டிய நிலையை முழுவதும்

அறிந்து கொள்வாய். ஒரு பெண் வாழ்க்கையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார். அதில் அவர் சொல்வதை இதோ படிக்கிறேன் கேள்:" என்று வேகமாகச் சென்று பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தைக் கொண்டு வந்தாள். அதிலிருந்து சில பகுதிகளைப் படித்தாள். "…. பெண்கள் பொது இடத்தில் கலீர் எனச் சிரிக்கக் கூடாது. அந்தச் சிரிப்பு ஆண்கள் உள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்தும் சில ஆண்கள் தைரியசாலிகளாக இருக்க மாட்டார்கள். பலஹீனமான இதயம் உள்ளவர்கள். அந்தச் சிரிப்பு தங்களைக் கவர்வதற்காக ஏற்பட்ட நகையொலி என்று எண்ணி விடுவார்கள். பிறகு விளைவு மோசமானது தான். அது போன்றே வலிய வந்து ஓர் ஆடவன் பெண்ணுக்குச் செய்யும் உதவியை ஏற்றுக் கொள்ளக் கூடாது. சிறு உதவியாக முதலில் தொடங்கும். ரிப்பன், சோப்பு, சீப்பு, பவுடர், பிறகு ஐஸ் கிரீம். அப்படி வாங்கிக் கொள்ளத் தொடங்கியவுடன் பெற்றுக் கொள்பவர்களுக்கு ஒரு சபலம் எழும். வேறு தனக்குத் தேவையான விலையுயர்ந்த பொருளைக் கேட்போமே யென்று துணிந்து கேட்கச் சொல்லும். பெண் மென்மையான மலர். இருக்கும் இடத்தில் இருந்தால் தான் அதற்கும் சிறப்பு; இடத்திற்கும் சிறப்பு."

"தங்கம், புரிந்ததா? உன் தந்தையின் டைரியில் எழுதியுள்ள குறிப்பினை. நான் இதுவரையில் வேத வாக்காகக் கருதி வருகிறேன். இல்லாவிடில் ஆண் துணையில்லாமல் நான் இவ்வளவு தூரம் வாழ முடியுமா? அதிலும் வயது வந்த உன்னையும் வைத்துக் கொண்டு பிறர் களங்கம் கூறாமல் வாழ முடியுமா?" என்றாள் மரகதம்.

"சரி அம்மா; எங்கள் மானேஜிங் டைரக்டர் என்ன தவறு செய்துவிட்டார். அவர் என்ன இளம்



பிள்ளையா? உதவி மானேஜராவது வாலிப வயதினர். அவரிடம் பேசுவதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது. அவர் அப்படியில்லையே… என்னை ஒரு குழந்தை போல நடத்துகிறார். ஒரு வினாடிகூட அதிகமாக அவரது அறையில் நிற்க விடுவது கிடையாது. அவரைப்பற்றி இப்படியெல்லாம் நீ சொல்வது சரியில்லை அம்மா. சௌகரியமாக வாழத் தொடங்கிய குடும்பத்தை யாரோ கலைக்க இப்படியெல்லாம் ஏற்பாடு செய்கிறார்கள். அந்த பாச்சா மாமா உனக்கு உபதேசம் செய்கிறாரா?" என்று தங்கம் சற்றுக் கோபமாகவே கேட்டாள்.

"தங்கம்! உன் மானேஜிங் டைரக்டர் மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாயே! ஆனால் அவர் உன் மீது நல்ல நம்பிக்கை வைக்கவில்லையே…" என்று பேச்சைத் தொடங்கினாள் மரகதம்.

"என்னம்மா சொல்கிறாய்?"

"ஆமாம் தங்கம்: நீ நினைப்பது போல் அவர் உன்னைத் தன் மகளாகப் பார்க்கவில்லை. அவருக்குத் தன் ஆபீஸ் டைபிஸ்ட் என்ற நினைவே உன்னைப் பார்த்தவுடன் வரவில்லை. அவருக்கு உன்னைப் பார்க்கும் போதெல்லாம் வேறு எண்ணந்தான் தோன்றியிருக்கிறது…"

"என்ன அம்மா சொல்கிறாய்?"

"ஆமாம் தங்கம். அவர் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறார் என்று மட்டும் அவர் எண்ணத்தை, மிகவும் உயர்ந்த வார்த்தையாகக் கூற முடியும்."

"என்ன அம்மா சொல்கிறாய்?" என்று பரபரப்புடன் தங்கம் கேட்டாள்.

"நான் என்ன சொல்ல முடியும்? நீ இன்னும் புரிந்து கொள்ளாததைப் பார்த்தவுடன் நீ சின்னஞ்

சிறு குழந்தை என்று சொல்கிறேன். உன்னைப் போன்ற இளம் பெண் வேலைக்குச் செல்லக் கூடாது என்று சொல்கிறேன்" என்றாள்.

பிறகு மரகதம் விவரமாகவும், தங்கத்திற்குப் புரியும் வகையிலும் கூறினாள்.

சுந்தரமூர்த்தி மரகதத்தைத் தேடிக்கொண்டு வந்தார். தன்னை அவள் அடையாளம் கண்டுகொள்ள மாட்டாள் என்ற நினைப்பில் பழைய ஞாபகங்களை மெல்ல நினைவூட்டினார். ஒருவேளை தன்னை மரகதம் வெறுத்து விடுவாளோ, பழைய ஞாபகத்தில் கோபம் மாறாமல் உதாசீனமாகப் பேசி அனுப்பி விடுவாளோ என்ற எண்ணத்தில் எடுத்த எடுப்பிலேயே "தங்கம் ரொம்ப நல்ல பெயர். மிகச் சூடிகையாக வேலை செய்கிறாள். சீக்கிரமாக முன்னுக்கு கொண்டு வருவதற்கு வேண்டிய உத்தரவுகளைப் போட்டுவிட்டேன். நான் உங்கள் கணவருக்கு, என்னுடைய உரிய நண்பருக்கு அந்தக் காலத்தில் பெரும் தீங்கு செய்து விட்டதாக ஓர் எண்ணம் நிலவியது; என் காதிலும் விழுந்தது. அப்பொழுதே, அந்தக் காலத்திலேயே ஓடிவந்து தங்களிடம் விஷயத்தை விளக்க எண்ணினேன். ஆனால் உங்கள் கணவரிடம் என்நிலையை விளக்கிச் சொல்லிவிட்டேன். அவரும் திருப்தியடைந்துவிட்டார். அவர் வேலை செய்த பத்திரிகை ஆபீஸ் பார்த்தசாரதி முதலியாருடன் சண்டைபோடடு அவருக்குச் சேர வேண்டியதை வாங்கிக் கொடுத்தது எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. அதன்பிறகு காலம் எப்படி எப்படியெல்லாமோ மாறியது. எனக்கும் அதிர்ஷ்ட தேவதை உதவினாள். நான் இந்த ஊரை விட்டுப் பம்பாய் சென்றேன். கடவுள் அருளினால் நான் பெரிய மனிதனாக மாறினேன். ஐஸ்வரியத்திற்குக் குறைவில்லை. ஆனால் மன அமைதி மட்டும் இல்லை. கலியாணமான மனைவி எப்போதோ இறந்து போய் விட்டாள் என்பது



தங்களுக்குத் தெரிந்திருக்கும். எனக்குள்ள பெரிய பங்களாவையும், ஆஸ்தியையும் கட்டிக் காத்து ஆட்சிபுரிய ஓர் பொற்கொடி தேவை. மனம்விட்டுச் சொல்கிறேன். சுற்றி வளைக்காமல் சொல்கிறேன்; தங்கத்தைப் பார்த்தவுடன் எனக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று. நல்லதொரு எண்ணம்தான். அந்தக் காலத்தில் நான் செய்ததாக எல்லோரும் கூறும் தவறுக்குப் பிராயச்சித்தமாகத் தங்கத்தை நான் மணம் புரிந்துகொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இதுவரை உங்கள் பெண்ணிடம் நான் இதுவரை மூச்சுக் கூடவிடவில்லை. அவளிடம் புன்முறுவல்கூட புரியவில்லை. தங்களிடம் முறையாக வந்து கேட்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இதோ வந்து விட்டேன். எனக்கு இருக்கும் ஆஸ்தி ரொக்க வசதி இவற்றை நானே சொல்வது சரியாக இருக்காது" என்று அவர் கூறும்போது மரகதம் குறுக்கிட்டு, "தெரியுமே! நான் எல்லாம் கேள்விப்பட்டுத் தெரிந்து கொண்டு விட்டேன்" என்றாள்.

"தங்கம் சொன்னாளா?" என்று கேட்டார் சுந்தரமூர்த்தி.

"யாரோ சொன்னார்கள்; வந்த காரியத்தைச் சொல்லுங்கள்" என்று அழுத்தமாகக் கூறினாள் மரகதம். அந்த வார்த்தை யொன்றே சுந்தரமூர்த்தியைத் திடுக்கிட வைத்தது. மரகதத்தை எப்படியும் சம்மதிக்க வைத்து விடலாம் என்று அவர் எண்ணியது நடவாதுபோல் தோன்றியது. மரகதம் ஒரு வார்த்தையில் சுந்தர மூர்த்தியைத் திரும்பிப் போகுமாறு செய்து விட்டாள்.

"என்னம்மா சொன்னாய் அவரிடம்" என்று தங்கம் அழாத குறையாகக் கேட்டாள்.

"என்ன சொல்லவேண்டுமோ சொல்லி விட்டேன். அவரைக் கையெடுத்துக் கும்பிட்டு 'கூழோ கஞ்சியோ குடித்து மானத்துடன் வாழ்கிறோம். அதில் தயவுசெய்து

தலையிடாதீர்கள், அமைதியைக் குலைக்காதீர்கள்; நல்ல நண்பராகக் கூட நீங்கள் இங்கே வரவேண்டாம். எங்களை வாழ விடுங்கள்' என்று கூறினேன். அவர் சற்றுநேரம் அமைதியாக என்னையே பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். பிறகு 'போய் வருகிறேன்' என்று கூறித் தனது பெரிய காரில் ஏறிக்கொண்டு போய்விட்டார்" என்று மரகதம் கூறினாள்.

"என்னைப் பற்றிக் கேட்கவே இல்லையா?" என்று தங்கம் வினவினாள்.

"ஆம் கேட்டார். உன்னைப்பற்றி தானே முழுக்க முழுக்க கேட்டார். தங்கம்; உண்மையைச் சொல்லு. உனக்கு அவர்மீது ஆசையிருந்தால் சொல்லி விடு. இப்போதே போய் அவர் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கல்யாணத்தை உடனே ஏற்பாடு செய்து விடுகிறேன்..." என்று கூறிய மரகதம் கோவென்று கதறினாள். தங்கத்திற்கு அழுகை பொங்கி வந்தது. தாயின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "அம்மா, அம்மா, என்னம்மா இப்படிச் சொல்லி விட்டீர்கள். ஒரு நாளும் நான் தங்கள் எண்ணத்துக்கு விரோதமாக நடந்து கொள்ள மாட்டேனம்மா. அந்த வேலைக்கும் நான் இனி போகமாட்டேனம்மா" என்று விம்மினாள்.

அன்றே தங்கம் தான் வேலை செய்யும் ஆபீசுக்கு ராஜினாமாவைச் சமர்ப்பித்து விட்டாள். மரகதம் எங்கோ வெளியே சென்றாள். திரும்பி வரும்போது மாம்பலத்தில் வேறு வீட்டை வாடகைக்கு பார்த்து விட்டு வந்தாள். மறுநாள் காலையில் சாமான்களை எடுத்துக்கொண்டு புது வீட்டிற்குக் குடிபோய்விட்டாள். அனைவரும் ஆச்சரியப்பட்டனர். "மகளுக்கு உத்யோகம் ஆகிவிட்டதல்லவா? அதனால் வேறு அதிக வாடகை வீட்டிற்குப் போய் விட்டாள்" என்று சிலர் பேசிக் கொண்டனர்.



"பெரிய வீட்டிற்குத்தான் போகட்டும் ஏரோப்ளேனில்தான் போகட்டும்; நம்மிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போனால் என்ன?" என்று குடித்தனக்காரி வருத்தப்பட்டுக் கொண்டாளா, பெருமையுடன் கூறினாளா என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

## 10

பாச்சா வீட்டிற்குள் நுழையும்போதே பயத்துடன் தான் நுழைந்தான். வீட்டில் விளக்கு வெளிச்சமிருந்தது. யாரோ சிலர் பேசும் குரல் கேட்டது. டாக்ஸிக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார் பாச்சா! ஏனென்றால் அவர் கண்களில் பளபளவென்று புடைவையும் வேஷ்டியும் பட்டுவிட்டன.

ஏதோ பெரிய காரியம் செய்து களைத்து வந்தவர் போல பாச்சா 'உஸ்... அப்பாடா' என்ற அங்கவஸ் திரத்தைக் கதவின் மீது போட்டு விட்டுக் காலை நீட்டிப் போட்டுக்கொண்டு கீழே உட்கார்ந்தார்.

"உங்களை நான் எங்கெல்லாம் தேடுவது?" என்று பாச்சா சற்று உரத்த குரலில் கேட்டார். அவருடைய தாயார் அவனை விழுங்கி விடுபவள் போல் பாத்து, "நன்றாயிருக்குடா உன் பேச்சு? முச்சந்தியிலே எங்களை நிற்க வச்சிட்டு, எங்களைத் தேடியதாக வேறு கூறுகிறாயே! நியாயமா இது" என்றாள். ருக்மணியும் கனகவல்லியும் வாயைத் திறக்கவில்லை. தந்தையின் எதிரே முகூர்த்தப்புடைவை, நலங்குப் புடைவை, மாப்பிள்ளை வேஷ்டி எல்லாவற்றையும் காட்டினாள்.

"உன் அம்மாவுக்கு எங்கேடி புடவை?" என்று பாச்சா கேட்டார். புடைவைகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவாறு.

"இந்தப் புடைவைகளையே வாங்குவோமா என்றாகி விட்டது. எனக்குப் புடைவை ஒரு கேடா" என்று கனகவல்லி பெருமூச்சு விட்டவாறு கூறினாள்.

பாச்சா துள்ளிக் குதித்தார். "ஏன், ஏன்? இவற்றை வாங்குவதற்கு உனக்கு என்ன கஷ்டம்? புடைவைக் கடைக்காரர் ஏதாவது தகராறு செய்தாரா? எந்தப் புடைவை எடுத்தாலும், யார் வந்தாலும் கொடுத்து விடுமாறு நான் சொல்லிவிட்டுச் சென்றிருந்தேனே" என்று பாச்சா 'தன் சரக்கை' விவரித்தார். கனகவல்லி அந்த வலையில் சிக்கவில்லை.

"ஆமாம்; நீங்கள் சொல்லிவிட்டுப் போன புடைவைக் கடைக்காரர் பாக்கு வெற்றிலை வைத்து என்னை வரவேற்று வேண்டியதை எடுத்துப் போ என்று உபசாரம் செய்தார். நீங்கள் எங்களைக் காத்திருக்கச் சொன்ன லட்சணமும், வந்த லட்சணமும் நன்றாகத் தானிருக்கின்றன. இப்போதாவது சொல்லுங்கள்; சத்திரம் ஏற்பாடாகி விட்டதா? பாலுக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டீர்களா? சாமான் வாங்கப் பணம் ஏற்பாடு செய்து விட்டீர்களா? நான் கேட்கிறேனே என்று கோபிக்கா தீர்கள்; மாப்பிள்ளையை நிச்சயம் செய்தது உண்மை தானா?" என்று மளமளவென்று கேட்டாள். இத்தனை வருடங்களில் அவள் கணவனை எதிர்த்துக் கேட்பது இதுதான் முதல் தடவை. அவள் மாமியார் கூட அசந்துவிட்டாள். தன் மருமகளுக்கு இவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்ததென்று.

அந்தச் சமயம் வாயிற் கதவைத் திறந்துகொண்டு சமையற்காரர் சாரங்கபாணியும், அவர் மகன் கோபாலனும் வருவது தெரிந்தது.

"இவர் ஏன் இப்போ வருகிறார் சிவபூஜையில்..." என்று பாச்சா முணுமுணுத்தது சாரங்கபாணியின் செவிகளில் வீழ்ந்துவிட்டது. "சிவபூஜை என்று



சொல்லாதேங்காணும்; பெருமாள் சேவையில் கருடன் என்று கூறுங்கள்" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, "டேய் கோபாலா, மாமாவுக்குச் செவிடா" என்று தன் மகனைப் பார்த்துக் கூறிவிட்டு, பாச்சாவைப் பார்த்து, "பாச்சா மாமா, இன்று என் பிள்ளைக்குப் பாங்கியில் வேலை கிடைத்துவிட்டது. எல்லாம் தங்கள் அனுக்கிரகம்" என்றார்.

கோபாலன் நமஸ்காரம் செய்து எழுந்தான். "பரவாயில்லை. அப்பாவின் உத்தியோகத்திற்குப் போகாமல் நல்ல வேலைக்குப் போய் விட்டாய். நல்ல இடத்தில் நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டு சிரஞ்சீவியாக இரு" என்று வாழ்த்தினான்.

சாரங்கபாணியும், கோபாலனும் சென்ற பிறகு "சரியான சமயத்தில் வந்து சேர்ந்தார்கள். உம்: பார்த்தாயா? இவ்வளவு புடைவை வேஷ்டி இங்கே இருக்கிறதே எதற்கு என்று கேட்டாரா? பொறாமை! பொறாமை. இனி சமையற்காரரைப் பிடிக்க முடியாது; பையனுக்கு வேலை கிடைத்து விட்டதே. பெரிய கலெக்டர் வேலை. இதோ பாரு: என் மாப்பிள்ளைக்கு அதே பாங்கியில் மானேஜர் உத்தியோகம் வாங்கித் தராவிட்டால் என் பெயர் பாச்சா இல்லை. அந்த பாங்கி ஸெகரட்டரி சுந்தரத்தை எனக்குத் தெரியும்..." என்று சொல்லிக் கொண்டே போனவரை அவர் தாயார் தடுத்து நிறுத்தி, "சும்மா கொட்டித் தீர்க்காதேடா! இந்த ஜவுளிகள் எல்லாம் யார் வாங்கிக் கொடுத்தது என்று தெரியாமல் பேசாதே" என்றாள்.

"யார் வாங்கிக் கொடுத்தார்? என்று சிரித்தார் பாச்சா. தோள்பட்டையில் முகவாயை இடித்துக் கொண்ட அவர் தாய், "ஆமாம்; நீ தான் ஐநூறு ரூபாய் ஜவுளி வாங்கினாய்! நல்ல வேளையாக சாட்சாத் பெருமாள் மாதிரி எதிர்த்த வீட்டு மாமா வந்தாரோ

மானம் பிழைத்ததோ: திரும்பி வருவதற்குக் கூட காலணா கொடுக்காமல் போய்விட்ட நீ, ஜவுளி வாங்க மாட்டாயோ ஜவுளி" என்றாள்.

"யார் வாங்கிக் கொடுத்தார்?" என்று பரபரப்புடன் கேட்டார் பாச்சா. கனகவல்லி நடந்த விவரங்களைக் கூறி, "எங்கள் இஷ்டப்படிதான் ஜவுளிகளை வாங்கினார். அவர் கணக்கில்தான் கடைக்காரர் கொடுத்திருக்கிறார்" என்றாள்.

பாச்சாவின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை; சற்று நேரம் ஏதோ யோசிப்பவர் போல் இருந்து, "நீங்கள் முருகன் ஸ்டோர்ஸ் வாசலில் நின்று கொண்டிருந்தீர்களா? நான் மூர்த்தி ஸ்டோர்ஸ் வாசலில் உங்களுக்காக நின்று கொண்டிருந்தேன். அங்குதான் நான் ஜவுளிகளை வாங்க ஏற்பாடு செய்திருந்தேன். போகட்டும். எவ்வளவு ஜவுளிக்கு ஆச்சு? இந்தா ஐநூறு ரூபா. இதை சாரங்கபாணியிடம் கொடுத்து விடு" என்று தன் பையிலிருந்த ரூபாயை எடுத்துத் தன் மனைவியின் எதிரே போட்டார்.

பிறகு தன் தாயாரிடம் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை கொடுத்து, "வேண்டிய சாமான்களை நாளைக்கே வாங்க ஏற்பாடு செய்து விடு. உன் மருமகள் இவ்வளவு நாட்களாக இல்லாமல் என்னை நம்பவில்லை. போகட்டும்; ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காலம். இதோ பார் இன்னும் ஆயிரம் ரூபா என்னிடம் இருக்கிறது. கல்யாணத்தை ஜாம்ஜாம் என்று நடத்தி விடுகிறேனா இல்லையா பார்" என்றார்.

அனைவரும் ரூபாய் நோட்டுக்களை வியப்புடன் வைத்த கண் வாங்காமல் பார்த்தனர். பாச்சாவின் தாயார் சுருதி குறைந்தது.

"நான் நம்பாமல் இல்லைடா; என் பிள்ளையின் சாமர்த்தியம் எனக்குத் தெரியாதா? அவள் என்னமோ



தெரியாமல் பேசிவிட்டாள். இவ்வளவு நாள் இல்லாமல் இன்று பேசிவிட்டாள். உன் சாமர்த்தியம் என்ன! செல்வாக்கு என்ன! பெரிய இடத்து வரனை நிச்சயம் செய்து வந்த உன் சாமர்த்தியம் யாருக்கு வரும்! நீ சாப்பிட்டையோ! இல்லையோ எழுந்து வா. ஒரு பிடி சாப்பிடலாம்" என்று குழைந்தாள்.

எதிர்த்த வீட்டிற்குப் பணத்தைக் கொண்டு கொடுக்கச் சென்ற தன் மனைவியைக் கூப்பிட்ட பாச்சா, "கனகவல்லி இங்கே வா! நாளைக்கு இவருக்குக் கொடுக்கக் கூடாதா? நான் ஜவுளியைக் கடனில் எடுத்து வரத் திட்டமிட்டிருந்தேன். அந்த ரூபாயை வெள்ளிப் பாத்திரம் வாங்குவதற்கு என்று வைத்திருந்தேன்..." என்று கூறிப் பல்லையிளித்தார்.

சாரங்கபாணியே அங்கே திருதிருவென்று நுழைந்தார். "பாச்சா அவர்களே! என்னைக் கோபிக்காதீர்கள். ஐநூறு ரூபாயைக் கல்யாணம் முடிந்த உடன் கொடுத்து விடுங்கள். நான் இன்றுஅவசரமாக ஒரு கலியாணத்திற்கு வேண்டிய சமையல் பாத்திரங்களை ஏற்பாடு செய்யப் போகிறேன். நாளைக்கு வருகிறேன். அமைதியாக எல்லாவற்றையும் அவசரமில்லாமல் செய்யுங்கள். வரட்டுமா?" என்று கூறிவிட்டுப் பதிலுக்கு எதிர்பாராமலேயே புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

சாரங்கபாணி சமையற்காரர்தான்; அவர் பக்குவமில்லா உணர்ச்சிகளைச் சமாதானப்படுத்தி இடத்தில் அருமையான உயர்ந்த விருந்து சமைக்கும் விசித்திரச் சமையற்காரர். அவருடைய போக்கை கனகவல்லியாலும், அவள் மாமியாராலும் இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய பிள்ளை கோபாலன் சாட்சாத் கோபாலனைப் போல் தோற்றமளிப்பதைக் கண்டு மனத்திற்குள்ளேயே கனகவல்லி ஏக்கமடைந்து, "தன் மகளுக்கு வரப்போகும் மாப்பிள்ளை எப்படி இருப்பாரோ! கோபாலனை

மாப்பிள்ளையாக அடையும் பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே" என்று எண்ணினாள்.

இரவு பாச்சாவும் தூக்கம் வராமல் திரும்பித் திரும்பிப் படுத்தார். கனகவல்லிக்கு உறக்கம் சரிவர வந்து பல நாட்களாகிவிட்டன. தன் கணவன் கிராமத்திலிருந்து வரன் பார்த்துக்கொண்டு வந்த நாளிலிருந்து அவளுக்கு இரவு உறக்கம் கிடையாது. மாப்பிள்ளை குலமென்ன; கோத்திரமென்ன என்று கூடத் தெரியாமல் கல்யாண ஏற்பாடு செய்ய வேண்டி இருக்கிறதே என்று வேதனைப்படுவாள்.

தன் கணவரும் தூங்காமல் விழித்துக்கொண்டு இருப்பதைக் கவனித்த கனகவல்லி மெல்லக் கணவரிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"ஏன்னா! கல்யாண அழைப்பிதழ் தயாராகி விட்டதா?" என்று பேச்சைத் தொடங்கினாள். கல்யாண கடிதத்தில் கட்டாயம் பிள்ளையின் பெயர், தகப்பனார் பெயர் போட்டாக வேண்டுமல்லவா! தன் மனைவி கேட்டவுடன்தான் பாச்சாவுக்கு ஆபீசிலிருந்து புரூப் வாங்கிவரவேண்டும் என்ற நினைவு வந்தது. அன்று எல்லா வேலைகளுமே தலைகீழாய் விட்டனவே.

மரகதத்தைச் சந்திக்கப் போய், சந்திராவின் தாயாரைச் சந்தித்ததும், கலியாண ஏற்பாட்டிற்காகப் பணம் வாங்கியதும் அவருக்குக் கனவு போல் தோன்றின. பணத்தை வாங்கியாய்விட்டது; பெங்களூர் செல்வதாகவும் சொல்லியாகிவிட்டது. சந்திராவுக்கு வரன்? ஹும், பாச்சாவுக்குத் தன் வாழ்நாளிலேயே முதன் முதலாகக் கவலை பிறந்தது. சந்திராவின் தாயார் ஊஞ்சல் பலகையிலிருந்து துள்ளி எழுந்ததும், இரும்புப் பீரோவைத் திறந்து ரூபா நோட்டுக்களை எடுத்துக் கொடுத்ததும் கனவு இல்லை. நனவுதான் என்று இவர் உறுதிப்படுத்திக் கொண்டார்.



"என்ன பேசுகிறீர்கள்; பெருமூச்சு விடுகிறீர்கள்?" என்று கேட்டாள் கனகவல்லி.

"ஒன்றுமில்லை; நாளையதினம் அல்லது மறு நாள் யாராவது வந்து என்னைத் தேடினால் பெங்களூர் போயிருப்பதாகச் சொல்லிவிடு" என்றார் பாச்சா.

"சொல்ல மறந்து விட்டேனே: உங்களை ஒரு கிழவர் போனவாரம் வந்து தேடினார். வெய்யிலில் அவர் தள்ளாடியவாறு வந்து சென்றார்..." என்று கூறியதோடு நிறுத்திக் கொண்டாள்.

"ஓ அந்தக் கிழவரா!" என்று 'சூள்' கொட்டினார் பாச்சா. "பெண்ணை நூற்றுக்கணக்காகப் பெற்று விடுகிறார்கள். கலியாணத்துக்குப் பாச்சாவின் உயிரை எடுத்தால் என்ன செய்வது?" என்று ஏதோ பெரிய தொந்தரவை ஏற்காதவர் போல் கூறினார் பாச்சா.

"ஏன் உங்களைக் கலியாணம் செய்து கொள்ளச் சொல்லி அந்தக் கிழவர் தொந்தரவு செய்தாரா என்ன?" என்று கனகவல்லி கேட்டாள். கேள்வியில் கிண்டல் இருந்ததை பாச்சா புரிந்துகொண்டார்.

"ஆகா; பேஷாக இப்போது யாராவது பத்தாயிரம் ரூபா வரதட்சணை தருகிறேன் என்றால் கலியாணம் செய்து கொள்ளத் தயார். என்ன சிரிக்கிறாய். இரண்டாம் தாரம் மூன்றாம் தாரம் என்று பெண்கள் இப்போது கல்யாணம் செய்து கொள்ளத் தயாராயிருக் கின்றனர். இப்போ நான் வைத்துக் கொண்டிருந்த ரூபாய் ஏது என்று நினைக்கிறாய்! நம் ருக்மணி வயதொத்த பெண் ஒருத்திக்கு நல்ல கிழவராகப் பார்த்து முடிவு செய்துவைக்க எனக்குச் செலவுக்காகக் கொடுத்த ரூபா. நான் இந்த நேரம் பெங்களூரில் இருக்க வேண்டியவன். என் பெண் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டேனே. எங்கே நான் போவது? தட்டிக் கழித்தேன். அந்த அம்மாள் சம்மதிக்கவில்லை.

கலியாணச் செலவுக்கு என்று ஐநூறு ரூபாயை எடுத்து வீசினாள்" என்று பாச்சா பெருமையாகக் கூறினார்.

"மாப்பிள்ளை பெங்களூரிலா இருக்கிறார்" என்று கனகவல்லி கேட்டாள்.

"பெங்களூரோ, மங்களூரோ ஒரு பணக்காரக் கிழவரை நான் இரண்டு நாட்களில் தேடியாக வேண்டும். அதனால்தான் அந்த அம்மாள் என்னைத் தேடி ஒருவேளை நாளைக்கு வந்தால், நான் பெங்களூர் போயிருப்பதாகச் சொல்லு" என்றார் பாச்சா.

கனகவல்லியின் உடல் சிலிர்த்தது. தன் கணவர் இப்படிக் கூசாது பொய் சொல்கிறாரே என்று வேதனைப் பட்டாள்.

## 11

பாச்சா தனது சைக்கிளில் வேகமாகச் சென்று கொண்டிருந்தார். அவருக்கு எவ்வளவோ நினைவுகள். கலியாண முகூர்த்தத்திற்கான நாள் நெருங்க நெருங்க அவரது இதயத்தில்கூடக் கவலை சூழ்ந்து கொண்டது. தன் மகள் கல்யாணத்துடன் கூட சந்திராவுக்கு வரன் பார்த்து வைக்க வேண்டிய கட்டாயக் கடமையும் சேர்ந்து கொண்டது. இரண்டு நாள்கள் வரை சந்திராவின் தாயார் அவரைத் தேடமாட்டாள். பெங்களூரில் வரன் விஷயமாகப் பேசிக் கொண்டிருப்பதாக நினைப்பாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு நிச்சயம் தன்னைத் தேடி வந்து விடுவாள். அதற்குள் வரன் ஏற்பாட்டை எப்படியாவது செய்தாக வேண்டும்; இல்லாவிடில் பணத்தையாவது திருப்பித் தரவேண்டும். என்ன செய்வது என்றே பாச்சாவுக்குப் புரியவில்லை. ஒரு தைரியமிருந்தது; பண்ணையார் கலியாணத்திற்கு முன்பு இரண்டாயிரம் ரூபாய் பணம் அனுப்புவதாகக்



கூறியிருந்தார். அந்தப் பணம். வந்துவிடும் என்ற நம்பிக்கை பாச்சாவுக்கு இருந்தது.

சந்திராவின் தாயார், தன் மகளை வயதான வரனுக்குக் கொடுக்கச் சம்மதிப்பானேன். பாச்சாவுக்கு உள் மர்மம் என்ன என்று புரியவில்லை. சந்திரா வீட்டவர்களுக்குப் பணக் கஷ்டம் இல்லை. பின் ஏன் அப்படி அவசரப்பட்டாள். பீரோவைத் திறந்து பணத்தை எடுத்து வீசினாள். தங்கத்திற்கு வரன் பார்த்தோம் என்பதால் இருக்குமா? அல்லது லட்சத்திற்கு மேற்பட்ட ஆஸ்தி மாப்பிள்ளைக்கு இருப்பதால் தம் மகளை பணக்கார இடத்தில் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம்.

பாச்சா பலவாறாக நினைதுக்கொண்டே போகும் போது அவர் கண்ணால் அவரையே நம்பவில்லை. எதிரே தங்கம் வந்து கொண்டிருந்தாள்.

"தங்கம்" என்று உரிமையோடு கூவியவாறு சைக்கிளிலிருந்து குதித்தார் பாச்சா.

"என்ன இது; என்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் நீ வீட்டைக் காலி செய்து கொண்டு போய்விட்டாயே!" என்று பாச்சா உரத்த குரலில் பேசியது தங்கத்திற்கு என்னவோ போல் இருந்தது. இருந்தாலும் பாச்சாவைத் தட்டமுடியவில்லை. மேலும் அவள் தாயார் பாச்சா மாமாவை எங்காவது சந்தித்தால் வீட்டிற்கு வரச் சொல்லு" என்று கூறியிருந்தாள்.

"மாமா, இப்படி ரோடில் நின்று பேச வேண்டாம். வீட்டிற்கு வாருங்களேன்" என்று அழைத்தாள்.

தங்கம் முன் எப்போதையும் விட சுமூகமாக பேசுவது பாச்சாவுக்கு வியப்பாக இருந்தது. ஆனால் அவள் வதனத்தில் ஏதோ ஒருவித சோகம் குடிகொண்டிருப்பதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

“வீட்டிற்குக் கட்டாயம் வரத்தான் போகிறேன் ருக்மிணிக்குக் கல்யாணம். நீங்களெல்லாம் நடத்தி வைக்க வேண்டாமோ. கல்யாணப் பெண்ணின் தோழி நீ தானே!” என்று கூறிய பாச்சா சில முக்கிய விஷயங் களைப் பேச விரும்பி அருகேயுள்ள காபி ஓட்டலை நோக்கி, “உன் விருப்பப்படியே நடு ரோட்டில் நின்று பேச வேண்டாம். வா, ஸிம்பிளா ஒரு கப் காபி சாப்பிடுவோம். முக்கியமான விஷயங்கள் பேச வேண்டும்” என்று அழைத்தார்.

தங்கம் ஒரு கணம் தயங்கினாள். அவளுக்கும் அப்போது தாகமாக இருந்தது. தலைவலியும் இலேசாக இருந்தது. எனினும் சற்றுப் பிகு செய்து கொள்பவள் போல், “எதற்கு மாமா, வேண்டாம்; வீட்டிற்குச் சென்றால் நல்ல காபி கிடைக்கும்...” என்றாள்.

“அட: வீட்டிலே காபி இருக்காது என்று யார் சொன்னது? கொஞ்சம் அமைதியாகப் பேசுவோமே என்பதற்காகத்தான் கூப்பிடுகிறேன். அம்மாவுக்குத் தெரிந்தாலும் தவறாக நினைக்கமாட்டாள். நீ வாங்கித் தர வேண்டாம். நான் வாங்கித் தருகிறேன்” என்று வற்புறுத்தினார் பாச்சா.

பெண்கள், குடும்பத்தினருக்கு என்று பிரத்யேகமான இடத்திற்கு இருவரும் சென்றனர். ஸப்ளையர் வந்து டம்ளரில் தண்ணீரை ஊற்றிவிட்டு அப்படியே தங்கத்தின் மீதும் ஒரு பார்வையை வீசிவிட்டு, “என்ன வேண்டும்?” என்று அலட்சியமாகக் கேட்டான்.

“இரண்டு ஐஸ் கிரீம்” என்றார் பாச்சா.

“என்ன மாமா இது?” என்று தங்கம் முகத்தைச் சுளித்தவாறு கேட்டாள்.

“ஒன்றுமில்லையே: சும்மா ஸிம்பிளாதான்... உனக்கு வேலை கிடைத்ததற்கு எனக்கு டிரீட்



கொடுக்காவிட்டாலும் நான் ட்ரீட் கொடுக்கிறேன்...” என்றார் பாச்சா. மேஜைமீது வைத்து இருந்த சக்கரைக் கோப்பையிலிருந்து சிறிது சக்கரையை அள்ளிப் போட்டுக் கொண்டே.

தங்கம் மெல்ல நகைத்தாள். “மாமா, நான் அந்தக் கம்பெனியில் வேலையில் இல்லை. ராஜினாமா செய்து விட்டேன்” என்றாள். பாச்சா திடுக்கிட்டார். ‘என்ன? ராஜினாமா செய்துவிட்டாயா? ஏன்? பிடிக்கவில்லையா? சம்பளம் தேவையில்லையா? மானேஜர் மார்க்கபந்து பொல்லாதவரா!” என்று கேட்டார்.

“இல்லை; மானேஜரைப் பற்றிய குறை ஏதுமில்லை. மானேஜர் ஆபீசுக்கே வரவில்லை. உதவி மானேஜர்தான் எல்லாம் கவனிக்கிறார். அது இல்லை விஷயம்” என்றாள் தங்கம்.

“மார்க்கபந்து வேலைக்கு வருவதில்லையா? உன்னை வேலைக்கு நியமித்தவர் அவர்தானே?”

“இல்லை! என்னை இன்டர்வியூ செய்தவரே உதவி மானேஜர்தான்” என்று கூறிய தங்கம், தான் வேலையை விடுவதற்குக் காரணத்தைச் சுருக்கமாகக் கூறினாள்.

“மாமா, உங்களை அம்மா கட்டாயம் வீட்டிற்கு வரச் சொன்னாள். இதோவிலாசம்” என்று கூறி விலாசத்தை எழுதிக் கொடுத்தாள்.

பாச்சாவின் சிந்தனை மிகவும் வேகமாக வேலை செய்தது. ஹோட்டலிலிருந்து வெளியே வந்த பிறகு தங்கத்திடம் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய அடுத்த திட்டத்தை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தலானார். அப்போது அவரை ஒட்டினாற்போல் பெரிய கார் ஒன்று வந்து நின்றது. காரிலிருந்து சுந்தரமூர்த்தி வெளியே எட்டிப் பார்த்து, “மிஸ்டர் பாச்சா! ஒரு நிமிஷம் உங்களுடன் பேச வேண்டும்... முடியுமா?” என்று கேட்டார்.

பாச்சாவினால் நம்ப முடியவில்லை. சுந்தர மூர்த்தியை அவருடைய ஆபீஸில் போய்ச் சந்திக்க விரும்பினார் பாச்சா: சுந்தரமூர்த்தியே வந்துவிட்டார். தன்னுடன் பேச வேண்டும் என்கிறார். என்ன யோக காலம்!

பாச்சா பிகுவை விட்டுக் கொடுத்து விடுவாரா? "ஸார், எனக்கு இப்போது அவசர வேலை இருக்கிறது. என் பெண் கல்யாணத்தை நிச்சயம் செய்து விட்டேன். இன்னும் ஒரு வாரம் கூட இல்லை. இதற்கு அலைவதற்கே சரியாக இருக்கிறது..." என்று இழுத்தார். சுந்தரமூர்த்தியோடு அவருக்கு அதிகப் பழக்கமில்லை. ஆனால் பல வருடங்களுக்கு முன்பு சுந்தரமூர்த்தி சைக்கிளில் சுற்றிய காலத்தில் இவனும் சுற்றியிருக்கிறான்.

"அவசரமாக நான் பேச வேண்டும். எப்போது பேசலாம் ஒரு ஐந்து நிமிஷம். என்னை நினைவு இருக்கிறதல்லவா?" என்று கேட்டார் சுந்தரமூர்த்தி.

பாச்சா காவிப்பல் தெரிய, பல்லை இளித்தபடி "என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள், தங்களைத் தெரியாதவர்கள் இருக்க முடியுமோ? நானே வருகிறேன் எங்கே வரச் சொல்கிறீர்கள்? வருகிறேன்..." என்றார்.

"நீங்கள் எங்கே இருப்பீர்கள்? சொல்லுங்கள் நான் காரை அனுப்புகிறேன்" என்ற கேட்டார் சுந்தரமூர்த்தி.

பாச்சா சற்று யோசித்தார். சந்திராவின் விலாசத்தைக் கொடுத்துக் காரை அங்கு இன்னும் ஒரு மணி நேரத்தில் அனுப்புமாறு கூறினார். பாச்சா திட்டமிட்டுவிட்டார். தனது வெற்றிக்கு வழிதேடி கொண்டுவிட்டார்.

சந்திராவின் தாயார் பாச்சாவை ஆவலுடன் வரவேற்றார்கள். "காயா, பழமா?" என்று கேட்டாள். "இப்பொழுதுதான் உங்கள் வீட்டிற்குப் போய் விட்டு



வருகிறேன். கல்யாண ஏற்பாடெல்லாம் ஜரூராக உங்கள் சம்சாரம் செய்கிறாள்; சமையலுக்குத் திட்டங்களைச் சமையற்காரர் போட்டுக் கொண்டிருக்கிறார். நீங்கள் பெங்களூரிலிருந்து வரவில்லை என்று உங்கள் சம்சாரம் சொன்னாளே!" என்று மளமளவென்று பேசினாள் சந்திராவின் தாயார். ஆர்வத்தை அவளால் அடக்க முடியவில்லை.

"எல்லாம் பழம்தான் மாமி! ஆனால் அவ்வளவு சீக்கிரம் எல்லாம் மசிய வைத்துவிட முடிகிறதா? ரொம்பவும் பரபரப்பைக் காட்டிக் கொள்வதும் காரியத்தைக் கெடுத்துவிடுகிறது. நான் என்ன செய்தேன் தெரியுமா? நேரே வெள்ளிக் கடைக்குப் போய் ஒரு பெரிய வெள்ளித் தட்டு முந்நூறு ரூபாய்க்கு வாங்கி அதில் வாழைப்பழம், திராட்சை எல்லாவற்றையும் வைத்து மாப்பிள்ளையிடம் நீட்டினேன்..."

"எந்த மாப்பிள்ளையிடம்? உங்கள் பெண்ணுக்குப் பார்த்திருகிறீர்களே அவருக்கா?" என்று சந்திராவின் தாயார் கேட்டவுடன் திடுக்கிட்டார். ஆனால், அவள் வேறு எந்தவித எண்ணத்தையும் மனத்தில் வைத்துக் கொள்ளாமல் கேட்டிருக்கிறாள் என்பதை அறிந்து பாச்சா 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார்.

"என் மாப்பிள்ளை அதற்குள் இங்கே ஏன் வருகிறார்? எல்லாம் சந்திராவுக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளையைத்தான் சொல்கிறேன். வெள்ளித் தட்டில் பழங்களுடன் சென்றேனா. அவருக்கு ரொம்ப சந்தோஷம். காதும் காதும் வைத்ததுபோல் வந்த விஷயத்தைச் சொன்னேன். பெண்ணின் போட்டோவை அவர் கேட்டார். 'நான் என்ன செய்வேன்?' என்று பாச்சா பிரமாதமாகப் பேசியவுடன் சந்திராவின் தாயார் மயங்கிவிட்டாள்.

"ஆமாம் சந்திராவின் போட்டோவை உங்களிடம் கொடுத்து அனுப்ப மறந்துவிட்டேன். இப்போ என்ன

செய்வது? என் பிள்ளைகள் வருவதற்குள் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும். ஒருவராவது நான் சொல்வதைக் கேட்பதில்லை. என் அகத்துக் காரரும் நாளைக்கு என்று காலணா சேர்த்து வைக்காமல் எல்லாவற்றையும் செலவு செய்து விடுகிறார். அதனால்தான் நான் நமக்கென்று சொத்து சுதந்திரம் வேண்டும் என்பதற்காக இந்த வரனை முடிக்குமாறு உங்களிடம் சொன்னேன். போட்டோவைக் கொடுப்பதற்காக மறுபடியும் பெங்களூர் செல்லப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை, இல்லை. இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர் காரை இங்கே அனுப்புவார். நான் அதில்போய் அவரைச் சந்தித்து எல்லாம் முடிவு செய்து வந்து விடுகிறேன். சந்திரா போட்டோவைக் கொடுக்கவில்லை. இந்தக் காரியத்தை முடித்துவிட்டு நான் நாளை யிலிருந்து என் விஷயத்தைக் கவனிக்க வேண்டும். என் மனைவிக்கு ரொம்ப வருத்தம்" என்றார் பாச்சா.

"உங்கள் சம்சாரம் ரொம்ப நல்லவள். அவள் ஒரு நாளும் கோபிக்கமாட்டாள். என்ன உபசாரம் செய்து விட்டாள் போங்கோ! அவளைவிட அந்தச் சமையற்காரர் எதிர்த்த வீட்டில் இருப்பவராம், அவர் உபசாரம்தான் பிரமாதம். அவரையே சந்திரா கல்யாணத்திற்கும் ஏற்பாடு செய்து விடுங்கள். என்ன..." என்றாள் சந்திராவின் தாயார்.

"அவரையா, அந்த அழுக்கையா... நோ... நோ... இந்த வரன் எவ்வளவு டீஸண்ட்... பெரிய மனிதர்... எல்லாம் குட்லண்ட் ஓட்டலிலிருந்துதான் ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்பற்றிப் பிறகு பேசிக் கொள்வோம். சீக்கிரமாக சந்திராவின் போட்டோவைக் கொடுங்கள். கார் வந்துவிடும்...". என்றார். அவர் சொல்லி வாய் மூடும் முன்பாக வெளியே பெரிய படகு போன்ற கார் வந்து 'பீம் பீம்' என்ற ஒலியை எழுப்பியது. சந்திராவின் தாயார் வெளியே வந்து



பார்த்துப் பிரமித்துவிட்டாள். பாச்சாவின் சாமர்த்தி யத்தைக் கண்டு அவள் பிரமித்துப் போனாள்.

"பாச்சா... பாச்சா... நீங்கள் சொல்லியபடி கார் வந்துவிட்டது. உடனே போய் வெற்றிகரமாக திரும்பி வாருங்கள்..." என்று கூறி சந்திராவின் போட்டோவைக் கொடுத்தார்.

## 12

ருக்மணியின் கல்யாண ஏற்பாடுகள் விரைவாக நடைபெற்று வந்தன. கனகவல்லிக்கு உற்சாகம் தாங்கவில்லை என்றாலும், உள்ளூர ஏதோ ஒன்று அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. கல்யாணம் நல்லபடியா நடைபெற வேண்டும் என்று தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். மாப்பிள்ளை எப்படி இருப்பார், சம்பந்தி வீட்டார் எப்படி இருப்பார் என்பவை தெரியாமலேயே தன் கணவர் முடிவு செய்து வந்துவிட்டாரேயென்று கனகவல்லிக்குக் கவலை இல்லாமல் இல்லை. எனினும் கல்யணாச் செலவுக்காக நூறு நூறாகப் பணத்தை எடுத்துக் கொடுக்கும் தன் கணவர் நல்ல மாப்பிள்ளையை ஏற்பாடு செய்யாமல் இருந்திருக்க மாட்டார் என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

ருக்மிணிக்கு எதைப்பற்றியும் கவலை இல்லை. பெற்றோர்கள் என்ன சொல்கிறாரோ அதன்படி நடக்கக் கடமைப்பட்டவள் அவள். அதனால் தனக்கு வரப்போகும் மணாளனைப் பற்றிக் கவலைப்பட வில்லை. ஆனால் அவர்கள் வசிக்கும் காலனியில் உள்ள மற்றக் குடித்தனக்காரர்கள் அவளுடைய வரப்போகும் கணவரைப்பற்றி விசாரிக்கும் போது அவளால் ஒன்றுமே

சொல்ல முடியாத நிலை இருந்தது. அதன் பிறகுதான் அவள் தனிமையில் இருக்கும்போது சிந்திக்கலானாள்.

தன் கணவர் கிராப்பு வைத்துக் கொண்டிருப்பாரா? குடுமியா? எல்லோரையும் போல் 'பாண்ட்' போட்டுவாரா அல்லது சாதாரண வேஷ்டிதானா, கிராமத்திலிருப்பாரா? பட்டணத்துக்கு வருவாரா? என்றெல்லாம் அவளுள்ளத்தில் கற்பனை எண்ணங்கள் எழுந்தன.

"ருக்கு என்னம்மா யோசனையிலிருக்கிறாய்? இந்தா இதைக் கொஞ்சம் வாயில் போட்டுக் கொள்" என்று சமையற்காரர் சாரங்கபாணி ஸ்வீட் ஒன்றை இவன் கையில் கொடுத்தார். ருக்மிணி திடுக்கிட்டு எழுந்து மெல்ல அசட்டுச் சிரிப்புடன், "இது என்ன மாமா?" என்று கேட்டாள்.

"தெரியவில்லை. ஸ்வீட், தித்திப்பு பட்சணம், உன் கல்யாணத்திற்கு என்ன ஸ்வீட் போட வேண்டுமென்று உன் அப்பாவும் அம்மாவும் இன்னும் முடிவு செய்யவில்லை. நேற்று ஒரு கலியாணத்திற்கும் போகப் போவதாகச் சொல்லியிருந்தேனல்லவா? அங்கே நான் புதுவிதமான ஸ்வீட் ஒன்று செய்தேன். வரும்போது இரண்டு துண்டு கொண்டு வந்தேன். உனக்கு ஒன்று எங்காத்துக்கு ஒன்று" என்றார் சாரங்கபாணி.

ருக்மிணி அதை வாயில் போட்டுக் கொண்டே, "ரொம்ப நல்லாயிருக்கே மாமா! என் கல்யாணத்திற்கும் இதைப் போலவே செய்து விடுங்கள்" என்றாள். அப்போது பாச்சா சைக்கிளில் வேகமாக வந்து இறங்கினார்.

"ருக்கு என்ன சாப்பிடுகிறாய்?" என்று கேட்டார்.

"மாமா, கல்யாணத்தில், செய்த ஸ்வீட்டைக் கொடுத்தார்."



"கல்யாண வீட்டு ஸ்வீட்டா? அதை ஏனம்மா சாப்பிடுகிறாய்? ஏதாவது கண்ட மாவில் செய்திருப்பார்கள். அதைச் சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்துக் கொள்ளாதே. உனக்கு ஸ்வீட் சாப்பிட ஆசையிருந்தால் நான் பட்டணம் போய் சேட் கடையிலிருந்து வாங்கி வருவேனே. நேற்றுக் கூட மணிலால் சேட் கடையில் உட்கார்ந்திருந்தேன். புறப்படும் போது 'அய்யரே ஸ்வீட் பொட்டலம் எடுத்துப் போங்களேன்' என்றான். நான்தான் வேண்டாமென்று கூறி வந்து விட்டேன். உனக்கு ஸ்வீட் ஆசை என்றால் தினமும் ஒரு பொட்டலம் வாங்கி வருவேனே..." என்றார் பாச்சா.

இதைக்கேட்டுக் கொண்டே சாரங்கபாணி வந்தார். "எப்பொழுதும் நான் செய்யும் ஸ்வீட் உடம்புக்கு ஒன்றும் செய்யாது. தினமும சேட் கடையிலிருந்து வாங்கிவந்து ருக்குவுக்குத் தர நான் என்ன உம்மைப்போல் பணம் படைச்சவனா?" என்று மெல்லச் சிரித்துக் கொண்டே கூறினார்.

"அது கிடக்கட்டும் ஓய்! அவரவர்கள் முன் ஜன்மத்தில் செய்த பாவ புண்ணியப்படி தொழில் கிடைக்கிறது... ருக்கு கல்யாணத்திற்கு குட்லாண்ட்ஸ் ஓட்டலிலிருந்தே எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆசை. ரொம்ப நாள் எண்ணம். எனக்கென்ன உம்மைப்போல் குழந்தைகளா? ஒன்றே ஒன்று; அவளுக்குக் கல்யாணத்தை நன்றாகவே செய்ய ஆசை. ஆனால் ஆத்துலே அவ இருக்காளே அவளுக்கு உங்கள் சமையல்லே ரொம்ப நம்பிக்கை..."

சாரங்கபாணி சிரித்துக்கொண்டே, "அப்படியே செய்யுங்களேன் பாச்சா! உங்கள் ஆசையை நீங்களே ஏன் குறைத்துக் கொள்கிறீர்கள்? நானே போய் ஏற்பாடு செய்துவிட்டு வரட்டுமா?" என்று கேட்டார். கனகவல்லியே அதற்குள் வந்துவிட்டாள். தன் கணவரை விழுங்கி விடுபவள் போல் பார்த்து, "ரொம்ப

நன்றாயிருக்கிறது நீங்கள் செய்வதும், சொல்வதும், அவர் எவ்வளவு தூரம் உதவி செய்கிறார் என்பதை மறந்து விட்டீர்களா? நம் வீட்டிற்கே மூத்த சகோதரர்போல் இருந்து உதவி செய்கிறார். அதற்கு நீங்கள் கொடுக்கும் பரிசா இது? ஊர், பெயர் தெரியாமல் வரனை நிச்சயம் செய்து வந்தீர்கள்... கையிலே வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவதுபோல் சாரங்கபாணியின் மகன் ராசா மாதிரி இருப்பவனை விட்டுவிட்டு எங்கோ பார்த்திருக்கிறீர்கள். இப்போதும சமையலுக்கு குட்லாண்ட்ஸோ வெட்லாட்ண்ட்ஸோ என்கிறீர்கள்... நீங்கள் சொல்வது உங்களுக்கே நியாயமா இருந்தால் சொல்லுங்கள்" என்று விடுவிடுவென்று பேசினாள்.

சாரங்கபாணியும், பாச்சாவும் அசந்து விட்டார்கள். கனகவல்லி இவ்வாறு பேசுவாள் என்பதை ஒருவருமே நம்பவில்லை.

பாச்சா உள்ளே வந்தபோது கனகவல்லியைத் தனியே அழைத்து, "கனகம் என்ன அப்படி வெறி வந்தவள் போல் பேசிவிட்டாய்" என்று சமாதானம் சொல்ல முயன்றார்.

"ஆமாம்; நீங்களே யோசனை செய்து சொல்லுங்கள். எதிர்த்தவீட்டுச் சாரங்கபாணி மாமாவின் பிள்ளைக்கு என்ன குறைவு. அன்றைக்கு உங்களுக்கு நமஸ்காரம் செய்தானே. இலட்சணக் குறைவா? படிப்பில் குறைவா? வேலைதான் கிடைக்கவில்லையா? நாம் ஏன் மாமாவைக் கேட்டிருக்கக் கூடாது?" என்றாள் கனகவல்லி.

"எல்லாம் சரிதான்... என்ன இருந்தாலும் அவன் சமையற்காரர் பிள்ளைதானே. நான் பார்த்திருக்கும் இடம் எவ்வளவு உயர்ந்தது. பண்ணையாரே முன் நின்று நடத்துகிறார் என்றால் கசக்கிறதா! இனி நீ இதைப் பற்றிப் பேசாதே. நடக்க வேண்டியதைக் கவனி.



ஊர் உலகம் 'பாச்சா பாச்சா' என்று என் சாமர்த்தியத்தை மெச்சுகிறார்கள். இந்த வீட்டில் நீ மட்டும் என்னைக் குறைவாக எடை போடுகிறாய்" என்றார்.

கனகவல்லிக்கு அழுகை வந்துவிட்டது. தன் கணவரை அவள் ஒரு நாளும் குறைவாக நினைக்க வில்லை. அன்று சந்திராவின் தாயார் தேடி வந்து தன் கணவரைப் பற்றி உயர்வாகப் பேசும்போது பெருமையாகத்தான் இருந்தது; ஆனால் ருக்மணியின் கல்யாண விஷயமாக அவர் சரிவர நடக்கவில்லை என்பதுதான் அவளுடைய குறை.

"உங்களை ஒரு நாளும் நான் குறைவாக நினைக்க மாட்டேன். கணவனைத் தாழ்வாக நினைக்கும் எந்த மனைவியும் குடித்தனத்திற்கு லாயக்கற்றவள். முகூர்த்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறதே; இன்னும் செய்ய வேண்டிய காரியம் ஏராளமாக இருக்கிறதே என்ற கவலை எனக்கு. நான் தவறாக ஏதாவது சொல்லி யிருந்தால் என்னை மன்னிச்சிடுங்கோ" என்றாள் கனகவல்லி.

"அசடே, இதற்கு அழலாமோ? நீயும் நானும் ருக்மணியின் கல்யாணம் நன்றாக நடக்க வேண்டும் என்று நினைக்கிறோம். கல்யாண சத்திரம் ஏற்பாடாகி விட்டது. அழைப்பிதழ் அச்சடித்தாகி விட்டது. ஜவுளி வாங்கியாகி விட்டது. மாங்கல்யம் செய்யக் கொடுத்தாகிவிட்டது. மேளம், ஏற்பாடாகி விட்டது. சமையற்காரர் ஒன்றுக்குத்தான் உன் இஷ்டப்படி ஏற்பாடு. எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரிதான்" என்றார் பாச்சா.

"பிள்ளை வீட்டார் என்று வருகிறார்கள்? அவர்களுக்குப் போக வரச் செலவு யார் ஏற்றுக் கொள்கிறார்கள்?" என்று கேட்டாள் கனகவல்லி. பாச்சாவுக்கே அப்போது தான் நினைவு வந்தது. இன்னும் சம்பந்தியிடமிருந்து கடிதம் வரவில்லை

என்பது. இரண்டு கடிதம் எழுதிவிட்டார். அவர்களிடமிருந்து பதிலில்லை. மீண்டும் ஒரு தடவை நேரிடையே போய்விட்டு வந்தால் என்ன என்று தோன்றியது.

சந்திராவின் தாயாரிடமிருந்து மறைந்து இருக்க இரண்டு நாள் வெளியூர் போய்வருவதுதான் சரியென்று முடிவு செய்தார். அதன்படி மறுநாள் சம்பந்தி ஊரை நோக்கி யாருக்கும் சொல்லாமல் ரயிலேறி விட்டார்.

## 13

இரயிலில் செல்லும் போதுதான் பாச்சா அமைதியாக சிந்திக்க முடிந்தது. இவ்வளவு நாள் பொறுப்பில்லாமல் நடந்து வந்ததுபோல் இனியும் நடக்க முடியாது என்ற இக்கட்டான நிலை வந்துவிட்டது என்பதை உணர்ந்து விட்டார்.

தன் பெண் கல்யாணத்தைவிட சந்திராவின் கல்யாணத்தை முடித்து வைப்பது மிகவும் முக்கியமாகப் பட்டது. சுந்தரமூர்த்தி அன்று காரை அனுப்பி பாச்சாவைக் கூப்பிட்டு வரச் சொன்னார் அல்லவா? பாச்சாவுக்காக அவர் ஆவலுடன் காத்திருந்தார். தங்கத்துடன் பாச்சா அன்று ஓட்டலுக்குச் சென்றதையும், மிகவும் பழக்கப்பட்டவர்போல் பேசிக் கொண்டிருப்பதையும் சுந்தரமூர்த்தி கவனித்தார். தங்கம் காரியாலயத்தினின்று ராஜினாமா செய்துச் சென்று விட்டாள் என்ற செய்தி அவருக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்திருந்தது. அவளை மணம் புரிந்து கொள்கிறேன் என்று மரகதத்திடம் சென்று பெண் கேட்டதற்காக, மரகதம் தன் மகளை ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டாள் என்று எண்ணினார் சுந்தரமூர்த்தி. ஒரு வேளை தங்கம் தன்னை விரும்புவாள் என்ற எண்ணம் அவர் மனத்தில் இருந்தது.



அவளைச் சம்மதிக்க வைக்க பாச்சா உதவுவார் என்ற நம்பிக்கையுடன் பாச்சாவைச் சந்திக்க விரும்பினார். பாச்சாவை அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தெரியும். இப்பொழுது அவர் பெரிய முதலாளி. பாச்சாவை தன்வயப்படுத்திவிட முடியும் எனும் உறுதியுடன் அவரை அழைத்தார். பாச்சாவும் அவர் வீட்டிற்கு வந்தார்.

முதலில் இருவரும் சுற்றி வளைத்து உலக விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர். பாச்சாவுக்கு, அவர் என்ன கேட்கப் போகிறார் என்பது தெரியும். அதனால் அதற்குப் பதில் சொல்வதற்கு ஆயத்தமாக இருந்தார். கடைசியாக சுந்தரமூர்த்தி தங்கத்தைப் பற்றிக் கேட்டே விட்டார். தங்கத்தை எப்படியும் சம்மதிக்க வைக்கும் பொறுப்பு ஏற்றுக் கல்யாணத்தை நடத்தி வைத்தால் தக்க சன்மானம் தருவதாகவும் கூறினார்.

பாச்சா பளிச்சென்று பதில் கூறிவிட்டார். "ஸார், தங்கத்தை மறந்து விடுங்கள். எனக்கு எல்லா விவரமும் தெரியும். நான் அன்று ஹோட்டலில் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அந்தப் பெண்ணுக்குச் சம்மதமில்லை என்று தெரிகிறது. தானாகக் கனியாத பழத்தைத் தடிகொண்டு அடித்துக் கனியவைப்பது சரியல்ல என நினைக்கிறேன். அத்துடன் அந்தப் பெண்ணுக்கு வேறு யார்மேலாவது ஆசை இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு" என்றார்.

சுந்தரமூர்த்தி மௌனமாக இருந்தார். பிறகு "மிஸ்டர் பாச்சா! இளம் பெண்ணை மணக்க வேண்டும் என்ற பேராசை எனக்கில்லை. ஒரு காலத்தில் என்னால் அந்தக் குடும்பம் நொந்துபோனதென்ற அபக்யாதி இருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு. நானும் இதுவரையில் மீண்டும் கல்யாணம் செய்து கொள்ளாமல் காலத்தைக் கழித்து விட்டேன்.

இப்போது உண்மையிலேயே யாருக்காவது உதவ வேண்டும் எனும் துடிப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது என ஆஸ்தி முழுவதையும் ஆண்டு அனுபவிக்க எனக்கொரு வாரிசு வேண்டும். வேறு எங்காவது பெண் எடுத்துக் கல்யாணம் செய்வதற்குப் பதிலாக தங்கத் தையே மணந்து கொள்ளலாமே என்று நினைத்தேன். உம்மிடம் சொல்லி எப்படியாவது அவளைச் சம்மதிக்க வைக்க விரும்பினேன். நீர் முடியாது என்று கூறுகிறீர்கள்... ஹூம்...” என்று பெருமூச்சு விட்டார்.

பாச்சா தன் காரியத்தை மெல்ல நுழைக்க விரும்பினார். “மிஸ்டர் சுந்தரமூர்த்தி; நீங்கள் நினைப்பது மிகவும் நியாயம். ஆனால் அந்த அதிர்ஷ்டக் கட்டை தங்கம் வலியவரும் சீதேவியை உதைக்கிறதே. அது போகட்டும் ஸார்! தங்கத்தின் உயிர் சிநேகிதி தங்களைப் பல தடவை பார்த்திருக் கிறாள். உங்கள் ஆபீசில் வேலை வேண்டி அவளும் விண்ணப்பம் போட்டிருந்தாள். கிடைக்கவில்லை. உங்கள் உதவி மானேஜர் தங்கத்துக்கு வேலை கொடுத்து சந்திராவுக்கு இல்லை என்று கூறிவிட்டார். நல்ல குடும்பம். பெண் இலட்சணத்துக்குக் குறைவில்லை. இதோ போட்டோ கொண்டு வந்திருக்கிறேன் பாருங்கள். முடித்து விடலாம்” என்று சந்திராவின் போட்டோவை எடுத்துக் காட்டினார்.

சுந்தரமூர்த்தி போட்டோவைச் சிறிது நேரம் பார்த்தார். பிறகு அதை பாச்சாவிடமே திருப்பிக் கொடுத்தார்.

“என்றைக்கு நீங்கள் அவர்கள் வீட்டிற்கு வருகிறீர்கள். அவர்களது குணம், குடும்ப விவரம் அறிய வேண்டாமா?”

“எந்த வீட்டிற்கு?”

“அதுதான்; இப்பொழுது புகைப்படம் காட்டினேனே சந்திரா - அவள் வீட்டிற்கு...”



சுந்தரமூர்த்தி ஏதும் பதில் பேசவில்லை. அவரது சிந்தை முழுவதும் தங்கத்திடம் இருந்தது. அவர் ஏதோ யோசிப்பதைக் கண்ட பாச்சா, நாற்காலியை விட்டு எழுந்து, “ஒன்றும் யோசனை செய்ய வேண்டாம். மிஸ்டர் சுந்தரமூர்த்தி உங்கள் குணத்துக்கு ஏற்றவளாக இருப்பாள் சந்திரா. வெள்ளிக்கிழமையன்று வருகிறேன். என் பெண் கலியாணம் ஞாயிற்றுக்கிழமை. தாங்கள் அவசியம் வந்து நடத்தி வைக்க வேண்டும். என் பெண் கலியாணம் முடிந்த கையுடனேயே சந்திராவின் கலியாணத்தையும் முடித்துவிட எண்ணுகிறேன். என்ன சொல்கிறீர்கள்...” என்று கூறி துப்பாக்கி முனையை நீட்டுபவர்போல் கேட்டார்.

சுந்தரமூர்த்தி ஏதோ தலையசைத்தாரே தவிர அவர் மனம் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

பாச்சா அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார் மிகுந்த நம்பிக்கையுடன், எப்படியும் சுந்தரமூர்த்தியைச் சம்மதிக்க வைத்துவிட வேண்டும். இல்லாவிடில் சந்திராவின் தாயாரிடம் இரண்டாயிரம் ரூபாயைத் திருப்பித் தரவேண்டியிருக்குமே என்ற கவலை அவரைச் சூழ்ந்து கொண்டது.

ரயிலில் உட்கார்ந்து மிக அமைதியாகச் சிந்தித்த போது இரண்டு பெரும் ஈட்டி முனைகளிலிருந்து அவர் தப்ப வேண்டியிருப்பது அவருக்குப் புலப்பட்டது. ஒன்று தன் மகள் கல்யாணம், இரண்டாவது சந்திராவுக்கு வரன் தேடித் தருவதாக இரண்டாயிரம் பெற்றுக் கொண்டது.

கிராமத்திற்குச் சென்று திரும்பிய பாச்சாவை அவன் தாயார், மனைவி, பெண் மூவரும் சூழ்ந்து கொண்டனர். பாச்சா வெளித் தோற்றத்திற்கு மிக உற்சாகமாகக் காணப்பட்டார். இன்னும் இரண்டு தடவை வெற்றிலையைப் போட்டுக் கொண்டார். தலையைப் படியப்படிய வாரிக்கொண்டு, கண்ணாடி

முன் நின்று மெல்லத் தன் உருவத்தைப் பார்த்து நகைத்தபடியே, "உங்கள் எல்லோருக்கும் ஒருவிதக் கவலை மனத்துக்குள்ளே ஏன் இருக்கிறது என்று தெரியவில்லை. நேரே கிராமத்திற்குப் போனேன். சம்பந்தியைப் பார்த்தேன். அவர்கள் சனிக்கிழமை காலை வண்டிக்குக் குடும்பத்துடன் வருகிறார்கள். எல்லாம் சௌகரியமாக நடக்கும். பண்ணையார் முன் நின்று அழைத்து வருகிறார். ரயில் சார்ஜுக்கு இருநூறு ரூபாயைக் கொடுத்து வந்திருக்கிறேன் போதுமா?" என்றார்.

பாச்சா கூறியதும், அவர் உற்சாகமாக இருப்பதும் எல்லோருக்கும் திருப்தியை அளித்தது. "ஏதோ, ருக்மணி கல்யாணம் நல்லபடியாக நடந்தால் சரிதான்" என்றாள் அவன் தாயார்.

"சம்பந்தி வீட்டில் எல்லோரும் எப்போ வருகிறார்களாம்?" என்று கேட்டுக்கொண்டே சாரங்கபாணி உள்ளே வந்தார்.

"சத்திரத்திற்கு வெள்ளிக்கிழமையன்றே எல்லா சாமான்களையும் எடுத்துப் போய்விடுகிறோம். ஸ்வீட் எல்லாம் வெள்ளிக்கிழமை ராத்திரியே செய்ய வேண்டும்" என்றார் சாரங்கபாணி.

பாச்சா மிகவும் உற்சாகமாக, "ஓய்! சாரங்கபாணி, சனிக்கிழமை காலையில் சம்பந்தி வீட்டார் வருகிறார்கள். ஸ்டேஷனிலேயே அவர்களுக்கு ஸ்ட்ராங் காபி கொடுத்து விட வேண்டும். பிறகு சாயங்காலம் பாதாம் அல்வா, ஓவல்டின், ராத்திரி மாப்பிள்ளை அழைத்த பிறகு ஒண்ணாம் நம்பர் விருந்து; ஆமாம்; நீர் என்ன இந்த அழுக்கு வேஷ்டியோடுதான் அங்கே நடமாடுவீரா. என் மானத்தை வாங்காதீர்கள் சாரங்கபாணி! பத்தாறு ஒரு ஜதை வாங்குகிறாயே, கனகம், இதை இப்போதே மாமாவிடம் கொடுத்து விடு. கல்யாணத்திற்கு ஜட்ஜுகள், பிரபல வக்கீல்கள்,



டாக்டர்கள் எல்லோரும் வருகிறார்கள். மிஸ்டர் சுந்தரமூர்த்தி தெரியுமா, சுந்தரமூர்த்தி அவர் இரண்டு நாளும் அங்கேயே இருப்பதாகக் கூறியிருக்கிறார். கொஞ்சம் நாகரிகமாக வாருங்கள் ஐயா. உம்முடைய சிஷ்ய கோடிகளையும் நன்றாக பளிச்சென்று உடை உடுத்தி வரச் சொல்லும்..." என்றார்.

சாரங்கபாணி ஏதும் பதிலே சொல்லாமல் நின்று கொண்டிருந்தார். கடைசியாக ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொன்னார்; "பாச்சா, ஸார், என்னால் உங்கள் கௌரவம் ஒருநாளும் குறையாது. மேலும் எந்த விதத்திலும் குழந்தை ருக்மணியின் கல்யாணத்திற்கும் பங்கம் நேராது" என்று.

கனகவல்லியின் கண்களில் நீர் தளும்பியது. பாச்சாவின் தாயாருக்கும் தன் மகன் இவ்வாறு பேசுவது பிடிக்கவில்லை. அவள் என்ன செய்வாள் பாவம்? கலியாண நாள் நெருங்கும்போது ஒருவரையும் ஒன்றும் கூறக் கூடாது என்ற மனப்பான்மையுடன் அமைதியாக இருந்தாள்.

## 14

தங்கம் சந்திராவின் வீட்டிற்கு அவசரம் அவசரமாக ஓடினாள். அவளுக்கு எப்படியோ செய்தி எட்டியிருந்தது. சந்திரா சுந்தரமூர்த்தியை மணந்து கொள்ளப் போவதாக. சுந்தரமூர்த்தியின் வீட்டில் சந்திராவின் போட்டோவைக் கண்ட கார் டிரைவர் தங்கத்தைச் சந்தித்துக் கூறினான்.

ராமமூர்த்திக்கும் தங்கத்திற்கும் காதல் வளர்ந்து வந்ததென்பதை நான் முன்பே சொல்லியிருக்க வேண்டும். இருவரும் தங்கள் காதலைப் புலப்படுத்தாமல் இருந்ததால் ஒருவருமே அறிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் இருவர் இதயமும் மௌன மொழியில் பேசிக் கொண்டன. மரகதமும் இதை

அறிந்தாள். ஆனால் சுந்தரமூர்த்தியின் கம்பெனியில் உதவி மானேஜராக இருப்பவர் தன் மகளை மணம் புரிந்து கொடுக்கச் சம்மதிக்கவில்லை. இதை எப்படிக் கூறுவது என்று புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தாள். எப்படியோ சூழ்நிலை வெகுவேகமாக மாறியது; தங்கத்தின் மீது சுந்தரமூர்த்திக்கு ஒரு கண் என்ற செய்தியை முதன் முதல் கூறியவன் ராமமூர்த்திதான்.

தங்கம் ராஜினாமா கொடுத்த பிறகு ராமமூர்த்தியும் தன் வேலையை ராஜினாமா செய்து விட்டான். அவனுக்கு வேறு கம்பெனியில் மானேஜர் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பு இருந்தது. ராஜினாமா கடிதத்துடன் சுந்தரமூர்த்தியின் வீட்டிற்குச் சென்றபோது சுந்தரமூர்த்தி திடுக்கிட்டு விட்டார். ராமமூர்த்தி இவ்வாறு செய்வான் என்று அவரால் நம்பவே முடியவில்லை.

"ராமமூர்த்தி நீ உன் விருப்பப்படியே இரண்டு காரியங்கள் செய்ய வேண்டும் என்று சற்று முன்புதான் முடிவு செய்தேன். நம் ஆபீசிலிருந்து ராஜினாமா செய்தாளே தங்கம் அவளை உனக்கு மணம் புரிந்து, உன்னை மானேஜர் பதவிக்கு உயர்த்தி, எனக்குப் பிறகு இந்தக் கம்பெனியின் என்பங்கை உங்கள் இருவருக்கும் கொடுத்துவிடத் திட்டமிட்டிருந்தேன்... நீ இப்படிச் செய்துவிட்டாயே" என்றார்.

ராமமூர்த்திக்குத் தலைசுற்றியது. எனினும் சமாளித்துக்கொண்டு, "உங்கள் விருப்பத்தில் ஒன்றை நான் நிறைவேற்ற முன்பே முடிவு செய்துவிட்டேன். அதனால் தான் நான் ராஜினாமா செய்துவிட்டேன். தங்கத்தை நான் காதலித்தேன். இப்பொழுது கல்யாணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன்" என்றார்.

சுந்தரமூர்த்தி துள்ளி எழுந்தார். "சபாஷ் ராமமூர்த்தி! பிறகு ஏன் ராஜினாமா செய்கிறாய். உடனே தங்கத்தின் தாயாரிடம் போய் சொல்லு" என்



எண்ணத்தை. நான் கலியாணம் செய்து கொண்டு விடுவேனோ என்று பயந்து கொண்டிருந்தாள். ஆனால் இன்று காலை பாச்சா என் கண்ணைத் திறந்தார். இதோ இந்த போட்டோவிலுள்ள பெண்ணை எனக்கு மணம் புரிவிக்கத் திட்டமிட்டு யோசனை கூறினார். ஆனால் அந்தப் பெண்ணே நேரிடையாக என்னிடம் வந்து என் கண்களைத் திறந்துவிட்டாள். "சரிதானே, போ இப்பொழுதே போய் உன் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய். ஆபீசில் தங்கத்தின் இடத்தை சந்திராவுக்குக் கொடுத்து 'அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்" அனுப்பிவிடு. அத்துடன் மிஸ்டர் பாச்சாவைச் சந்தித்து அவரிடம் இந்தக் கவரைக் கொண்டு கொடுத்து விடு. இரண்டாயிரம் ரூபாய் இதில் இருக்கிறது" என்றார்.

தங்கம் சந்திராவைச் சந்தித்தபோது சந்திரா முக மலர்ச்சியுடன் வரவேற்றாள். நடந்த விஷயங்களைக் கூறி, "மிஸ்டர் சுந்தரமூர்த்தியின் மனத்தை நான் மாற்றி விட்டேன். எல்லாம் பாச்சா மாமாவால் வந்த வினை. ஆனால், பாவம் அவரும் இந்த முடிவை எதிர்பார்த்திருக்க மாட்டார்" என்றாள்.

"பாச்சா மாமா வீட்டில் ஞாயிற்றுக்கிழமை கலியாண அழைப்பு வந்திருக்கிறது" என்றாள் தங்கம்.

"எனக்கும் வந்திருக்கிறது" என்றாள் சந்திரா.

"கலியாண அழைப்பு மட்டுமா, ஆபீஸ் அழைப்பும் இதோ வந்திருக்கிறது." "நாளை முதல் எங்கள் ஆபீஸில் உனக்கு வேலை கொடுக்கச் சொல்லி மானேஜிங் டைரக்டர் உத்தரவு" என்று கூறிக்கொண்டே ராமமூர்த்தி அங்கே நுழைந்தார். தங்கம் ராமமூர்த்தியை எதிர்பார்க்கவில்லை. சந்திராவும் தனக்கு வேலை கிடைக்கும் என்ற செய்தியை எதிர்பார்க்கவில்லை.

மூவரும் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தனர். பாச்சாவின் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று ராமமூர்த்தி கூறினார்.

"நாளைய தினம் மாப்பிள்ளை அழைப்பாம். அதற்குப் போய் அவருக்கு உதவியாக இருப்போமே" என்று தங்கம் கூறினாள்.

கலியாண வீடு கலகலப்பாக இருந்தது. மேளக் காரர்கள் வந்து விட்டனர். சமையற்கட்டிலிருந்து பட்சணங்கள் செய்யப்படும் மணம் புகையுடன் எழுந்து பரவியது. பட்டுப் புடவை சரசரக்கப் பெண்கள் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். இங்கொன்றும் அங்கொன்றுமாக உட்கார்ந்த சிலர் உப்புமா காபி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்ற சாரங்கபாணியும், பாச்சாவும் சோர்ந்த முகத்துடன் திரும்பினர். அவர்கள் எடுத்துச்சென்ற காபிக் கூஜா அப்படியே ஆறிப்போய்த் திரும்பி வந்தது.

"மாமா, சம்பந்தி வீட்டார் எங்கே?" என்று கனகம் சாரங்கபாணியைக் கேட்டாள். "இந்த வண்டியில் வரவில்லை. ஒரு வேளை மாலை வண்டியில் வருகிறார்களோ என்னவோ?" என்றார் சாரங்கபாணி.

பாச்சா கூடத்துக்கும் வாசலுக்கும் நடந்து கொண்டிருந்தார். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவுவதும் சமையற்கட்டிற்குச் சென்று "நுனி இலையைப் பார்த்து வெட்டுங்கள்" என்று கூறுவதுமாக இருந்தாரேயொழிய சம்பந்தி வீட்டார் ஏன் வரவில்லை என்று அவருக்குப் புரியவில்லை.

திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர் போல் வெளியே சென்றார். அவர் வெளியே சென்றபிறகு கனகத்திற்கு இருப்பே கொள்ளவில்லை. கலியாண வீட்டிற்கு ஊரிலிருந்து வண்டியில் யார்



யாரோ வந்த இறங்கிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு சமயமும் சம்பந்தி வீட்டார் தானென்று கனகம் பரபரப்புடன் வாசலுக்கு ஓடுவாள்.

சமையற்கட்டில் சாரங்கபாணியின் சீடர்கள் காய்கறியைத் தரம் பிரித்து இரவுச் சமையலுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

"ராத்திரி சாப்பாட்டிற்கு என்ன மெனு?" என்று சாரங்கபாணியை ஒரு துடிப்புள்ள சீடப்பிள்ளை கேட்டான்.

"எவ்வளவு பேருக்குச் சமையல். சம்பந்தி வீட்டாரில் யாராவது மற்ற சமையல்காரர்கள் இருக் கிறார்களோ?" என்று கேட்டான் ஒருவன்.

"சம்பந்தி வீட்டார் வந்த பிறகுதானேடா எவ்வளவு பேர் என்று சொல்ல முடியும். சம்பந்தி வீட்டார் ஏறிய ஸ்பெஷல் டிரெயினை சீர்காழியிலே கழற்றிவிட்டு விட்டார்களாம்" என்று ஒரு குறும்புக்கார சமையற்காரச் சீடன் கூறினான்.

"ஏண்டா பேய், பாச்சா மாமா வீட்டுச் சம்பந்திகள் என்று தெரிந்துமா ரெயில்வேகாரர்கள் இப்படிச் செய்து விட்டார்கள்?" என்றான் மற்றொரு மாஸ்டர்!

"அதனால்தான் ரெயில்வே மந்திரிக்குத் தந்தி அடிக்கப் பாச்சா போயிருக்கிறார் போலிருக்கிறது" என்றான் ஒருவன்.

அத்தனை பேரையும் சாரங்கபாணி ஓர் அதட்டல் போட்டு அடக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது ருக்மிணி எதோ காரியமாக அந்தப் பக்கம் வந்தாள். சமையற்கார இளம் வெட்டுக்கள் குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தனர். "ஏண்டா, இவள்தான் கலியாணப் பெண்ணா? ரதியாட்டமா இருக்கே. ஆனால் ஏனோ முகவாட்டம்" என்றான் ஒருவன்.

"என்ன செய்வது மாப்பிள்ளை இன்னும் வரவில்லையே" என்றான் மற்றொருவன்.

"உன்னைப் போன்ற மூன்றாம் பேஸ்துவுக்கு வாழ்க்கைப்படப் போவதால் அந்தப் பெண் வாட்டமாக இருக்கலாம்..." என்றான் ஒருவன், பால் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி.

"ஏண்டா, நம்ப தலைவர் வீட்டில் ராஜா வாட்டமாகப் பிள்ளையை வைத்துக் கொண்டு வேறு இடத்தில் பாச்சாவைப் பிள்ளைப் பார்க்கும்படி எப்படி அனுமதித்தார்?" என்றார் ஒருவர். அடுப்பில் விறகைச் சொருகிக் கொண்டு, தலைவர் என்றது சாரங்கபாணியை.

"ஏண்டா புத்திசாலி; இப்படி அசடு மாதிரிப் பேசுறியே. நம் உத்தியோகம் என்ன? கரண்டி ஆபீஸ் தானே, கரண்டி ஆபீஸ்காரன் பிள்ளைக்குப் பெண் கொடுக்கச் சற்று யோசனைதான் செய்வார்கள், பாச்சா சாதாரண ஆளா, பெரிய ஜித்தனாயிற்றே... அவரா சமையற்காரப் பிள்ளைக்குத் தன் பெண்ணைக் கொடுப்பார்?" என்றான் மற்றொருவன்.

பாச்சாவே அந்தப் பக்கம் வந்துவிட்டார். எல்லார் காதுகளிலும் படும்படியாக "பாவம் வண்டியைக் கோட்டைவிட்டு விட்டார்களாம். அடுத்த வண்டிக்கு வருவதாகத் தகவல் வந்திருக்கிறது. சாயங்காலம் எத்தனை மணிக்கு வண்டி வருகிறது?" என்று கூறி, அங்கிருந்த பரிசாரகர் ஒருவரைக் கேட்பதுபோல் கேட்டார்.

"எத்தனை மணி வண்டி ஸார்?" என்றான் ஒரு பிரஹஸ்பதி.

"அதுதாண்டா ஆறுமணி வண்டி."

"ஆறு மணிக்கு வரும்" என்று நகைச்சுவை உதிர்த்தான் ஒருவன்.



"ஆறரோ; ஆறரையோ மாப்பிள்ளையே நேரே கிருஷ்ணர் கோயிலுக்கு அழைத்து வந்து விடுங்கள்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

மாப்பிள்ளை அழைக்கும் திறந்த கார் "பாம் பாம்" என்று குரல் கொடுத்து வந்து விட்டது.

"மாப்பிள்ளைக்கார், மாப்பிள்ளைக்கார்" என்று சிறுவர்கள் கும்மாளமிட்டுக் கொண்டு ஓடினர்.

"ஏ, டிரைவர் கிருஷ்ணன் கோயிலுக்கு ஓட்டிப் போ! டேய் சீமாச்சு பத்து செண்டு பூ வாங்கிவரச் சொன்னேனே. அதைக் காரை அலங்கரிக்கக் கொடுத்தனுப்பு" என்று உத்திரவிட்ட வண்ணமாக இருந்தார்.

பகல் மறைந்தது. மாலை வந்தது. இரவு சூழ்ந்து கொண்டது. இரவு பறந்தது. இரவு மணி எட்டரைக்கு மேல் ஆகிக் கொண்டிருந்தது. இனி தெற்கே இருந்து வருவதற்கு டிரெயின் இல்லை. பாச்சாவின் முகத்தில் ஈயாடவில்லை. கொசுகூட அவர் அருகே வரவில்லை. ஒருவரோடொருவர் பேசவில்லை.

சாப்பாடு பந்தி நடந்து கொண்டிருந்தது. கோயிலுக்குச் சென்ற மாப்பிள்ளைக் கார் திரும்பி வந்தது. அதிலிருந்த குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் வழக்கம் போல் குஷி! கியாஸ் விளக்குகளைச் சுமந்து வந்தவர்கள் திரும்பவும் கல்யாண வீட்டை அடைந்தார்கள். காற்றடிக்காததால் அவை மங்கி எரியலாயின. எச்சில் இலைக்காக நாயுடன் மனிதர்கள் சிலர் ஏக்கமுடன் காத்திருந்தனர்.

"டேய் நீ எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பாய் சாப்பிடுடா. ஒருவேளை ஸ்பெஷல் காரில் வருகிறார்களோ என்னவோ" என்று பாச்சாவின் தாயார் தன் மகனைப் பரிவுடன் உபசரித்தாள்.

'ஹும்' என்ற பெருமூச்சு விட்டுக் கொண்டே எழுந்த பாச்சா, "இருக்கும், இருக்கும். அப்படியும்

இருக்கும் பண்ணையார் அழைத்து வந்தாலும் வருவார்" என்று வெளிக்குச் சொன்னாரேயொழிய உள்ளூர தாம் ஏமாந்து விட்டோமோ எனும் உணர்ச்சி மேலிட்டது.

கடிகார முள் யாருக்காவும் நிற்கவில்லை. கலியாண வீட்டுக் கூடத்தில் குழந்தைகள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சற்று வயது வந்தவர்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். சமையற்கட்டில் ஜரூராக சமையல் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலையில் இட்லி, சாம்பார், சட்டினி, பொங்கல், கொத்சு என்று விதவிதமாகத் தயாராயின.

சமையற்காரர்கள் கிசுகிசுத்தனர். சாரங்கபாணியின் காதில் விழாதவாறு பேசிக் கொண்டனர்.

"ஏண்டா, நாளை முகூர்த்த நேரத்திற்குள் மாப்பிள்ளை வீட்டார் வராவிட்டால் என்னடா செய்வது?" என்றான் ஒரு சீடப்பிள்ளை.

"அபிஷ்டு மாதிரி ஏண்டா பேசறே... மாப்பிள்ளை வீட்டார் வராவிடில் உன்னை மனையில் உட்கார வைத்தால் போச்சு" என்றான் அவனுடைய தோழன்.

"ஆகா: நல்லா உட்கார வைத்தாரே பாச்சா, சமையற்காரனுக்கா பெண்ணைக் கொடுப்பார்" என்றான் முதலில் பேசியவன்.

இரண்டாவது ஆள் மெல்லிய குரலில், "பாச்சா சாதாரண பேர் வழியில்லை தெரியுமா? சாயங்காலம் ஓர் அம்மாள் வந்து பாச்சாவுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தது. உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஒரு அம்மாளா? என்ன விஷயம்? ஏதாவது..."

"அப்படித் தோணலை. அந்த அம்மாளிடம் பணம் ஏதாவது வாங்கியிருப்பார் போலிருக்கிறது. தன் பெண் கல்யாணம் முடிந்தவுடன் முடித்து விடுவதாக அழாத குறையாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்



பாச்சா" - இதற்குள் சாரங்கபாணி அந்தப் பக்கம் வரவே எல்லோரும் 'கப்சிப்' ஆகிவிட்டனர்.

விடிகாலை: மங்கல நாதஸ்வரம் வாசிக்க நாகஸ்வரக்காரர் வந்து விட்டார். 'டண்டண்' என்ற மேள சப்தம் தூங்குபவர்களைத் துள்ளி எழச் செய்தது. கனகவல்லி இயந்திரம்போல எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தாள். பாச்சா, இன்னும் மாப்பிள்ளை வீட்டார் வருவார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருந்தார்.

ஒவ்வொருவராக கலியாண வீட்டிற்கு வந்து கொண்டிருந்தனர். பாச்சாவின் நண்பர்கள் ஒவ்வொரு வராக வந்தனர். இட்லி காபி சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து கொண்டனர். அதோ தங்கம் வருகிறாள்; சந்திரா வருகிறாள். எல்லோரும் கிசுகிசுவெனப் பேசிக் கொள்கின்றனர்.

கலியாண வீட்டில் ஒதுக்குப்புறமான இடம், பாச்சா கவலை தோய்ந்த உள்ளத்துடன் அமர்ந் திருந்தார். கனகவல்லி தாரை தாரையாய்க் கண்ணீர் பொழிய கணவர் எதிரே நின்று கொண்டிருந்தார்.

"இப்பொழுதாவது சொல்லுங்கள் மாப்பிள்ளை வீட்டார் வருவார்களா மாட்டார்களா? நிச்சயமாக வரனை ஏற்பாடு செய்தீர்களா? என் ஒரே பெண் கல்யாணம் இப்படி அவமானத்தில் முடிய வேண்டுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்... இன்று கல்யாணம் நின்றுவிட்டால் பிறகு ருக்குவுக்கு வரன் பார்க்க வருபவர்கள் அவள் துரதிர்ஷ்டத்தைச் சுட்டிக் காட்டியவாறு தானே இருப்பார்கள். உண்மையைச் சொல்லுங்கள். ஊரை ஏமாற்றுவது போல உங்கள் சொந்த மகளையும் மனைவியையும் ஏமாற்றாதீர்கள். என் இதயமே வெந்து விடுவதுபோல் தோன்றுகிறது.

நெஞ்சை அடைக்கிறது. அவமானம் தாங்காமல் உயிரை விட்டு விடலாமா என்று தோன்றுகிறது. இவ்வளவு நாட்கள் உங்களை எதைப் பற்றியும் கேட்கவில்லை. அன்று பதைபதைக்கும் வெயிலில் ஒரு கிழவர் வேதனையுடன் கூறிச் சென்ற வார்த்தைகள் என் காதில் இன்னும் ரீங்காரமிடுகின்றன. சொல்லுங் கள் பெருமாள் பேரால் ஆணையிட்டுக் கேட்கிறேன். சொல்லுங்கள் உண்மையில் வரன் பார்த்தீர்களா?" என்று கனகவல்லி கதறினாள்.

பாச்சாவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்ப் பெருகியது. மேளக்காரன் சஹானா ராகத்தை வாசித்துக் கொண்டிருந்தான்.

"கனகவல்லி! என்னை நம்பு. நிச்சயமாக நான் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்தேன். எனக்கு வரவேண்டிய தரகு கமிஷன் ரூபாயைப் பிள்ளை வீட்டாரிடம் கொடுக்கச் செய்தேன். இப்போது போய் பிரயாணச் செலவுக்கு என்று ரூபா கொடுத்து வந்தேன். என்னையும் ஏமாற்ற ஆளிருக்கிறார்கள் என்பதைச் சற்று முன்புதான் தெரிந்து கொண்டேன். அந்த மாப்பிள்ளைக்குக் கல்யாணம் இன்று வேறு முகூர்த்தத்தில் வேறு ஊரில் நடக்கிறதாம். என்னை ஏமாற்றி விட்டார்கள் கனகம், ஏமாற்றிவிட்டார்கள். நான் இப்போது என்ன செய்வேன்" என்று பாச்சா விம்மினார். கனகவல்லியும் விம்மினாள்.

"கல்யாண வீட்டில் யார் அழுவது" என்று கேட்டுக் கொண்டே சாரங்கபாணி அங்கே வந்தார் இருவர் நிலையையும் கண்டார்.

"ஓய், பாச்சா! ஏன் அழுகிறீர்கள்? சீக்கிரம் போய் தீர்த்தமாடும். கனகவல்லி மாமி - பெண்ணை அழைத்துக்கொண்டு மணைக்குச் செல்லுங்கள்" என்று சாரங்கபாணி கட்டளை இடுபவர் போல் கூறினார்.



"மாப்பிள்ளை?" என்று கேட்பவள்போல் கனகவல்லயும், பாச்சாவும் பார்த்தனர்.

"மாப்பிள்ளை வருகிறார் போங்கள்..." என்று துரிதப்படுத்தினார். பாச்சாவுக்கு அப்போதும் சிறு நைப்பாசை. ஒருவேளை தான் ஏற்பாடு செய்த மாப்பிள்ளையே வருகிறாரோ என்று சிறு ஆசை.

கனகம் விரைந்து சென்று ருக்மணியை சிங்காரித்துத் தயார் செய்தாள்.

"டேய் கோபாலா!" என்று அழைத்தார் சாரங்கபாணி. சமையல் வேலையில் கூடமாட எடுத்துக் கொடுக்கும் இளைஞன், "ஏன், மாமா" என்று ஓடி வந்தான்.

"உன்னை இல்லையடா... என் மகன் கோபாலன் எங்கேடா? அவனைக் கூப்பிட்டேன். அவனை எங்கிருந்தாலும் உடனே அழைத்துவா" என்று சாரங்கபாணி உத்தரவிட்டார்.

சா. கோபால் பி.காம். அடக்கவொடுக்கமாக வந்து நின்றான்.

"டேய், உடனே நீராடி, முகூர்த்த ஆடையை உடுத்திக் கொள்" என்று தன் மகனுக்கு உத்தரவிட்டார்.

முகூர்த்த மண்டபத்தில் எல்லோரும் அமைதியாக இருந்தனர். மேளக்காரர் போட்ட சத்தத்தில் மற்றவர் குரல் கேட்கவும் இல்லை. புரோகிதர்கள் உட்கார்ந் திருந்தனர். தலைமைப் புரோகிதர் பாச்சாவை நோக்கி எழுந்து சென்று, "என்ன பாச்சா, மாப்பிள்ளை வரப் போகிறாரா, இல்லையா? மாப்பிள்ளையின் தகப்பனார் எங்கே? முகூர்த்தத்திற்கு நாழியாகிறது. ஏன் இப்படித் தாமதம்?" என்று அழுத்தமாகவே பேசினார்.

"இதோ வந்துவிட்டார், மாப்பிள்ளை" என்று சாரங்கபாணி கூறினார். கோபாலன் மாப்பிள்ளை

அவதாரம் எடுத்து மனையில் உட்காருவான் என்று யாரும் எதிர்பார்க்கவே இல்லை.

"கெட்டி மேளம், கெட்டி மேளம்" என்ற சப்தம் எங்கும் ஸ்ரீ. சா. கோபாலன் பி.காம்., செள. ருக்மணிக்கு சுபயோக சுப வேளையில் திருமாங்கல்யம் அணிவித்து மூன்று முடிச்சுப் போட்டார். அட்சதைகள் அவர்கள் சிரசில் வந்து பொழிந்தன.

பாச்சாவின் கண்ணில் உண்மையில் அப்போது பொழிந்தது ஆனந்தக் கண்ணீரா அல்லது நிஜக் கண்ணீரா என்பது சொல்லி முடியாது.

"பரவாயில்லையே... உமது பெண்ணுக்குப் பெரிய உத்தியோக மாப்பிள்ளையை எப்படி பிடித்தீர்கள்" என்றார் - அப்போது அங்கு ஆசீர்வாதம் செய்ய வந்த சுந்தரமூர்த்தி,

"மாப்பிள்ளை பெரிய உத்தியோகம் தான் என்றாலும் சமையற்காரர்..." என்று சாரங்கபாணி கூறும்போது பாச்சா அவர் வாயைப் பொத்தி, "அப்படிச் சொல்லி என் மனத்தைப் புண்படுத்தாதீர்கள். ஏதோ அப்போது தவறாக நினைத்துக் கர்வத்தால் அழிந்தேன்..." என்றார் பாச்சா.

தங்கமும், ராமமூர்த்தியும் அங்குவந்து ஒரு கவரைக் கையில் கொடுத்தனர். அதில் ரூபாய் நோட்டுகள் இருந்தன.

சந்திராவின் தாயார் கூட்டத்தில் இடித்துப் பிடித்து வருவது தெரிந்தது. பாச்சா அந்தக் கவரை அப்படியே அந்த அம்மாள் கையில் கொடுத்து விட்டுக் கையெடுத்துக் கும்பிட்டார்.

'ருக்மணி கல்யாணம் வைபோகமே' என்று யாரோ பாடுவது கேட்டது.

முற்றும்.

முப்பது
ஆண்டுகள்
ஆகியிருக்கலாம்
நான் இந்தப்
புதினம் எழுதி,
இப்போது
படிக்கும்போது
அடுத்து என்ன
வென்று அறியும்
ஆவல், பரபரப்பு
ஏற்படுகின்றன.
பாவம் - பாச்சா.
எல்லாம் சுலபமாக
முடிய வேண்டும்
என்று வேண்டிக்
கொண்டு
எழுதி
இந்த

